KARMANDALA SATHAKAM

அவிநாசி

ஆறைகிழார்

இயற்றிய

கார் மண்டல சதகம்

காழி வித்வான்

திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்

இயற்றிய உரையுடன்.

PRINTED AT

THE IMPERIAL PRINTING WORKS,

23, DAVIDSON STREET,

(Near Broadway), MADRAS.

1930.

COPYRIGHT.

PRICE AS. 12.

O-,16MARQ1,K
N30

214716.

To

M. R. Ry. Koppiam

VENKATACHALA THIRUNARAYANA PILLAY

Avergal

IN GRATEFUL APPRECIATION OF HIS MUNIFICENCE
GOOD DEEDS AND VALUABLE SERVICES

(THE CHIEF CHARACTERISTICS OF A KARKATHA VELLALA)

THIS BOOK IS RESPECTFULLY DEDICATED

BY

THE COMMENTATOR & PUBLISHER

P. A. MUTHUTHANDAVAROYA PILLAY,

Tamil Vidwan, SHIYALI.

FOREWORD.

The *Karmandala Satakam* is a Tamil work which glorifies a section of the Velala Community known as the Karkattars, as the Tondaimandala, the Cholamandala, the Pandimandala and the Kongumandala Satakams glorify the other sections of it, the Tondaimandala Velalas, the Choliya Velalas, the Pandiya Velalas and the Kongu Velalas respectively. The work is an ancient one said to have been composed in the eleventh century. The author was undoubtedly a great Tamil scholar who was also deeply learned in Sanskrit. The work has been edited by the well-known savant of Shiyali, Mr. P. A. Muthutandavaraya Pillai, with a running commentary, additional notes, critical apparatus and the very learned excursus. The editor has brought to bear on his work all his varied learning and mature thought. The value of the commentary can best be seen when one attempts to read through the text only without its help. While the editor has earned the gratitude of the Tamil world by publishing the Satakam with a clear commentary, it is to be regretted that he did not keep to his original plan—indicated in the prospectus—of publishing a more elaborate commentary in 320 pages with 40 illustrations.

The origin of the Velalas is still a subject for investigation. For some centuries past they were regarded as Sudras, the fourth in the scale of castes. Even learned writers seem to have acquiesced in this view. It was in the last quarter of the last century that a change of thought set in, and they were elevated to the third caste.

About the same time, some students of Tamil propounded, on linguistic grounds, the theory that, as the Tamil language was independent of Sanskrit, the so Tamils were independent of the Aryas. The Velalas being Tamils were naturally regarded to be non-Aryas, and it was held to be improper to bring them within the pale of the four-caste system of the Aryas. This, however, remains to this day a theory only so far as the masses are concerned. There are others still in modern days who regard the Tamils as the Rajanyas of the Vedas who, though non-Aryas, were the spiritual instructors of the Aryas. The *Karmandala Satakam*, while it would make the Velalas Kshatriyas though at present fallen in condition, would not regard them as non-Aryas. It would thus appear that this subject of the origin of Velalas is a vast one which would offer ample scope to the talents of a research student of Tamil. Although it may be disputed that such a study will ever have any practical value, it cannot be denied that it will have considerable academic interest. To him the *Karamandala Satakam*, being perhaps the oldest of the Satakas glorifying the various Velala communities, with its excellent commentary, will be an invaluable aid.

TINNANUR,
17—1—1930.

S. ANAVARATAVINAYAKAM PILLAI,
M.A., L.T.

உ

கணபதி துணை.

கார்மண்டல சதகம்.

உரைப்பாயிரம்.

கார்மண்டலமென்பது அகரு, வழை, ஞெமை, ஆரம், ஞாழல், தாரம் முதலிய தருக்களாற் செவ்வி மணங் கமழ்ந்து பசுஞ் சோலைகளால் அழகு வாய்ந்த கரிய மலைகளின் மேகம் மழைநீர் சொரிய உயரிய நாடெனப் பொருள்படும். மலைநாடு என்னும் கேரள தேசம் தவிர, மலைமண்டலம் என வழங்கப்படுவது இதுவே இதனை நச்சினார்க்கினியர் (தொல் III. viii, 79) தமிழ்மண்டலம் நான்கனுள் ஒன்றென்பர். இஃது திருமூலர் (திருமந்திரம் 1646) தமிழ்மண்டலம் ஐந்தென்றவற்றுள் ஒன்றெனவும். பிறநூலுடையார் (சேக்-அநிபத், ச; வில்லி-திரௌ. 46) மண்டலம் பதினெட்டு என்றவற்றுள் ஒன்றெனவும் கற்றூர் கருதுவர். இது காவிரி நதியின் உற்பத்தி ஸ்தானமுதல் சோழநாட்டின் உய்யக் கொண்டான் வளநாடுவரை அந்நதி யிருபக்கமும் முப்பத்தாறாயிரம் சதுரமைல் விரவிய பரப்பினையுடையது.

ஆயினும் இது பலவரசர் காலத்துப் பல பரப்பினையுடையதாயிருந்தது. அதிபூர்வ காலத்தில் இதன் வடபாகத்தைப் பாண்டியவரசரும் தென்பாகத்தைச் சோழவரசரும் ஆண்டு வந்தனர். அப்பாண்டியருள் ஒருவர் மகளை அருச்சுனன் வேத விதிப்படி மணந்துகொண்டான். ஆங்கு ஆண்ட சோழவரசரில் இருபத்தெண்மர் சூரியகுலத்தவர்; எழுவர் இராதி குலத்தவர். இவருக்குப்பின் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இம்மண்டலத்தின் வடபகுதியை இருங்கோவேளிரும், கங்கரும், தென்பகுதியை அதிகரும் பரிபாலித்து வந்தனர். ஐந்தாம் நூற்றாண்டின் இடையில் இம்மண்டலத்துக்கு வடக்கே பல்லவரும் கடம்பரும், கிழக்கே வாணகோவரையரும் தொண்டையரும், தெற்கே கொங்

கரும் இருக்க, நடுப்பகுதி கங்க வரசரால் ஆளப்பட்டு வந்தது: எட்டாம் நூற்றுண்டின் இடையில் இதன் வடபாலே ராஷ்ட்ர கூடரும் வைவசையாரும் நுளம்பரும், கீழ்பாலே வைதும்பரும் பல்லவரும் வாணரும் தண்டகரும் புரந்து வந்தனர். பதினேராம் நூற்றுண்டில் இம்மண்டலத்தின் மத்திம பாகத்தை மும்முடிச் சோழமண்டலம் விக்கிரம சோழமண்டலம் நிகரிலி* சோழ மண்டலம் என மூன்று பிரிவாகப் பிரித்துச் சோழர் ஆண்டுவந்தனர். மண்டலம் என்னும் பிரிவு ஆந்திர மண்டலம் கலிங்க மண்டலம் என்பவைபோல் தொன்றுதொட்டு வந்த நிலப்பிரிவு. ஆயினும், ராஜராஜப் பெருஞ்சோழன் காலத்தில் அவன் நாமத்தால் வழங்குவதனைக்கொண்டு அக்காலத்தில்தான் இது பெரு வழக்கிலிருந்ததெனத் தோன்றுகின்றது. அவ் வளவன் தன் ஆளுகைக்குட்பட்ட பூமியை ஒன்பது * பிரிவாகப் பிரித்ததில் இக் கார்மண்டலம் முதல் நான்கு பிரிவை அடக்கிக்கொண்டிருந்தது. இந்நான்கு பிரிவிலிருந்த வேளாளர் ஏனைய ஐந்து பிரிவுகளிலும் சோழமண்டலத்தின் ஒன்பது வளநாடுகளிலும் †, கேரள பாண்

---

* சோழமண்டலம் ஒன்பதாவன :—மும்முடிச்சோழமண்டலம் (கங்கபாடிக்குத் தெற்கு), விக்கிரமசோழமண்டலம் (பங்களூருக்கு வடமேற்கு), நிகரிலிசோழமண்டலம் (சேலம் ஜில்லாவின் வடபாகம்), இரட்டைபாடிகொண்ட சோழமண்டலம் (மைசூருக்கு வடக்கு) விஜயராஜேந்திர சோழமண்டலம் (கோலார் ஜில்லா), ஜயங்கொண்ட சோழமண்டலம் (தொண்டைநாடு), ராஜராஜ மண்டலம் (பாண்டி நாடு), அதிராஜராஜ மண்டலம் (சேலத்தின் தென்பாகமும் கோயமுத்தூரும் அடங்கிய கொங்கு நாடு), கங்கைகொண்ட சோழமண்டலம் (வட சர்க்காரில் ஒரு பகுதி) ஆகும்.

† சோழ வளநாடு ஒன்பதாவன :—ராஜேந்திரசிங்க வளநாடு (வடவெள்ளாறு முதல் காவிரிவரை), உய்யக்கொண்டான் வளநாடு (காவிரி-அரிசில்), க்ஷத்திரியசிகாமணி வளநாடு (அரிசில்-வடகடுவாய்), அருண்மொழித்தேவன் வளநாடு (வடகடுவாய்-தென்கடுவாய்), பாண்டிய குலாந்தகன் வளநாடு (தென்கடுவாய்-தென்வெள்ளாறு), நித்திய விநோதன் வளநாடு (ஆலூர்-நல்லூர்), ராஜாசிரய வளநாடு (கருவூர்-பாச்சில்-அன்பில்-லால்குடி), கேரளாந்தக வளநாடு (உறையூர்-கருவூர்), ராஜராஜ வளநாடு (எஞ்சிய பகுதி) என்பன. இவ்வெல்லை சில காலத்து மாறியதும் உண்டு.

டிய மண்டலங்களிலும் ஆங்குள்ள ஏனைய வேளாளரிடையே ‡ வசிந்து வந்தனர். இவர்கள் காலத்து அரசியல் முறை ¶ தமது நாட்டைப் பன்னிரண்டு பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு கிராமங்களையும் பன்னிரண்டு காணியாட்சியாகப் பரிபாலித்து வந்ததொரு சிறந்த முறை.

இக்கார்மண்டலத்தைப்பற்றிப் பாடிய இச்சதகம் தொண்டைமண்டல சதகத்தையும், சோழமண்டல சதகத்தையும், பாண்டிமண்டல சதகத்தையும், கொங்குமண்டல சதகத்தையும், ஈழமண்டல சதகத்தையும் போன்று நூறு செய்யுட்களால் அமைந்து கார்காத்த வேளாளரது பழைய வரலாற்றையும் பழக்க வழக்கங்களையும் பெருமைகளையும் மண்டலச் சிறப்பையும் இவர்க்குரிய தசாங்கத்தையும் இவர் உட்பிரிவையும் சைவ வைஷ்ணவ சமயப் பற்றையும் பாஷை வரலாற்றையும் நூல்களையும் இவருள் முற்காலத்து வள்ளல்களாகவும் புலவர்களாகவும் ஞானிகளாகவும்

---

‡ வேளாளர் நாடுகளாவன:—தொண்டைமண்டலத்தார் (கீழ்நாடு சச-மேல்நாடு உஅ), பாண்டிமண்டலத்தார் (மதுரையாராகிய செழியபாண்டியர், மதுரையின் தென்பாகத்து வழுதியர், வடபாகத்து மாறர், குமரியின் சேர்ப்பர், குமரியின் தென்பாகத்துத் தென்னவர் ஆக ஐவர்), சோழமண்டலத்தார் (திருவயோத்தி முதல் கங்கையமுனைகூடல் வரையுள்ள பிரதிஷ்டானத்து மாலோர் நீங்க), சம்பாபதியின் கேசவர், கருவூரின் சூரியர் சேய்ஞலூரின் செம்பியர், புகாரின் சோழர், உறையூரின் சென்னியர், பொன்னியின் வளவர், குடவாயிற் கிள்ளியர், நேரியின் நேரியர், ஆரூரின் அபய குந்தர் ஆக ஒன்பதின்மர்), சேரமண்டலத்தார் (பூழியர் உதியர் கொங்கர் உள்ளிட்ட தொண்டியோர், பொறையர் வானவர் குட்டுவர் வில்லவர் குடநாடர் உள்ளிட்ட கொல்லிவஞ்சியர், கோதையர் சேரலர் சேரர் கேரளர் பொருநையர் மலையர் உள்ளிட்ட மகந்தை மகோதையர் ஆக மூவர்). இம்மண்டலக்குடிப் பெயரோடு நிலப்பெயரால் இருநூற்றிருபத்து நான்கு கோத்திரங்கள் வழங்குகின்றன.

¶ அரசியல் அரசராலும், பெருங்குழுவினர் என்னும் ஆலோசனைச் சங்கத்தாராலும், பத்துப் பிரகிருதிகள் அடங்கிய நிருவாக சங்கத்தாராலும் நடத்தப்படும். துவாதச காணிமுறை தேசத்தை மண்டலமுதல் தனியூர் வரைப் பன்னிரண்டு பகுதியாகப் பிரித்து அவ்வப் பகுதிகள் தனித்துத் துரைத்தனத்தை நடத்திவர, ஊர்களிற் கரணர் முதல் வெட்கோவர் வரைப் பன்னிருவர் குடித்தன காரியங்களை நடத்திவரும் ஒழுங்கு.

இருந்தோரது பிரபாவத்தையும் இவர்தம் அரசாட்சி முறையை யும் இவர் ஆதரித்துவந்த கலை வித்தையையும் கார்காத்த வேளாண் மகளிரது குணச்சிறப்பையும் தருமத்தையும் விசேஷ லக்ஷணத் தையும் அம்மகளிர் அரசியல் ஆயத்துச் சேர்ந்து காரியம் புரிந்து வந்த திறத்தையும் எடுத்துக் கூறுவது. இம்மண்டலத்துப் பெருங் குழுவினர் கங்கைகுலத்துக் காராளர் எனவும் கார்காத்த வேளா ளர் எனவும் காரைக்காட்டார் எனவும் பெயர்பெற்று விளங்குவர். இந்நாட்டில் உழுதுண்பாரும், உழுவித்துண்பாரும், பிறமண்டலங் களுக்கும் பிறகுடிகளுக்கும் முற்காலத்துத் தலைவராயினரும் இவரே. இன்னோர் வரலாற்றையறிதல் இந்நாட்டின் பழஞ்சரி தத்தின் ஒரு பகுதியை யறிவதாகும்.

இந்நூலை ஆக்கியோர் கொங்கு வேளாளரும் வைதிகசைவரும் ஆகிய அவிநாசி ஆறைகிழார் என்பார் (கி.பி. 1025—1070). இவரது ஆசிரியர் திருநாராயணபுரத்துக் கார்காத்த வேளாளரும் பரம வைஷ்ணவரும் ஆகிய மாதவயோகி. இது சூத்திரம்போலப் பொருளைச் செறித்து ஆக்கப்பட்டிருக்கிறது. உத்தமதானபுரம் பிரமஸ்ரீ மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர் களும், சேதுசமஸ்தான வித்வான்கள் பிரமஸ்ரீ ரா. ராக வையங்கார் அவர்களும், பிரமஸ்ரீ. மு. இராகவையங்கார் அவர்களும் மற்றும் பிரபல கிரந்த கர்த்தர்களும் இயற்றிய சிறந்த தமிழ் ஆங்கில நூல்களை ஆதாரமாகக்கொண்டு, சில குறிப் புக்களுடன் இதற்குப் பொழிப்புரை யெழுதியிருக்கின்றேன். இந்நூலிற் கண்ட பிராசீன சரித்திரங்களையும் சாசன சர்ச்சையை யும் மல்லேசுவரம் பிரக்கத விமர்ச விசக்ஷண ராவ்பஹதூர், பிரமஸ்ரீ R. நரசிம்மாசாரியா ரவர்களிடமிருந்து அறிந்து அவற் றிற் சிலவற்றை இதனுள் வெளியிட்டிருக்கின்றேன். இந்நூல் ஒரியைபு பெற வமைந்திருப்பதனால் இதற்கு உரை எழுதல் எனக் குச் சுலபசாத்தியமாயிற்று. விஷய சூசிகையை நுண்ணிதி னாராய்ந்து பிற விஷயங்களை விரித்து அறிந்து கொள்ளுதல் பெரியோர் கடமையாகும். என்னுரையிற் பல குற்றம் விரவி யிருப்ப தியல்பாதலின் பேரறிஞர் குற்றங் களைந்து குணத்தைப் பெரிதும் பாராட்டுதல் வேண்டும் என்பது என் வேண்டு கோள். எஞ்சிய உரைப்பாயிர விவரங்கள் சூசனத்துட் காட்டப் பட்டிருக்கின்றன..

இந்நூல் அச்சேறுங் காலத்தில் எனக்கு உதவிபுரிந்த சீகாழி ம-ள-ள-ஸ்ரீ சிவ. கண்ணுசாமிப்பிள்ளை B.A., அவர்களுக்கும், சென்னை ம-ள-ள-ஸ்ரீ மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களுக்கும், இந்நூல் விரைவில் வெளிவரல் வேண்டுமென்னும் விருப்பத் துடன் பலவாறு எனக்கு ஊக்கமளித்த சீகாழி ம-ள-ள-ஸ்ரீ S. சதாசிவ முதலியாரவர்களுக்கும், நின்னனூர் ம-ள-ள-ஸ்ரீ S. அனவரதவிநாயகம் பிள்ளை M.A.,L.T., அவர்களுக்கும், சீகாழி வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ N. இரத்தினசபாபதிப் பிள்ளை B.A., அவர்களுக்கும் என் ஹிருதய பூர்வகமான வந்தனத்தைச் செலுத் துகின்றேன். யாவர்க்கும் மங்களம் உண்டாகுக.

ஸ்ரீகாழி,
11-11-29.

இங்ஙனம்
ப. அ. முத்துத்தாண்டவராயன்.

EXCURSUS.

"Love, Modesty, Beneficence, benignant Grace,
With Truth, are pillars five of perfect virtue's resting place."

The history of evolution is virtually the co-ordination of humanistic studies. Its history, being co-eval with creation, is divisible into two broad heads, the history of the living and that of the non-living. To the branch dealing with non-living creation belong sciences such as history of cosmos (Astronomy), history of earth (Geology), and history of matter (Mineralogy and Chemistry). The history of the living falls into two main divisions according to scientific analysis *viz.*, the objective and the subjective, the former relating to impressions of the five senses and the latter to the emotions of the heart. An examination into the objective side of creation opens to our view two principal gateways *viz.*, non-human and human. Passing through the former, we reach the interesting realms of study such as the history of vegetation (Palæobotany and Botany) and the history of animals (Palæontology and Natural History). Through the latter we get to a wider range of study with subjects such as (i) Embryology and Genealogy, (ii) Ethnology, Anthropology and Archaeology, (iii) Chronology and Historiography —the last of which is infinite in extent with its five-fold labyrinths *viz.*, Epos (emotional), Annals (anecdotal), Chronicles (causal), Sources (documentary) and Movements (synthetic).

The history of living creation could be classified under three chief divisions, Revelation, Tradition and Sublimation. To understand the significance of Revelation, it is essential to make a comparative study of religion and ethics To ensure and obtain a satisfactory knowledge of Comparative Religion and Ethics, one should get deep into the text with the aid of Exegesis, analyse truths (corpus) with the help of Art and Rituals through a comparative knowledge of Mythology and Morals, and search after truth (quest), as gleaned from Dogmatics and Comparative Theology.

Tradition gives an insight into the law and government of a country codified in books on Jurisprudence and Governance. Such

books have Society, Government and State as their themes and deal with them at length. Turning to the section on the composition of Society, we find that they have as their subject matter Theocratic, Humanistic, Cosmopolitan and Comparative Sociology. In treating about the Government, the several forms such as Autocratic (or monarchic), Oligarchic, Aristocratic, Bureaucratic and Democratic are clearly dwelt upon. Comparative Economics is also given a prominent place therein. In the evoution of state the various stages of growth from tribal to national and international politics are expatiated upon.

Sublimation that forms the third division of the subjective aspect of the history of evolution comprises the study of Art and Philosophy which could be effectively made only after a study of comparative aesthetics and philosophy.

So then, the true history of a community consists in constructing the details concerning it on the lines laid down above. A verdict pronounced in the light of historical criticism is alone valid.

True it is that according to the view of the Geologists, our earth was peopled with various tribes since man saw the light of day. Should we refer to books beginning with Embryology down to other kindred sciences about mankind in general, we shall find that all of them point to the same conclusion.

In surveying the history of mankind in the past, the one fact, that stands in bold relief is that in the process of migration from one country to another, communities underwent marvellous changes in their manners and customs and metamorphosed also in their physical build as well as moral conduct. Though the Aryans of both the north and the south had a common culture and civilisation, their customs and rituals differed widely. Some of the Aryans of the north that migrated to the regions still further north assimilated the civilisation of the original inhabitants therein and effected a happy change in their minds and morals. When the Aryans of the farthest north set foot on the north Indian soil again, they were found to have lost their ancient culture and imbibed that of the original inhabitants of the farthest north.

Some historians believe that the Aryans of the farthest north with a graft civilisation to their credit are the true Aryans and the rest Dravidians. But judged according to the text of Manu (Ch.

X. 45.), the Aryans of the farthest north who derived their civilisation from their contact with the inhabitants of the far north and west of India should be called the Dasyus or Non-Aryans. Examined from the linguistic angle of vision, the language of the Aryans of the far north is an admixture of the best in Dravidian, Aryan and foreign tongues. It is wrong therefore to suppose from the affinity of the languages that the Aryans of the far north are the true Aryans of our land. Hence, when we read that the Aryan kings of the north fought with a race of Aryans from the farthest north and overcame them, we must understand that the pure Aryans did so with a view to preserving the purity of their race and culture.

Another mark by which the pure Ayans can be distinguished from the Vratyas is the difference in pronunciation—a feature derisively referred to by our ancients. To this school of Vratyas also belong the Buddhists and Jains (Manu X. 20.). These had honour and reverence from our forefathers so long as they were able to maintain their monastic order without any hindrance to other faiths. But with their increased interference in the social and political life of the Aryan Varnashramites, a strong defence against their threatened onslaught became necessary to preserve the purity of Aryan cult.

The reason for the low estimate set on the Aryans of the farthest north by our ancestors is not far to seek. Those Vratyas were supremely indifferent to the rituals laid down in Smrithi even though they chose to identify themselves with the Aryans of pure stock in the north. It was therefore a matter of dire necessity for the Aryans of the north to keep the purity of culture and race untainted by any external influence.

Of the two terms race and culture, what does race signify? Does it stand for the albuminoid clots, which according to geologists, are said to have come into being during the Laurentian Period? Does it relate to the man-forms that sprang into existence in the Miocene Period? Does it mean the typical divisions marked out by Anthropologists? Does it connote what Ethnographists term Nations or what Ethnologists term Peoples? Is Race tantamount to what the archaeologists call the primitive men—the authors of Cairn, Barrow, Kistwaens, Dolmen, Cromlech, etc., or the prehistoric men of the Palæolithic age developed through neolithic and iron

ages? Does race signify all these? In one sense it does when Anthropology is reckoned to be Natural History. Examining the relations of Anthropology with Ethnology in regard to the physical, physiological and pathological characteristics and taking cognisance of the relics of industries, the three-fold divisions of species, variety and race present themselves and offer a triple platform with ethnic, linguistic, and historical (traditional) basis as the planks whereon we stage our arguments and enact our drama of research.

In the light of the above points, the number of races in Asia, as a whole, has been computed to be thirty-five or twenty-seven types of which in India alone there are twelve races—Alpine to Sakas or seven types, viz. the Turko-Dravidian, the Indo-Aryan, the Scytho-Dravidian, the Aryo-Dravidian, the Mongolo-Dravidian, the Mongoloid and the Dravidian.

Man in Nature was divided by our ancestors into nine types, eighteen Ganas or tribes containing thirty-three classes. To understand the significance of this division, the relationship of monogenism, polygenism, transformation and selection and their application to man, his geneology and his place in nature should be studied with care. This involves a wide travel over the changes of life and habits, of food and climate and the training received by men during the different epochs of creation. A biological knowledge of the phenomena of direct and indirect adaptation with reference to the excess or abstinence of the use of organs will help towards understanding the causes leading up to changes in nature much better than even the study of the psycho-physical analysis of man. Many of the celebrated scholars also subscribe to this view.

Though the classification of our forefathers with regard to man in nature is true in so far as it relates to the material world, yet our illustrious ancients whose prime care was their spiritual being subordinated the consideration of tribes and brought them up under one culture. They knew the value of direct adaptation so well that they fostered the ideal of the unity of race through the magnetic influence of the unity of culture. The Aryans of various tribes were reared up under the charming influence of cultural unity. The word 'Aryan,' denotes that they had eightfold characteristics viz. the purity of stock, conduct, magnanimity, truthfulness, gratitude, charity, straightforwardness and candour.

(Vide the Uttara Rama Charitram of Bhavabhuti). The stock here means the then society of the tribes that could boast of the lofty ideal of the unity of culture.

What is culture? Just as tribes in our land are indigenous in their origin and growth so too is culture. Those that strongly believe that there is a spiritual world should get to know the three verities viz., Matter, Soul and God. With a view to attaining self-realisation or self-illumination of the soul, it is but meet that we sojourn in the sacred region of super-rationalistic philosophy with its fourteen radiant apartments of Vidyas that have inspired the four different schools of thought viz., Advaita, Visishtadvaita, Dvaita, and Saiva Siddhanta, to chalk out the three-fold paths to eternal bliss, namely Karma, Bhakti and Jnana. Taking these paths to be real culture, Vedantists try to perform the rituals connected with the *margas* specified above.

The cult of the Vratyas was purely a materialistic and rationalistic study. It is only the Aryans with their fire and water-cults who can lay claim to culture in its real sense. The rites according to the Aryan cult were so fashioned as to suit the varying conditions of the soul in its search after truth. This gradation and difference in rituals have given rise to different Varnas and Ashramas.

Caste (Jati) divisions originated for social and matrimonial purposes and comprise five trans-Vindhyan Gaudas and five cis-Vindhyan Dravidas with their sub-sections. Among the Velirs those kshatryas (Rajanyas) who have given up Vedic Karma and pursue the paths of Bhakti and Jnana—are called Vrishalas or Sunken Kshatryas or Vellalas. To prove that Vellalas in the Dravidian province were considered as the lofty ones, the Tholkappiyam, Sangam works and their commentaries which abound in a wealth of allusions may be cited. They were not Mlecchas. The manners and customs of the Vellalas do not at all conform with those of Mlecchas who are defined in the Brahma Vaivartha Purana (Brahmakanda ch. x slks 119-20.) Nor were they Non-Aryans. The profession of the Vellalas is far different from that of non-Aryan Pulindas, Kiratas and Kolars, and their character and conduct are in strict accordance with those of the highest classes mentioned in the Vedas, Agamas and Smrithis—a fact further exemplified in the Karmandala Satakam. Nor were they Antyajas (Atri Samhita slk. 195; Vyasa Samhita, 10-12.). The peculiarities

indicating lowness of birth as laid down in the Shastras are not to be found in the Vellalas. The Dravidian Kshatryas generally omitted the Vedic rites and their progeny descended to the level of Sat-Sudras (Asvamedha Parva ch. xxix 14-16; Parasurama Samhita.) In early times, Dravida Desa was the holy scene of Aryan rites where even a brahma rishi was allowed to travel without Punasthoma or Sarva-prathishta rites. Only in Kalinga Desa where a Vratya Choda happened to rule at the time of Arjuna's pilgrimage, those rites were enforced (Ref. Mahabharata and Manu). The waves of Jainism and Buddhism had very little effect in spheres of life other than that of letters and these two faiths were conquered by Saivaism and Vaishnavaism that became the prevailing religions of our country again. That the Vellalas had Aryan culture and influence is borne out by their Gotra, Sutra and Pravara. These are not, as some suppose, adapted but inherited and adapted to their religious faith.

Examined from the standpoint of internal evidence in literature and tradition, many of the appellations and titles which the Vellalas bear, positively prove the fact that they were the rulers. This is borne out by the term Velmals used for Queens and mothers of great Kings. Such dynasties as Chola Pallavas, Ganga Pallavas, Thonda Pallavas, Chalukya Cholas etc., owed the throne to their descent from maternal grandfathers through Velmals. As republics have the name of Velpulams, tribes like Mazhavar, Oliar and Maladar, besides Thinais and small Provinces were ruled over by Vellalars. The latter also functioned as military heads, ministers etc. Therefore then, the Rajanyas of the Rig-Veda

---

References connected with the findings supra.

Manu x, 43-44, Kulluka Bhatta, Medatiti, Parasara iii : Manu x 20, 57-59, ix; Atri Samhita 195. Vyasa Samhita 10-12, Anusasanika Parva xxxv 17-18. Sabha Parva 1. 11; 16-21; xxxvii. Vishnu Purana 11; 3-15; Part iv. ch. 24 & 13; Kishkindha Kanda xxxix; Harivamsa xxxi 33-35; clx; xiv, 15-16. Adi Parva c-iv, 51-53. Bhagavata ix-xiii 19-23. Skanda xii, I, 8. Matsya ccl 17-19. Raghu Vamsa iv 63. Aswamedha xxix 14-16. Skanda Renuka xlvii. Santhi xli, Sabha 1. 11-16. Drona cxviii. iii I, 18-22 to 33; ii, 18-20, iv 3, 4; viii. 77; ix 77 to 85 etc. etc.

(Velirs) were only those defined above from whom alone kings were chosen and anointed (Parasara. Madhava p. 540). It was again the Velirs that had their initiation peculiar to Kshatryas, that acted up to the laws of Dharma mentioned in the sacred texts. That these Velirs were found in Greater India is testified to by Moriars of Chakravalagiri, that they were in northern India by Hahayar, that they dwelt in the Deccan by Chalukyas and that they lived in the South Indian Peninsula by Thondiyor etc. Refernce to the eighteen sections of the Vellalas will further bear out the truth of the statement. Among these, the MudhuVelirs are the Srotriars and the Vamba Velirs the Vratyas, because of their new faith (C.F. Vamba moriar: Vamba Vadugar etc.,) Lords of lands, the Vellalas obtained the proprietorship of the estate and with their increase in numbers played the role of traders in getting the land cultivated and making a livelihood thereof (தொல்-iii, IX-80-81). Besides all these, the affinity between Brahmans and Kshatryas both in social and political life could best be seen in Gotras and appellations revealed in our epics and Puranas.

How then, does the institution of Gotras help the unification of of Race and Culture sanctioned by our Eugenics ? The term Gotra denotes Kudi in Tamil (Roman: Genus) and it traces our lineage from a particular ancestor. A survey of the history of Gotras opens our eyes to the fact that unity of race and culture has been rendered possible not only through the element of consanguinity but also through initiations, upadesas, yagas and discipleship. The long unbroken line of male descent perpetuating a particular Gotra (உற்பத்திகுலீனர்) influenced the Gotra of another stock by marrying the only surviving daughter of theirs to a male of a different family and converted the husband and his progeny to the Gotra of the girl (சாமந்தகுலீனர்). Besides these two factors, adoption and other causes have linked all people together to the two types mentioned above (த்வ்யாமுஷ்யாயணர்). In tracing our ancestry to Rishis like Atri, seven in number, it is seen that there were other rishis also such as Bhrgu, Visvamitra, and Agastya. Jamadagni merges in Bhrgu and Angiras in Bharadwaja. Pulahar and Pulastyar were the disciples of Agastya. Marichi is included in Kasyapa. Tunaka, Maitraya and Mutkala are of Kshatriya origin. The Kshatriyas also have the Gotras of Manava, Ila and Prurava. Vaisyas have the Gotras of Balandana, Vatsapri and

Mangila. The Vellalas have their Gotras adopted from their Kshatriya descent. All their Vaidic rites are performed according to the Sutras (ritualistic manuals) pertaining to their Sakas and their Samaya Samskaras acccording to their Agamas During the Agamic rites (liturgical), they have their pravaram—a call or an invocation to Agni for the acceptance of their offering through their ancestor. But in matters temporal, a Vellala is named according to the land and the titular lords he is connected with. Though Gotras thus approximate to two hundred and thirty, yet a broader outlook of the question points to the conclusion that all Gotras owe their origin to one infinite cause and that all, in fine, belong to a common race and culture.

A peep into the pages of history tells us that Karkatha Vellalas were the landed aristocracy for many a generation beginning from Ikshvaku of the Solar race to Dhananjaya, his son Padmanabha, Dadika, Madhava I (103 A. D), Nethemarga (about 1000 A. D.) and that they bear the name of the land whose proprietorship they held (Vide Appendix). With regard to matrimony, Vellalas exclude marriage with those belonging to the same Gotra and consider the same to be Endogamy. They advocate the marriage between parties of different Gotras amongst Karkathars and reckon it to be akin to Exogamy.

Having had a glimpse into the past history of Gotras it is essential to find out the valuable contributions of our rishies like Agastya to the languages in India. The origin of languages defies one's powers of analysis. According to our metaphysics, it can perhaps be divided into two main shoots Vac and Varna, the one being inseparable from the other. Vac is the offspring of the vital organ which gives ideas and Varna the form of thoughts following in its train. Chavee observes :—"If we put the Semitic children and Indo-European children apart who had been taught by deaf mutes, we should find that the former would naturally speak a Semitic language and the latter an Aryan language." Thus, the type of the language is independent of the will of man and the inevitable product of his cerebral organisation.

The several tribes in Ancient India spoke various languages all inter-related to one another. With the influx of time Sanskrit and Tamil alone became prominent in the field. These twin languages should have had very many points in common at the

time of their birth. Of the basic Dravidian languages, Brahui, Khond and Kurukh of the northern group are almost out of touch to us. We are concerned with the southern group with its two principal currents viz. Canarese-Tamil and Telugu. The former branches off in twofold tributaries Canarese-parent and Old Tamil. The stream of Canarese-Tamil again divides itself into Modern Canarese, Tulu and Coorg. The other Old Tamil which is the popular languge in South India runs in threefold channels of Toda, Modern Tamil and Malayalam.

Taking the Dravidian language, in general, it is perhaps naturally allied to Turanian or Scythian group with Finnish or Ugrian family that has a special affinity to the Ostiak branch of it and accidentally related to the Indo-European family having the Celtic and Teutonic languages as its members. The native grammarians have shown that fifty-six and more languages sprang from Samskrita, Prakrita, Apabhramsa and Paisachaka.

It is evident from the foregoing observations that Vac and Varna as well as word and object are Nityadhishtanas having an eternal bond of union. We must now pass on to get an idea of the nature and form of letters and the history of their evolution. In perusing the documents available in history, it is found that scripts have undergone changes from time to time on account of commercial relations of India with other countries of the world. The northern (Kharoshti) and Southern Asoka characters of 250 B.C. are of Semitic origin. Brahmi Lipi of 800 B.C. passed for Vatteluttu. From the 6th to the 4th century B.C. of the Akhaemenian period, the influence of the Persian invasion brought in its train the Armaic character used by the Persian satraps. When India began to trade with Greece and Egypt, the Phoenecian Alphabet—the abridged form of hieroglyphics of the 4th dynasty, 4500 B.C. viz., the hieratic ideograph of the old kingdom of Egypt, simultaneously exerted its influence in our land and contributed its share towards modifying the forms of letters. In the 9th century A.D., Grantha and Tamil characters were found to agree essentially in their forms. Thus, in tracing the origin and growth of letters during different epochs of their history, Agamas and Silpa show clearly that the history of the written language could be classified under the following heads :—(1) Graphic or Hieroglyphic (உரு). (2) Nominal (பெயருணர்வு.) (3) Phonetic (தன்மையொலி) and (4)

Conception (தன்மையுணர்வின் முடிவு). Ref. (பிங்கலந்தை 2087 ; திவாகரம் 10; ஒலி பெயர் இலக்கணக் கொத்து. பக்கம் 11-12). This happily falls in line with the date fixed by western scholars of research.

Having had a bird's-eye view of our past from all standpoints the value of a publication of the type of ' Karmandala Satakam ' could best be realised. It treats of a civilised community that forms the backbone of our nation. Vellalars have contributed in no small measure towards the attainment of the highwater mark of civilisation which is revealed in the advancement of society and the development of the embellishing graces, administrative talents nobility and a spirit of social service both in men and women of our land. Truly, therefore, does the poet, felicitously observe,

A bold peasantry their country's pride
When once destroyed can n'er be supplied.

கார்மண்டல சதகம்

The Karmandala Cento.

பொருள் அட்டவணை—Contents.

I. பாயிரம்—Introduction.

(1) 1. விநாயகர் காப்பு—Adoration of Ganesa.

(2) 1. கடவுள் வாழ்த்து-ஹரிஹரர்—,, Harihara.

2. உமா பரமேசுவரர் —,, Siva and Uma.

3. இலக்குமி நாராயணர் —,, Vishnu and Lakshmi.

4. சரசுவதி மனோகரர் —,, Brahma and Saraswathi.

5. தருமம், அடியார், குரு — Invocation of Virtue and the assembly of the wise.

(3) 1. அவையடக்கம் — The author's apology.

II. நூல். Book, the subject matter of the work.

(1) 1. மண்டலச் சிறப்பு — A topographical description.
கார் மண்டலம் — Name—Kar Mandalam, its situation, area and boundaries; Natural divisions.

(2) 2. தசாங்கம் — Ten attributes, Royal Insignia.
மலை — Mountain. சையமலை—Sahyatri.

3. திருவேரகம் — Pushpagiri.

4. நந்தி மலை — Nandidrug etc.

5. யாறு — River. காவிரி — Kaveri etc.

6. காவிரி தீரம்—Kaveri Basin. பௌமியம்—Geological aspects.

7. நாடு—Lands, Territorial Organisation, Meteorology.

8. தாவரம்—Flora, Forest Trees ; Horticulture.
9. விளைபொருள்—Crops and Cultivations.
10. ஜீவப்பிராணி—Feræ naturæ, Domestic animals.
11. நகர்—A description of the City.
12. மாலை—Garlands.
13. பரி—Horse, Courser.
14. கரி—Elephant.
15. முரசு—Auspicious drums of conquest, gift and
16. கொடி—Banner. [wedding.
17. கோல்—Sceptre, Militia, Feudal Systems.
18. ஊர்—A description of the Towns.

(3) 19. குழுவினர் வகை—Ethnography. Vellalas and their classes.
20. உழவு—Occupation.
21. உழுதுண்டல் — Agricultural classes and their pursuits.
22. பணிசெய்வார்ப் பேணல்—How a Vellala encourages professional classes.
23. வாணிகம் புரிதல்—Commercial classes.
24. பிறகுடி யோம்பல்—How a Vellala supports aboriginal and primitive tribes.
25. ஆணைவழி நிற்றல்—How a Karala helps the other castemen.
26. வினைவலரையும், ஆதுலரையும் காத்தல்—How he assists Manual labourers, Artisans and Village menials, and Vagrants.

(4) 27. பூர்வசரிதை—History, Legendary period.
தமிழரசர் மூவர்—Three Tamil Kings.
28. சரிதம்—Historical period.
பதினெண்குடி வேளிர்—18 Velirs.
29. துவராபதி வேளிர்—Velir of Dwaraka.
30. ஐம்பெருங்குலம்—Five great clans.
31. இருகங்கர்—The two dynasties of the Gangas.
32. கங்கைகுலம்—The Ganga line.

33. வெளி நாட்டார், மலை நாட்டார்—The Gangas of Veli and Malai Nadus.
34. காங்கேயன்—Gangaya.
35–38. மேல்நாட்டுக் கங்கவரசர்—The Gangas of Malai Nadu.
39–44. வெளிநாட்டுக் கங்கவரசர்—The Gangas of Veli Nadu.
45–48. கங்கபாடி—Gangavadi. (கங்காவதி).
(5) 49–59. சமயநெறி—Religion.
(6) 60–65. மொழியும் நூலும்—Language and Literature
(7) 66–76. வள்ளல்களும் புலவரும்—Barons and Authors.
(8) 77–81. மடநல்லார் மாட்சி—Woman and Womanhood.
(9) 82–88. வேளாளர் சாமானிய தருமம்—Social customs and manners of Vellalas in general.
(10) 89–93. கார்காத்த வேளாளர் விசேஷ லக்ஷணம்—Chief characteristics of Karalas.
(11) 94–95. கலை வித்தை—Attainment of civilisation. Art and Industry, Stone monuments, Sculpture, Engraving, Wood carving, Inlaid works.
96. சங்கீதம், காலப்போக்கு—Music, Pastime, Sports.
97. தொழில்—Industrial art.
98. வர்த்தகம், வியாபாரம்—Trade and commerce. Wages and prices; coins.
99. அரசியல்—Administration.
(12) 100. வாழ்த்து—Benediction.

III. கார்மண்டலச் சிறப்பு—Dominion of Karmandala

(1) 1–6. மண்டலச் சீர்—The Physical aspects of the country.
(2) 7. குருபரன் வாழ்த்து — Ode on The Authors' Preceptor.
8. நூலாசிரியர் வாழ்த்து— ,, The Author.

ஆகச் செய்யுள் 115.

பூத பரம்பரை பொலிக.

கார்மண்டல சதகம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்
(vi)	3	the so	so the
(vii)	9	இதுவே	இதுவே.
,,	12	ஒன்றெனவும்.	ஒன்றெனவும்
(xv)	13	Ayans	Aryans
4	30	வருகாழி வார்	வருகாழிலார்
,,	32	மோட்சம் முதலிய	மோட்சம் என்னும்
10	16	சாவியிஞு	சாவியிஞு
,,	28	பாாக்கிரமங்களே	பாாக்கிரமங்களேப்
,,	30	சுற்றி	சுற்றி,
11	15	Uppper	Upper
18	27	யென்னுங்	என்னுங்
19	3	வருணத்தவரையும்	வருணத்தவரையும் இயல்புடைய மூவரையும்
,,	11	தருதல் என்னும்	தருதல் திருந்திய வொழுக்கம் என்னும்
22	8	வரியயர்ப்	வரியார்ப்
23	7	ஞானத்தின்	ஞானத்தின்
24	12	கங்காத்தன்	கங்காதத்தன்
25	22	ஸ்காந்தபுரம்	ஸ்கந்தபுரம்
,,	30	குஞர்நவன்	குஞர்நவன்
,,	33	,,	,,
27	2	புரிந்துப்	புரிந்து
28	23	புராணே	புராணே
31	9	மன்டலமே.	மண்டலமே.
32	9	சங்குசக்கா	சங்குசக்கா
37	27	மாசாத்தான்	மாசாத்தன்
39	22	மூவக்குமனின்	மூவக்குமெனின்

40	29	கல்வேட்டுக்களையும்	கல்வெட்டுக்களையும்
41	8	உரியவர்	உடையவர்
,,	10	முதவிய	முதலிய
,,	21	கூடல்	கூடுதல்
,,	27	தாரங்களாக	தாரங்களாகத்
42	18	குத்தி வயிற்	குததி வயிற்
,,	22	சாமுத்திரிகா	சாமுத்திரிக
,,	25	புடையவர்;	யுடையவர்;
45	3	கிராஹ்ய	கிருஹ்ய
,,	12	தகைநலமும்	தந்நலமும்
,,	23	உண்மை	உண்மை
52	16	பெருங்குடி	பெருங்குடிப்
53	24	நாகரீகத்திற்	நாகரிகத்திற்
,,	26	போல	போலப்

அபிதான விளக்கம்

4	23	மகனார்க்	மகனார்
,,	25	சீயாழி	சீகாழி
,,	34	வீட்சி	வீழ்ச்சி

பிறப்பொக்கு மெல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்

—திருக்குறள்

கணபதி துணை.

கார்மண்டல சதகம்.

I

1. விநாயகர் காப்பு.

கங்கைகுலந் தழைக்கவளர் காராளர் தம்மரபு
கடல்ஞா லத்துத்
திங்களெனக் கவினோங்கச் சித்திபுத்தி யிருபாலுந்
திகழ்ந்து தோன்றச்
செங்கதிர்விட் டெறிக்குஞ்சே யொளிகெழுவி மறைமுதலைச்
செறியக் காட்டுங்
கொங்கலர்தார்ப் பொலங்கடுக்கைக் கரிவதனக் குழவியடி
குறித்து வாழ்வாம்.

கங்கைகுலம் தழைத்தோங்கவும், கார்காத்த வேளாளரது மரபு கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தில் சந்திரனைப்போல் சிறந்து விளங்கவும், சித்தி புத்தி என்னும் இரண்டு தேவிமார் இருபக்கத்திலும் அழகுற்றுத் தோன்றிச், செம்மையாகிய கிரணங்களை விட்டுப் பிரகாசிக்கின்ற செவ்விய திருமேனி இலங்கி, வேதத்திற்கு மூலமாகிய பிரணவ சொரூபம் செறியக் காட்டிப், பொன்மயமான கொன்றையினது தேன் சொரியும் மலர்மாலையை அணிந்த யானைமுகத்துப் பிள்ளையாரது திருவடிகளைத் தியானித்து வாழ்வோமாக.

இஃது நூன் மங்கலம். அவிநாசி ஆறைகிழார் இந்நூலை வாசிப்போரது இதத்தின்பொருட்டு ஆனந்தரூபப் பிரணவப்பொருளினது யதார்த்த சொரூபத்தின் ஸ்மரணரூப மங்கலத்தைச் செய்கின்றார். மங்கலமாவது விக்கினத்துவம்ஸத்திற்கு அநுகூலமான வியாபாரம்; இக்கிரந்தத்தின் சமாப்திக்குப் பிரதிகூலபந்தகமாயுள்ள பாபநிவிருத்திக்கு உபயோகமுள்ள மனோவாக்குக் காயங்களின் கிரியை. அம்மங்கலம் வஸ்து நிர்த்தேசரூபம் ஆசீர்வாதரூபம் நமஸ்காரரூப மென்னும் பேதத்தால் மூன்று வகையாம். இவ்வகைகள் மூன்றும் இங்கே கூறப்பட்டன.

---

2. கடவுள் வாழ்த்து.

ஹரிஹரர்.

ஒருபாலி னுலகளந்த திருமாலா மரன்மற்று
மொருபா லாவ
னிருபாலு நிறந்தெரிய மாட்டோமென் றம்மையிசை
யிறைவன் றன்னை
யொருபாலி னரனென்று மற்றைப்பா ஞரணனு
மொருவ னென்றும்
வருபால ரெனப்பொய்கை வாய்மொழிந்த வரியரர்தாண்
மருவி வாழ்வாம். 1

ஒருபக்கத்தில் உலகங்களை அளந்த திருமாலாவார், மற்றை யொருபக்கத்தில் சிவபெருமானுவார், இருபக்கத்துத் திருமேனியின் நிறத்தை யாம் வேறுபடுத்து அறியமாட்டோம் என்று காரைக்காலம்மையார் புகழ்ந்து பாடிய பரமசிவத்தை யொருபக்கத்தில் அரனென்றும் மற்றொருபக்கத்தில் நாராயணனுகிய ஒப்பற்றவனென்றும் யாவரும் புகழுதற்குரிய தன்மையினர் என்று பொய்கையாழ்வார் துதித்தருளிய ஹரிஹர மூர்த்தியின் திருவடிமலர்களைச் சேர்ந்து வாழ்வோம்.

இக்கடவுள் வாழ்த்து நிர்க்குணவஸ்துவை ஹரிஹரர் என்னும் சகுணத் திருமேனியில் வைத்துத் துதித்தபடி. இத்திருமேனியே கார்காத்த வேளாளர் சகுண நிர்க்குண உபாசனைகளின் வழிபடுந் திருமேனி. சமயாதீதப் பழம்பொருளின் தன்மை இன்னபடி யென்று ஆன்றோர் திருவாக்கான் நிருபிக்கின்றார். ஹரிஹரர்களது ஏகத்துவம் பேதபரமன்று, சுபாவசித்தமே. இவரைப் பிரித்து உபாசிக்கினும் உபாசகர்களுக்குச் சமபயனே யாம். அந்நியத்தை நிந்திப்பதும் ஒன்றன் துதியின்பொருட்டே யாகும். இஃது உணர்ந்த பெரியார் ஏகத்துவ சொரூபத்தைத் துதிப்பர். (க)

உமாபரமேசுவரன்.

பொருவிலத் திமிர வினைத்திரள் சவட்டிப்
புரிந்தொரு பொருளினை யணைந்து
திருவருட் குரிய ராம்வகை நல்குஞ்
சிலம்பரை யன்குலப் பாவை
யிருநிலப் பாலர் தவப்பய னதுவா
வெழில்தா விழைந்திடத் தழுவி
யுரிமையுற் றோங்குஞ் சிவபரஞ் சுடரெம்
முளத்திடை யமர்தரத் தகுமால். 2

ஒப்பற்ற ஆணவம் மாயை கன்மம் என்று சொல்லப்படும் பாசக்கூட்டங்களைக் கழித்து விருப்பத்தோடும் பரசிவத்தைச் சார்ந்து திருவருளுக்கு உரியராகும்படி அனுக்கிரகிக்கின்ற மலையரசன் குலத்தில் திருவவதாரஞ் செய்த பார்வதி தேவியார் பெரிய பூபாலர்களது தவப்பயனால் அழகு விளங்க இடது பாகத்தைத் தழுவி உரிமையுற்று விளங்குகின்ற சிவபெருமான் நமது உள்ளக்கமலத்தில் வீற்றிருக்கத் தக்கவர்.

ஓராற்றாற் காராளருக்கு அன்னையோடு கூடிய அப்பராதலின் அம்மையப்பராகிய சிவபெருமானை உள்ளன்போடு அன்னார் துதித்தல் கடன் என்கின்றார். இத்துதிவயத்தவராவார் பரமப் பிராப்தியைப் பெற்றுய்தல் திண்ணம். பாசக்ஷயமும் சிவப்பேறும் அடையக் கருதுவார் தியானிக்கும் ஆற்றல் எடுத்துக் காட்டப்பட்டது. இதன்பின் இலக்குமிநாராயணர்க்கும் சரசுவதிமனோகரர்க்கும் துதிவகுத்துத் திரிமூர்த்திகளின் அபேதநிலை யுணர்த்தி அம்மூர்த்திகளுக்குத் தலைவராவார் இன்னாரென முன்னர்க் கூறினார். அவ்வச்சமயிகள் அவ்வம்மூர்த்தங்களையே துரியப் பொருளாகக் கொள்வர். (உ)

இலக்குமிநாராயணன்.

மலர்பொலி வதன மம்புய நயனம்
வரிச்சிலை யுறழ்தனி நுதனேர்
விலைதவிர் பவள வாயித ழலங்கல்
விழைதிருப் புணர்ந்தமை மார்பம்
வலம்புரி பொறுத்த வத்த முக் குறும்பின்
வலிகடி நிறத்தபொற் பாத
மிலகுறப் பூவின் கொழுநன்கா ராள
ரிதயமே குடிபுகுந் தனனால். 3

தாமரைமலர் போன்ற திருமுகமும், செந்தாமரைப் பூப்போன்ற கண்களும், வரிந்துகட்டிய வில்லைப்போன்ற ஒப்பற்ற நெற்றியும், விலையொப்பு இல்லாத பவளம்போன்ற வாயிதழும், விருப்பத்தோடு மாலையை யணிந்த திருமகள் சேர்ந்து அமைகின்ற திருமார்பும், பாஞ்சசன்னியம் என்னும் சங்கை ஏந்திய கரம் முதலான நான்கு கைகளும், காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று குறும்பையும் ஒழிக்கும் நல்ல நிறம் வாய்ந்த அழகிய பாதங்களும் விளங்கும்படி பூமிதேவியின் நாயகராகிய நாராயணமூர்த்தி கார்காத்த வேளாளர்களது இருதயமலரிற் குடிபுகுந்துள்ளார்.

காராளரது மூலபுருடராதலின் திருமாலின் திருவவயவச்சிறப்பு விவரிக்கப்பட்டது. ஸ்ரீ பூ நீளாதேவியரது பூரண கிருபைக்கும் பாத்திரர் பூபாலர் என்றபடி. சிருட்டி நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தி

யதீதம் என்னும் கலையினடங்கிய தத்துவபுவனங்களை முறையே பிரமா விஷ்ணு உருத்திரன் அனந்தன் சதாசிவனால் விரிப்பது. சதாசிவனை யதிட்டித்து நிற்கும் பரமசிவனே இவற்றிற்குக் காரணன். (ங)

சரசுவதிமனோகரன்.

தத்துவெண் டிரைசூழ் தராதலம் படைத்துத்
 தன்பத மாதவர் வழுத்தப்
பத்தியல் பதினெண் கலைக்கடல் தூய
 பார்வயின் வயங்குற வகுத்துப்
புத்தியு முத்தித் திறமதுங் காட்டிப்
 புரவலர் பொருணிலை கூட்டு
முத்தவெண் முறுவற் கலைமகள் கேள்வன்
 முனமெழுந் தருளுவ னெமக்கே. 4

மோதுகின்ற வெள்ளிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமியைப் படைத்துத் தனது பாததாமரையைப் பெருந்தவத்தோர் பணியப் பத்தி நெறி பொருந்திய பதினெட்டு வேள்மொழிகளாகிய கடல்போன்ற வித்தைகளைப் பரிசுத்தமுள்ள இந்நிலவுலகத்தில் என்றும் அழியாது விளங்கத் தோற்றுவித்துப் போக மோக்ஷங்களைக்காட்டி ராஜநீதி பொருளாதாரம் இவற்றைச் சேர்ப்பிக்கும் முத்துப்போன்ற வெண்பற்களையுடைய சரசுவதியின் நாயகராகிய பிரமதேவர் எமக்குமுன் தோன்றி அருள் செய்வார்.

பிரமசிருட்டியிற் பூபாலர் முன்னர்த் தோன்றி அப்பிரமதேவரது சிருட்டி முறைப்படி தாமும் சிருட்டிவன்மை பெற்றோராதலாலும், வேதச் சடங்குகளுக்கும் வேதமந்திரங்களுக்கும் உரியராகிய நற்குடிமாந்தர்களாதலானும், அஷ்டாதச வித்தைகளை அனவரதம் பயில்வோராதலானும் இம்மரபிற் பிரமாவை வியந்துரைக்கின்றார். மகாசங்காரத்தினின்றும் தோற்றுவிக்கும் முறையின் வளிதையின் சிருஷ்டி மேற்காட்டுதும். (ச)

தருமம் அடியார் குரு.

பெருகாழி வையக்குப் பேறறமே முதனான்கு
முருகாழி யுளத்திறையை யோர்வாரு மாகமத்தின்
முருகாழி மெய்யன்பான் முறைப்பேணு மெய்த்தவரும்
வருகாழி வார்பரவு மாதவருஞ் சரணெமக்கே. 5

பெருகிய கடல் சூழ்ந்த பூமிக்குப் பேறாகிய தருமம் அருத்தம் காமம் மோட்சம் முதலிய நான்கும், மிக்க அன்போடும் உருகி மனத்திற் கடவுளைத் தியானிப்பவரும், வேதாகமவழியே முதிர்ந்த மெய்யன்பின் முறைப்படி ஆண்டவனைத்தொழும் மெய்யடியார்களும், குற்றம் அடைதலில்லாத சாதுக்கள் துதிக்கும் மாதவகுருவும் எமக்குப் புகலிடமாவார்.

கந்தழி நிலையாகிய பரப்பிரம சொருபத்தைச் சிவபரஞ்சுடராகக் கருது வோர் இம்மூவர் வணக்கமும் செய்தல் ஆசாரம் என ஆன்றோ ரொழுக் கத்தை யவலம்பிக்கின்றார். எழுத்தறிவித்தவன் இறைவனுதலின் மாதவ யோகியை யீண்டு இறைவனுகவே கருதித் துதிக்கின்றார். இவ்வொழுக் கத்தைக் கடைப்பிடித்து வேளாளரும் தமது வித்தியாகுருவையும் ஞான குருவையும் தமக்கு உபகாரிகளாயினாரையும் இறைவனாகக் கருதுவர் என்ற சிறப்பொழுக்கங் காட்டியவாறு கண்டுகொள்க. (௫)

3. அவையடக்கம்.

அரும்பவிழ் நறுமல ரலங்க லாரணன்
கரும்புயல் கழலடி கலந்த பூவென
விரும்புகார் மண்டல வேந்தர் வீழ்குடி
வரும்புகழ் விளங்குமெம் மழலை மாற்றமே. 1

மொட்டுக்கள் விரியும் மணமுள்ள பூக்களால் தொடுத்த மாலையை அணிந்த நாராயணமூர்த்தியாகிய கரிய மேகம்போலும் திருமேனியை உடையவரது வீரக்கழலை யணிந்த கால்களால் அளக்கப்பட்டு அக்கால் களிற் செறிந்து விளங்கும் பூமியேபோல, யாவரும் விரும்பும் கார்மண்ட லத்து அரசர் விரும்பும் காராளரது கீர்த்தியால் அளக்கப்பட்டு அக்கீர்த்தி யிற் செறிந்து என் புன்கவி விளங்கும்.

இவ்வவையஞ்சு கிளவியில் பூபாலருக்கும் திருமாலுக்கும் உள்ள இயை புணர்த்தினார். திரிவிக்கிரமன் திருவடியில் திருந்தியது திரிலோகம் என் பதை இதிகாசங்களுட் காண்க. வேளாளர் புகழ் தம் கவிகளால் அளத்தற் கருமை கூறினார். இக்கவிகளின் விரிவால் அன்னோர் கருணையின் விரி வை யொருவாறு கணித்து அறியலாம். சில விருத்தாந்தங்களே இங்குப் படிப்பன, மற்றையவற்றை யிவற்றினின்றும் வருவித்துரைக்க. காப்புச் செய்யுள் ஒன்றும், கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஐந்தும், அவையடக்கம் ஒன்றும் ஆகச் செய்யு ளேழும் பாயிரம் என்க. (௧)

கடவுள் வாழ்த்து முற்றும்.

II

நூல்.

---

1. மண்டலச் சிறப்பு.

கார்மண்டலம்.

திருமணக் கும்பொழின் மால்வரை நாடெனச் சேர்ந்திரண்டாய்ப்
பொருநிரை யாரக் குடகடற் பல்லவம் போர்க்கடம்ப
மருமறை மாபலி வாணந் திருத்தொண்டை யக்கொங்குசீர்
வருமுறை சூழ வயங்குறுங் காராளர் மண்டலமே. 1

கார்மண்டலமானது திருமகள் பொலியும் பொழில் நாடென்றும் திருமால் விளங்கும் மலைநாடென்றும் இரண்டு பெரும்பிரிவினதாகி, மேற்கே மோதுகின்ற அலைகளால் முத்துக்களைச் சொரியும் குடகடலும், வடக்கே பல்லவ தேசமும் போர்த்தொழிலில் வல்ல கடம்ப தேசமும், கிழக்கே ஓதுதற்கு அரிய வேதங்களை உணர்ந்த மாபலிவாணர் தேசமும் சிறந்த தொண்டைநாடும், தெற்கே மகிமையுற்ற கொங்குதேசமும் சிறந்து விளங்க மத்தியில் நாயகமாகப் பொலியும்.

இஃது கார்மண்டலத்தின் சிறப்புக்கூறியது. கார்நாடெனவும் கருநாடகமெனவும் வழங்குதல் பெறும். கார் உயர்வு கருமை அழகு நெல் நீர் மேகம் எனப் பலபொருள் ஒரு சொல். இம்மண்டலத்துக்கு இத்துணைச் சிறப்பு அமைந்திருத்தலின் முன்னோர் இப்பெயர் வழங்கினர். சரித்திரங்களின் வழங்கும் மற்றைப்பெயர்களைப் பின்னர்க் கூறுவோம். இச்செய்யுளிற் கார்நாட்டின் இரண்டு பகுதியும் அதன் எல்லையும் கூறப்பட்டன. இதனால் இராச்சிய விஸ்தீரணமும் அவ்விராச்சியத்தின் பூருவ சரிதையும் ஆராய்ந்து கொள்ளல் வேண்டும். (க)

2. தசாங்கம்.

மலை.

தொளைத்த கரக்களி றுந்தும் பயோதரஞ் சூழ்ந்திலகி
யளக்கும் பெரும்புகழ் கும்போற் பவமுனி யன்றிருந்து
முளைக்குந் தமிழ்க்கும் புனற்கும் மறைக்கும் முதுவரம்பா
வளைக்கும் பொழிற்சையக் குத்தரங் காராளர் மண்டலமே. 2

துதிக்கையை யுடைய யானைகளைத் தள்ளும் மேகங்கள் சூழ்ந்து விளங்கி எவரும் மதிக்கத் தக்க பெரும்புகழைக் கொண்டதும், அகத்திய மகா முனிவர் முற்காலத்து வசித்துத் தந்த தமிழ்மொழிக்கும் காவிரியாற்றிற்கும் வேதத்திற்கும் பழைய வரம்பாகிச் சூழ்ந்த சோலைகளையுடையதுமாகிய குடகுமலை காராளர் மண்டலத்து உள்ளது.

இது முதற் பதினேழு கவிகள் கார்காத்த வேளாளரது தசாங்கம் கூறுவாராய் மூன்று கவிகளில் மலை கூறத்தொடங்குகின்றார். அவற்றின் மேற் கிரமமாக யாறு முதலிய வற்றையும் கூறும்முகத்தானே நாட்டின் வளமுங் கூறுதலை உய்த்து உணர்ந்துகொள்க. நகரவளமும் இப்பகுதியின் அந்தத்துரைக்கப்படும். தசாங்கமாவது ஓரினத்தார்க் குரிய பத்துறுப்பு. அவை மலை நதி நாடு நகர் மாலை பரி கரி முரசு கொடி கோல் என்பன. மண்டல மாந்தர் சிறப்பு தசாங்கத்தால் விளங்கு மாதலின் அதன்பின் இயைபுபற்றி இதனைக்கூறினர். இத்தசாங்கமுடையார் குழுவும் அவர் பூர்வசரிதையும் சமய நெறி முதலியவும் அடைவுபெற இயைபான் இந்நூலுள் அமைந்திருப்பதைக் கருதி யுணர்க. இவ்வியைபை யொருவாறு உரைப்பாயிரத்து விளக்கினும். (௨)

பிறைமுடிக் கண்ணிப் பெருமாட்டி தோன்றல் பிடிதழுவக்
கறையில் புளிஞர் குலக்கொடி தாவக் கவினியது
குறைவருஞ் சந்தகில் தாங்கிக் குலாஞ்சிகி கூய்வளஞ்சால்
மறைவரு மேரகக் கோத்திரங் காராளர் மண்டலமே. 3

குறைவற்ற சந்தனமும் அகிலும் உடையதாய்க் களிப்பினையுடைய மயில்கள் அகவி வளம் மிகுந்து வேதத்தின்கட் கூறப்படும் திருவேரகமலையானது கார்மண்டலத்தில் இளஞ்சந்திரனை முடியிற் சூடிய உமாதேவியின் புதல்வன் தெய்வயானையைத் தழுவிக் குற்றமற்ற வேடர் குலக்கொடியைத் தாங்கிக்கொண்டு நிற்க அழகு வாய்ந்தது.

மூன்று மலைகளை மாத்திரம் கூறினரேனும் மற்றை மலைகளையும் மலைத்தொடர்களையும் குன்றுகளையும் உபலக்ஷணங்களாற் கொள்க. இவ்வாறே யாறு முதலியவற்றிற்கும் கொள்ளுதல் சிறப்பு. சூசனத்துட் காட்டினும். திருவேரகம் மலை நாட்டகத்துத் திருப்பதி; இம்மலையைப் புஷ்பகிரி சுப்பிரமணியமென வழங்குப; தென்கன்னடம் உப்பினங்காடி தாலூகாவில் (12°41'N—75°36E. 5625 Ft.) இருசெங்குத்துக் கோடுகள் எருத்துத் திமிலுருவினவாகக் காணப்பெறும். சோழநாட்டிலுள்ள திருவேரகத்திற்கு (சுவாமி மலை) வெண்குன்று என்று பெயர் கூறுவர் அடியார்க்குநல்லார். புஷ்பகிரியேரகத்துள்ள சிவாலயத்துத் திருவண்ணாமலையிற் போலத் திருக்கார்த்திகை மஹோற்சவங் கொண்டாடப் பெறுங்காலை, 50000 மைசூர்க் காளைகள் கால்நடைச்சந்தையில் விற்கப்படுகின்றன. (௩)

தொண்டையும் பாலியும் மாகதர் நாடுந் தொழும்பெண்ணையும்
வண்டையுங் கொன்றையு மாத்தியு மேந்து வளமிக்குங்
கண்டையுஞ் சொல்லையுந் தேற்றுந் தெரிவையர் காமனெனும்
வண்டைய னந்தியெம் மான்வரை காராளர் மண்டலமே. 4

கற்கண்டு போலுஞ் சொல்லையுடைய மாதர் மன்மதன் எனத் தக்க வள்ளலாகிய வண்டையன் என்பான் போற்றித் துதித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் நந்திமலை காராளர் மண்டலத்தில் தொண்டைச் செடியையும் தேன்வண்டையும் கொன்றையையும் ஆத்தியையும் உடையதாய், பாலாற்றையும் பெண்ணையாற்றையும் தந்து தொண்டை நாட்டையும் மாகத நாட்டையும் செழிப்பிக்கும் வளம் வாய்ந்தது.

நந்திதுருக்கம் பாலாறு பெண்ணை நதிகளுக்கு உற்பத்திஸ்தானம். கலிங்கத்துப் பரணியிற் கண்ட கருணாகரத் தொண்டைமானது முன்னோனாகிய வண்டையர்கோன் நந்தித்தோன்றல் நந்தி மால்வரைக்கட் சிவபெருமானை வணங்கிப் பேறுபெற்றா னென்பது புராண வரலாறு. கார் மண்டலத்துத் தோன்றும் நதிகளே மற்றை மண்டலங்களின் புதுவருவாயை வளர்ப்பன வென்க. (௪)

யாறு.

நெடுமரங் கொன்று கடகரி மோதியங் நீள்கடம்பு
பொடிபடத் தூர்த்துப் புவன மெலாங்கொண்ட பூவைகண்டீர்
கடுவிளங் தோங்குங் களத்தவன் காழி களிக்கவெழீஇ
மடுவினின் மால்புணர் காவிரி காராளர் மண்டலமே. 5

விஷம்தோன்றி விளங்குங் கண்டத்தையுடைய சிவபெருமானது சீகாழி வளமுறுக் களிப்பினையடைய, ஆற்றிடை யரங்கத்தில் திருமால் வசிக்கப்பெற்ற காவிரியாறானது கார்மண்டலத்தே உதித்து நீண்ட மரங்களைச்சாடி மதயானைகளை மோதி நீண்ட கடம்பு தூளாகச் செய்து தூர்த்துத் திரிபுவனங்களையும் வெற்றி கொண்ட விஜயைபோல் விளங்கும்.

கார்மன்னர் வெற்றியை விஜயைமேல் வைத்துக் காவிரியால் விளக்கிக் காட்டினார். இஃது சிலேடை. இவ்வாறே நூலாசிரியர் ஆங்காங்குச் சூசிப்பதை யுய்த்துணர்க. காவிரியின் வரவு முதலியவை ஆக்கினேய ஸ்காந்த புராணங்களுட் கூறப்பட்டன. கவேரன் என்னும் ராஜருஷியின் புதல்வி. இந்நதியின் விசேடத்தையும் இதன் உபநதி ஹேமாவதியின் விருத்தாந்தத்தையும் Madras I, Provincial Series pp. 174—178ல் கண்டுகொள்க. (ரு)

பொன்னும் மணியுந் தருகுன்று மாதர் புணர்ந்துவப்பத்
துன்னும் பொழிலுங் கதிரிரண் டேறுத் துடவையுநூற்
பன்னும் புலவர் பரவிய பாக்கமும் பட்டினமும்
மன்னும் நிலப்பரப் பாயது காராளர் மண்டலமே. 6

அந்நதி பாயும் காராளர் மண்டலமானது பொன்னும் மணியும் தரு கின்ற குறிஞ்சிநிலமும், மாதர்கள் தம் கணவர்களோடு சேர்ந்து மகிழ விளங்குஞ் சோலைகளையுடைய முல்லைநிலமும், சூரிய சந்திரரும் வந்து சேருதற்கு இயலாத சோலைகளையுடைய பாலைநிலமும், கலைநூல் வல்ல புலவர் பாடும் பாக்கங்கள் செறிந்த மருதநிலமும், பட்டினங்களையுடைய நெய்தல் நிலமும் ஆகிய ஐந்திணைப் பரப்பாயுள்ளது.

'கோலமுல்லையுங் குறிஞ்சியு மடுத்தசில் லிடங்கள், நீலவாட்படை நீலி கோட்டங்களு நிரந்து, கானவேனிலிற் கடும்பகற் பொழுதினைப்பற்றிப், பாலையுஞ் சொலலாவன வுளபரன் முரம்பு' என்றவாறு பாலைத்திணையுங் கொள்ளப்பட்டது. பாக்கம் மருதநிலத் தூருமாம். பட்டினம் மேற்கடல் சார்புள்ளவை. கனிகளில் உப்பு மங்கனீசு மைகா பொட்டிலுப்பு கந்தகம் கற்கள் இரும்பு கரி பொன் காந்தம் கிராபைட்டு கோரண்டம் வைரம் முதலியனவும் சல்லியங்களாக எடுக்கப்படும். ஐந்திணைப் பரப்பின்கீழும் இச் சல்லியவளம் நிறைந்த பூமி இஃது என்றபடி. (சு)

நாடு.

தேந்துளி மேன்மலை நாடுநா லெட்டுச் செறிந்தநறு
மாந்துளிர் சோலைக் குணநாட தெட்டெட்டு மன்னயுத
ரேந்து முலைப்பெரு மாட்டி யிருபத மேத்துதலின்
மாந்துரு முப்புயல் நான்காகுங் காராளர் மண்டலமே. 7

தேன்சொரிகின்ற மேல்நாடாகிய மலைநாடு முப்பத்திரண்டு வளநாடாகவும், செறிந்த மணம் தங்கிய மாவின் இளந்தளிர்களையுடைய கீழ்நாடாகிய வெளிநாடு அறுபத்துநான்கு வளநாடாகவும் விளங்கி, அவற்றுள் விளங்கும் காராளர் தொண்ணூற்றாறுயிரவரும் உயர்ந்த தனபாரத்தையுடைய பார்வதிதேவியாரது உபயபாதங்களையும் எப்போதுந் துதித்துவருவதால், கடல்நீரைப் பருகி முழங்கிக்கொண்டு வரும் மேகங்கள் மணி நீர் பொன் பூவாகிய நான்கினையுமே காராளர் மண்டலத்திற் சொரிவனவாகும்.

மேல்நாடு முப்பத்திரண்டு வளநாடும் முப்பத்தீராயிரம் வேளாளர் குழுவையும், கீழ்நாடு அறுபத்துநான்கு வளநாடும் அறுபத்துநாலாயிரம் வேளாளர் குழுவையும் உடையன. ஆகக் கார்காத்த வேளாளர் தொண்ணூற்றாறாயிரவரென்ப. இவர் கார்காத்தாரெனப் பெயர் அடைதற்கு மேகத்தாற்

பல காரணம் இந்நூலுட் கூறப்படுதலின், இங்குச் சப்தமேகங்களுள் மண்ணையும் கல்லையும் தீயையும் பொழியும் துரோணம் காளாமுகி நீலவருணம் என்ற மூன்றனை யொழித்துச் சம்வர்த்தம் ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரித்தம் என்ற நான்கினையே உரைத்தார். (எ)

சுரிகுழல் விந்தை சுருதித் தவஞ்செய்து தோற்றமுள்ளி
விரிகட லாடைப் புடவி வகுக்க விரும்புபொழில்
புரிமணிக் காடும் புரந்தரன் றருவும் போன்றிலகி
வருபுனல் நீத்தம் மலிதருங் காராளர் மண்டலமே. 8

சுரிந்த கூந்தலையுடைய லளிதை வேதோக்தமான தவத்தைச்செய்து சிருஷ்டிசெய்யக் கருதி, விரிந்த கடலை ஆடையாக உடுத்த பார்மகளைப் படைக்க, யாவரும் விரும்பும் சோலைகள் செறிந்த இரத்தின வனத்தையும் கற்பக விருட்சத்தையும்போல விளக்கமுற்று நீர்ப்பிரவாகம் மலிந்தது காராளர் மண்டலம்.

இஃது இந்நாட்டின் படைப்புக்கு இதிகாசங் கூறுகின்றது. காஞ்சிப் புராணம் திருவேகம்பப்படலம் அ-கரு கவிகளை நோக்குக. (அ)

சண்டிகை யந்தரி சாமுண்டி தந்தருள் சாவியினு
லெண்டிசை யோனிய யாவும் புரப்பா னிமையவர்தாங்
கண்டுளங் கூரக் கலப்பை நுதிகொளுங் கைவளத்து
மண்டிய போகஞ் சமைப்பவர் காராளர் மண்டலமே. 9

தமது மண்டலத்து வாசஞ்செய்யும் காராளர்கள் உமாதேவியார் அளித்த நெல்விந்தைக்கொண்டு அஷ்ட திக்குகளிலுமுள்ள எல்லா ஜீவர்களையும் காத்தற்பொருட்டாகத் தேவர்கள் துதிக்கத் தங்கள் கலப்பை நுதியைப் பிடிக்குங் கைவளத்தினால் மிகுந்த போகத்தை விளைப்பார்கள்.

சண்டிகையாதிய திருநாமங்களைக் கூறினர் அந்நாட்டவர் இந்நாமத்தால் உமாதேவியைத் துதித்து வருதலின். படைப்பின்பின் இரட்சிப்பைக் கூறுதல் இன்றியமையாமையின், காத்தல்மேன்மை இவ்வேளாளர்மாட்டு அமைந்ததற்கு இதிகாசங் கூறினர். ஹலாயுதத்தைப் பலராமன்கொண்டு செய்த பராக்கிரமங்களை பாகவதத்துட் காண்க. உழுது பயிரிடற்கேற்ற நிலமும் ஆறும் ஏரியும் குளமும் ஊற்றும் மலையும் கணவாயும் கால்வாயும் அமைந்தது இந்நாடு. இந்நாட்டைச்சுற்றி பாரமஹால் விடப்பட்ட நாடு வடசர்க்கார் சேர சோழநாடுகள் கருமணற்கரை தக்ஷிணம் கலிங்கம் திரிலிங்கம் வேங்கி முதலிய பிரதேசங்களும் உளவாயினும் அவை இத்துணைச் சிறப்பிலவெனக் குறித்தவாறு. (க)

செழிபூங் கமலத் தனப்பேடு சாரச் செழுங்குயின்மா
விழுசூன் றடியிற் குயிலுவ முந்நிரை மேன்மிளிர்வ
கழிபே ருவகைக் கரியரி ணந்தழீஇக் கானளப்ப
வழிதீஞ் சுவைமுது வாய்விழுங் காராளர் மண்டலமே. 10

இனிய சுவையுடையதாய் வழிகின்ற தேன் சொல்லோரது வாயினிடத்து விழும் காராளர் மண்டலமானது செழுவிய தாமரை மலர்மேல் பெண்ணன்னம் பொருந்தி வாழ, நல்ல குயிற்பறவை மாந்தளிர்களைக் குடைந்து கோதி அடிமரத்திற் பாடுவன; பசு எருமை ஆடாகிய மூன்று நிரையும் தரையின்மேல் விளங்குவன; மிக்க மகிழ்ச்சியோடு யானைகள் மானினங்களோடு சேர்ந்து காடுகளில் வசிப்பனவாக விளங்கும்.

மூல தாவரங்களின் வளங் கூறவே உபலக்ஷணத்தால் தாதுப்பொருள்களையுங் கொள்க. இவை காத்தற்கு உபகாரணங்களாமாறு காண்க. அன்றியும் நில அமைப்பைத் தற்காலத்தவர் Archaean Group, Archaean plutonic rocks, Eparchaean interval, The Purana group, Lower Gondwanas, Uppper Gondwanas, Cretaceous beds, Cuddalore sandstone, Laterite, Cave deposits, Recent deposits எனப் பிரிப்பர். (௧௦)

நகர்.

தேசுரங் கொண்டார் புறநக ருண்ணகர் சேர்தகடூர்
பூசுர ராதியர் வேதா நெறியினர் பொற்பகலார்
காசினி யேனையர் பக்கமு மாண்புங் கடைப்பிடித்தார்
மாசற வாழிடங் கன்னலங் காராளர் மண்டலமே. 11

பிரமதேசசைத் தமக்குப் பலமாகக் கொண்டவர் வசிக்கும் தகடூரானது புறநகர் அகநகர் என்னும் பிரிவினையுடையதாய்ப் பிராமணர் முதலிய வருணத்தவர் பிரமதேவர் அருளிய வேத வொழுக்கத்தை விடாதவராகவும் மற்றைச் சாதியார் மற்றையோர் பக்கங்களையும் தகுதிகளையும் கடைப்பிடித்தவராகவும் குற்றமிலராய் வாழும் நகரமாகும் சிறப்பினை யுடையது காராளர் மண்டலம்.

இஃது தகடூரின் சிறப்பும் அதன் புறநகர் உண்ணகரின் அமைப்பும் அதன்கண் அமர்ந்த வருணங்களும் அவ்வருணத்தவர் ஒழுக்கமும் கூறும். தகடூர் அதிகன் தலைநகர். வாழ்க்கைக்குரிய இராசாங்கம் மக்கள் சுற்றம் பொன் மணி நெல் வாகனம் அடிமை என்னும் அஷ்ட ஐசுவரியமும் மிக்கது தகடூர் என்க. அமரர் முதலிய பதினெண் கணத்தவரும் விரும்பும் பதியாயினும் பிராமணர் முதலிய சாதுர்வருணஸ்தர் வாசஸ்தலமாதலின் அன்னோரிருப்பானே அந்நகர் சிறப்பித்துரைக்கப்பட்டது. அன்னோரும்

அவரவர் பக்கங்களான் விளங்கிய பெரியோர் என்பதனையும் விசேடித்துரைத்தார். பார்ப்பியல் முதலியவற்றைப் புறத்திணையியல் உ०-வது சூத்திரத்துட் காண்க. (காஞ்சி-நகரம்-க0உ-கக0). (கக)

மாலை.

பாத்திகழ் வேதப் பனுவற் றெரிந்துசெம் பங்கயத்துப்
பூத்திகழ் தொங்கன் மிலைந்தென்னை பெண்ணை புனைந்துமென்னை
சேத்திகழ் நம்பன் றிருவெழுத் தைந்தும் திகழுவிக்கும்
மாத்திகழ் செங்கழு நீர்மாலை காராளர் மண்டலமே. 12

இடபவாகனத்து விளங்குகின்ற பரமேசுரனது பஞ்சாக்கர மந்திரத்தை விளங்கச்செய்யும் செல்வம் நிறைந்த செங்கழுநீர் மாலையையே காராளர் தமது மண்டலத்து அணிவர். சந்தப் பாக்கள் செறிந்த வேத நூலைக் கற்றுச் செந்தாமரை மாலையைப் பூண்டு என்ன? பெண்ணை மாலையைப்பூண்டு என்ன?

அந்தணர் பெருமையும் அரசர் மாண்பும் காராளர் கைவலுத்தாற் பெருகும் என்பதைச் சூசிப்பித்தார். அந்தணர்க்குரிய மாலை தாமரை மலர் மாலை. தமிழ்நாட்டு மூவேந்தருள் முதற்கண் வைத்தெண்ணப்படும் சேரரது பனைமாலையைக்கூறி உபலக்ஷணத்தால் மற்றை மன்னரையும் வேளிரையும் உடன்றழீஇனர். அரசச்சின்னங்களாகிய முடி குடை கவரி தோட்டி முரசு சக்கரம் யானை கொடி மதில் தோரணம் நீர்க்குடம் மாலை சங்கு கடல் மகரம் ஆமை இணைக்கயல் சிங்கம் தீபம் இடபம் ஆசனங்களுட் சிறந்த மாலையின் வைத்துக் கூறினர். செங்கழுநீர்மாலை வேளாளர் சாதியடையாள மாலை. மற்றை மாலைகளையும் அவ்வவ் வரசவுரிமைகட் கேற்ப வேளாண் மாந்தர் அணிவர். (கஉ)

பரி.

கந்தம் விரிதருக் காவல னுந்துங் களிற்றினுக்கு
மந்தரி மானுக்கும் நம்பியா ரூரன்ற னும்பலுக்கு
முந்தும் மகோதைத் துரகத மானும் முரண்வலித்து
மந்தண மூட்டுச் சயந்தவங் காராளர் மண்டலமே. 13

காராளர் மண்டலத்துக் கடைதற்றொழிலமைந்த கடிவாளம் பூண்ட சயிந்தவம் என்னும் குதிரையானது மணம் விரியுங் கற்பகவிருக்ஷத்திற்குக் காவலனாகிய இந்திரன் செலுத்தும் ஐராவதத்திற்கும் காளிகாதேவியின் மானுக்கும் சுந்தரமூர்த்தி நாயனார் செலுத்திய யானைக்கும் முற்பட்டுச் செல்லும் மகோதை வேந்தரது குதிரையையொத்த வேகத்தையும் பலத்தையும் உடையது.

கார்காத்தார் அரசப்பரியின் குணங் கூறியபடி. திருத்தொண்டர் புராணம் வெள்ளானைச் சருக்கத்து வரலாறு காண்க. (௧௩)

கரி.

கானாறு தோய்ந்து கனலிற் கொதித்துக் கணைய முந்தித்
தேனாறு புன்னை தகர்த்துக் கடம்பு தெழித்தாக்கி
யூனாறு கோட்ட கிரிசரங் கோவு முருமுமெழு
வானாறு மேகமும் போல்வது காராளர் மண்டலமே. 14

காட்டாற்றிற் குளித்துத் தீயைப்போற் சினந்து கணைய மரங்களைத் தள்ளித் தேன்மணக்கும் புன்னையைத் தகர்த்துக் கடம்பைப் பொடிபடுத்தி நிணம் நாறும் கொம்பினையுடைய கார்மண்டலத்துக் கிரிசரம் என்னும் யானையானது மலையையும் இடியோடு வானத்தில் தோன்றும் மேகத்தையும் ஒக்கும்.

கிரிசரம் என்னும் யானையின் சிறப்பைக் கூறுமுகத்தானே காராளர் வெற்றிச் சிறப்பையும் கூறினார். புன்னை கடம்பு முதலியன காவல் மரங்கள். இவை பிறமண்டலத்தார்க் குரியவை. அவற்றைப் பொடிபடுத்தும் ஆற்றலும் கணையத்தைத் தகர்க்கும் வன்மையும் வாய்ந்தது இவரது அரச யானை. அரசுவா இலக்கணம் நூல்களுட் காணலாகும். (௧௪)

முரசு.

நறவங் கொழிக்குங் கழுநீர்ப் பிணையல் நரேந்திரர்தம்
நிறுவுங் கொடையாற் புகழ்மாலைச் சூட்டு நிலவுமிகல்
பிறரும் வெருவும் புரைசால் முரசப் பிறங்கொலிவெம்
மறலிக் குயிர்தந்த பூபாலர் காராளர் மண்டலமே. 15

கொடிய நமனுக்கு உயிர்கொடுத்த பூபாலரது கார்மண்டலத்தில் பகைத் திறத்தில் ஏனையோர் அஞ்சும் உயர்ச்சிமிக்க முரசத்தினது மிக்க ஒலியானது தேன் சொரியும் கழுநீர் மாலையை யணிந்த காராளர் நிலைநாட்டிய கொடைச்சிறப்பால் புகழ்மாலைச் சூட்டின் மணம் நாசியில் வீசக் காதாற் கேட்கப்படும்.

சிவபெருமான் மார்க்கண்டேயர் பொருட்டுக் காலனை யுதைத்து வீழ்த்திய காலையில் பூமிதேவியின் சொற்படி காராளர் சிவபிரானை வேண்டி யமனுக்கு உயிர்கொடுப்பித்தனர் என்பது இதிகாசம். உம்மை இம்மை மறுமை மூன்றினும் பேறுபெறுதற்கு மணம் வெற்றி தியாகம் என்னும் மும்முரசங்களும் என்றும் இவர் முன்றிலின்கண் முழங்கும். (௧௫)

கோடி.

பூந்தா துழக்கிப் பொறிவண்டு பாம்புறழ் பொன்மதலை
காந்தாரம் பாடுங் கமழார மார்பன் கடவுவிடை
யேய்ந்தார மன்னுக வேர்மல்கு நாட்டிய வேந்தல்கொடி
வாய்ந்தா ரதிர்ப்ப வளம்பொலி காராளர் மண்டலமே. 16

பண்டங்களைக் கொண்டுபோவாரது சகடத்து ஆரை ஒலிக்க நெல்வளம் மிகும் காராளர் மண்டலத்தில் அழகிய பராகங்களை உழக்கிப் பொறிவண்டானது பாம்பையொத்த பொன்னிறமுள்ள கொன்றைமலரிற் காந்தாரம் என்னும் பண்ணைப் பாடும் மணந்தங்கிய மாலையைப் புனைந்த சிவபெருமான் செலுத்தும் இடபத்தைப் பொருந்தினதாகி அழகிய உயர்ந்த கார்காத்தாரது கொடி மன்னுவதாக.

ஏர்ப்பகடு சகடப்பகடு இவற்றின் தன்மை கூறுகின்றார். பண்டங்களைப் பிறதேசங்களுக்குக் கொண்டுபோவார் பண்டியினும் ஒட்டையினும் குதிரையினும் யானையினும் சாத்துவான்களாகச் செல்லுதல் அக்கால வழக்கு. இச் சாத்துமுறையில் வேளாண் வைசியர் தேர்ச்சி பெற்றாராக நூல்கள் கூறும். (கசு)

கோல்.

மிடலுற்ற மூவேர் தமக்கு விரும்பும் விருந்தளித்துக்
கடலுற்று வாழும் முதிரம் பொழியக் கனல்சிறப்ப
வடலுற்ற வாழிப் படையோ னளந்த வகலிடஞ்சொல்
மடலுற்ற கோல்சிறு கோலென்ப காராளர் மண்டலமே. 17

பலம்பொருந்திய தமிழ்நாட்டு மூவேந்தர்களுக்கும் விரும்பும் புதுவருவாயினைத் தந்து, கடல்நீரை மொண்டு வாழும் மேகம் பொழியவும், மூவகை அக்கினி சிறக்கவும், வன்மையுற்ற சக்கரதரனாகிய திருமால் அன்றளந்த பூமியின்கண் வசிப்போ ரனைவரும் புகழுகின்ற பூவிதழ்தாங்கிய கோலானது காராளர் மண்டலத்து வேளாண் மாந்தர் கையிற் பிடித்த சிறுகோலே என்பர் புலவர்.

கோரக்ஷணம் வேளாளர்க்குரிய சிறந்த தொழில். வேதாகமங்களிற் கோபூசையும் புராணங்களுட் கோபுரகாவலும் இவர்க்குக் கூறப்பட்டன. ஸ்மிருதிகளிற் கண்டபடி இவ்வுத்தம தருமத்தை வகிக்கும் ஆற்றலுடையார் இவரே. பசுக்காத்தலில் இவர்போன்றும் வன்மையுடையாரிலர். பூர்வ காலத்து இவ்வேளாளர் க்ஷேமாபிவிருத்தியை விசாரிப்பார் இவரது ஆடு மாடு எருமைகளின் விஸ்தாரத்தையும் க்ஷேமத்தையுமே விசாரிப்பர். இப் பசுக்களின் பஞ்சகவ்வியங்களான் ஆகவனீயம் முதலிய அக்கினிகளும்

இவரது வாணிபத்தால் அரசர் வாழ்வும் நிலைபெறும் என்பதை யுணர்த்த இவரது கோல் சிறப்பிக்கப்பட்டது. (கஎ)

ஊர்.

தொழுதகு மேலோ னெனினும் பகலவன் சூழ்கொடுமை
முழுதறச் சிட்டுனு காரி சவட்டிய மொய்வலியி
னுழுதரு மால்கிணை யார்க்கு மருதத் துழம்பாங்கு
வழிபடு முன்றிற்று கார்கெழு காராளர் மண்டலமே. 18

மேகம் செறிந்த காராளர் மண்டலமானது யாவரானும் வணங்கத்தக்க பெரியோன் சூரியனாயினும் அவன் செய்யுங் கொடுமை முற்றும் நீங்க அவன் மைந்தனாகிய சனியை இந்திரன் நீக்கிய மிக்க வலிமை காரணமாக அவ்விந்திரனுக்குச் சிறப்புச்செய்தற் பொருட்டாக உழவர்கள் முழக்கும் பெரிய கிணைப்பறை ஒலிக்கும் மருதநிலத்தின்கண் இல்லிடங்களையுடைய புலவர்கள் துதிக்கும் ஊர்முன்றிலை யுடையது.

கிணை மருதநிலத்துப் பறை. இஃது இந்திரவிழா நாட்களினும் கிருஷி நாட்களினும் ஒலிக்கும். இந்திரன் மழை பொழிவிக்க அதனால் சூரியவெப்பமும் அவ்வெப்பம் தணியச் சனியால் வரும் கேடுகளும் நீங்கி நாடு வளமிகும். உழவர்கள் சிறப்பைக் கூறவே அவரை வேலை கொள்ளும் வேளாளரது சிறப்பு உணர்ந்து கொள்ளப்படும். (கஅ)

---

3. குழுவினர் வகை.

வேளாளர் வகை.

கருதிய பூபால ராதிய ரெண்மரக் காளித்துப்
பருதியி னன்றபூ வைசிய ராதியர் பார்புரக்கும்
வருதினிச் சாமந்தர் வீழ்குடி காவிரி வாயிருவர்
வருமுறைச் சால்பு முழுத்தவர் காராளர் மண்டலமே. 19

காராளர் மண்டலத்து யாவரும் புகழும் பூபாலர்முதலெண்மரும், மேகத்தைக் காத்துச் சூரியனைப்போல் விளங்கும் பூவைசியர்முதல் மூவரும், நிலவுலகத்தைக் காக்கும் சேனைபலமுள்ள சாமந்தரும், அரசர் விரும்புங் குடியினரும், காவிரிநாட்டில் மேல்நாட்டார் கீழ்நாட்டார் என்னும் இரு பிரிவினரும் ஆகக் கிரமப்படி சால்பு நிறைந்தவர் பல பகுதியினராவர்.

சால்புமுல்லை முதலியவற்றின் இலக்கணங்களைப் புறப்பொருணூல்களுட் காண்க. பூபாலராதியர் எண்மர்:—பூபாலர் (பேரரசர்) ராஜகர் (இளவரசர்), கோசர் (கோயில்தம்பிரான்மார்), புரவலர் (தம்பிரான்மார்),

திருமாளிகைத்தேவர் (அரசமனைவாழ்வோர்), பண்டாரத்தார்(நிதிக்கிழவர்), அத்துவாசிகர் (சமயச்சடங்கியற்றுவோர்), சாமந்தர், (ஏழுகாலும் பரிசுத்தர்), இவர்கள் யாவரும் அரசர்க்கு நெருங்கிய உறவினர். பூவைசியராதி மூவர்-பூவைசியர் கோவைசியர் தனவைசியர் (பிங்கலந்தை, எஎரு-எஎக). சாமந்தர் மேற்கூறப்படும். (கக)

உழவு.

எந்நிணர்ச் சாலி னுழுவ ரெருப்பெய் தினியசெயற்
சேந்த னெனக்களை கட்டுவர் நீர்கால் சிறைப்படுப்பர்
பூந்துகள் சேரப் புறங்காத் திடுவர் புரிபபல
மாந்தரு ளான்றவர் வாழ்குடிக் காராளர் மண்டலமே. 20

மக்களுட் சிறந்த வேளாண் குடியினரையுடைய கார்மண்டலத்தில் உழுதுண்ணும் வேளாளராயினோர் உயர்ந்த மாலையைச் சூட்டிய ஏரால் உழுவர், எருவிடுவர், பூவளத்துக்கேற்ற செயல்களில் முருகவேளைப்போலுங் களைகட்டுவர், நீர்கால் யாப்பர், நெற் கதிரறுக்கும்வரை புறத்தே காவல் செய்துவருவர் ; அதன்மேலும் செய்யுஞ் செய்திகள் பலவாகும்.

உழுதுண்ணும் வேளாளரைப்பற்றி யுரைப்பாயிரத்துக் கூறினும். பயிர்த்தொழிலின் பாகுபாடுகளாகிய ஏர் முதலியவற்றின் சிறப்பைத் திருவள்ளுவர் திருக்குறளில் நோக்குக. உழவு-வருந்திமுயலுதல்; அதனைச்செய்வார் விருஷலர், வேளாளர். அவர் தொழில் ஏருழுதல் பரம்படித்தல் நிலந்திருத்தல் புழுதியாக்கல் சேடைசெய்தல் வித்தல் நாறுநடுதல் நீர்ப்பாய்ச்சல் களைகட்டல் ஓம்புதல் விளைவறுத்தல் போர் வேய்தல் பிணையடித்தல் சேர்த்தல் பாத்தல்களும் பிறவுமாம். குடித்தனம் துரைத்தனம். (உ0)

உழுதுண்டல்

கற்றை நிலவு கதிர்ச்சாலி கொண்டு கடன்முறையா
முற்றிழை நல்லா ருடனறஞ் செய்ய முழுவலித்துப்
பொற்றடங் கொண்டன போற்றி யெடுத்துப் புரவலர்க்கு
மற்றை யவர்க்கு வழங்குவர் காராளர் மண்டலமே. 21

கார்காத்த வேளாளர் தமது மண்டலத்தில் திரட்சி யமைந்த கதிர்களையுடைய நெல்லைக்கொண்டு கடன்முறைப்படி தமது பத்தினிமாரோடும் இல்லறத்தை நடத்தத் திறமைவாய்ந்து சிறந்த தமது நிலங்களில் உண்டாகிய பொருள்களைக் காத்து எடுத்து அரசர்க்கும் மற்றையவர்க்கும் வழங்கவேண்டியவற்றை வழங்குவர்.

இஃது காராளர் செய்தொழிலும் அவர் இறுக்குங் கடனுங் கூறியவாறு. இஃது உழுதுண்பார் செயல். இச்செயல் இவர் செய்தலின் நன்றூட்டமைதியாகிய செல்வம் விளையுள் பல்வளம் செங்கோல் கொல்குறும்

பின்மை யென்றிவ் வாறும் நிகழும். விளையுளாவன நாடு நகர் கான் கடல் மலை யிவற்றிற்படுந் திரவியங்கள். கொற்றவர் கொற்றமும் மற்றவர் திட்பமும் இவரான் நிலைபெறும். வியவசாயம் நாட்டின் சிரேஷ்டநிலை, நிலவளம், பருவ மழை, உழவு, கருவி, கால்நடை, எரு, பயிர்மாற்றுதல், பயிர்க்கிருமி, நோய், நீர்ப்பாசனம், பலபோகம், துரைத்தனவுதவி, ஜனங்களின் கூட்டுறவு, ஐக்கியநாணயம், வியவசாயக் கலாஞானம் இவற்றைப் பொறுத்தது. இவ்வறிவின் மிக்கார் காராளர். (உக)

பணிசெய்வாரைப் பேணல்.

பண்ணிய வேர்ப்பயிர் பாலிப்பப் பார்மகள் பல்வளமு
மெண்ணிய வீன வினிதமைக் குந்தொழி லேற்றவரைக்
கண்ணிமை காப்பன யானக் கருத்திற் காந்தருவார்
வண்ண மகளிர் சுரும்பாவர் காராளர் மண்டலமே. 22

காராளர் மண்டலத்தே அழகிய தமது பத்தினிமார்களுக்கு வண்டு போல்பவராகிய வேளாளர்கள் தாங்கள் செய்யும் ஏர்த்தொழில் சிறந்து வளந்தருதற் பொருட்டும், பூமிதேவி பலவளத்தையும் தாங்கள் எண்ணும்படியே தருதற் பொருட்டும், நன்றாகத் தங்கள் பணியைச் செய்பவரைக் கண்ணைக் காக்கும் இமைபோலக் கருத்துடன் காத்து வருவார்கள்.

திருமால் குடியினராதலிற் காராளர் தம்மவரைப்போலவே பிறகுடிகளையும் பாதுகாக்கும் பேரன்பு வாய்ந்தவரென்க. அக்குடிகளுள் தமக்குப் பணிசெய்வார்க்குப் புரியும் பல நன்மைகள் இக்கவியுட் கூறப்பட்டன. வெட்டில் கிளியே நாவா யேனம் தொட்டியர் கள்வர் சோனைப்பெரும்புயல் நட்ட நாட்டேழ் குற்றமு மகற்றுதற்குப் பணியாளரைக் காத்தல் இவ்வேளாளர் கடமையாயிற்று. பணிசெய்வாராவர்:-கணக்கர் கம்மியர் மேய்ப்பர் குயவர் பணிச்சவர் வண்ணார் நாவிதர் காவலாளர் குடிமி தாசி பூவாண்டி மேளகாரர் வைரியர் பாணர் பண்ணைக்காரர் பண்ணைக்காரி கம்புகட்டி தோட்டிச்சி என்னும் பதினெண்மர். கூகூ-வது செய்யுளில் துவாதசகாணி முறையைக் குறித்தார். (உஉ)

வாணிகம் புரிதல்.

ஏர்சான்ற கம்மத் தியல்வன வாக வினிதமைப்பார்
பார்சான்ற தேயத்துப் பல்கல ஞானும் படவமைப்பார்
கார்சான்ற தம்ம பிறர்பொருண் மானக் கருத்தமைப்பார்
வார்சான்ற கூந்த லவர்மாரர் காராளர் மண்டலமே. 23

தமது மண்டலத்து நீட்சிபொருந்திய கூந்தலையுடைய தமது தரும பத்தினிகளுக்கு மன்மதனை யொத்தவர்களாகிய காராளர் ஏரின் வளத்தாற் பெற்ற பண்டங்களையும் அவ் விளைபொருள்களைக் கொண்டு அமைத்த

கைத்தொழிற் பண்டங்களையுங் கொண்டு வாணிபத்தைச் செம்மையாகச் செய்வர்; பூமியிற் பிறநாட்டுக்குப் பல கப்பல்களில் ஏற்றிச் சென்று பெரும்பொருள் ஆக்குவர்; மேகத்தைப்போற் கொடையிற் சிறந்த தம்பொருளைப்போலப் பிறர்பொருளையும் மதிப்பர்.

பகட்டானும் பல்கலனும் பல பண்டங்களைப் பரிமாறும் வேத வணிகரும் அவரல்லாத பிறவணிகரும் ஆகிய கார்மண்டலத்துக் காராளர் இயல்பு கூறப்பட்டது. அறமும் பொருளு மின்பமும் அன்பும் பொறுமையும் புகழும் மதிப்பும் உடையராய்க், காமம் குரோதம் மோகம் உலோபம் மதம் மாச்சரியங்களை நீக்கினவராதலின் முதன்மை இவர்க்கு இலக்கணமாயிற்று. வணிகர் எண்குணத்தைப் பிங்கலந்தை எஎகூ-ல் நோக்குக. (உங)

பிறகுடி யோம்பல்.

கனிவாய்ச் செழுந்திருக் கேள்வ னல்த்துக் கலையுணர்ந்த
முனிவோர் குலத்து முதலே யுதித்த முதன்மையினுற்
றனியோர் நிலையிற் பிறவாங் குடிகளைத் தாங்குதல்மெய்
மனுவேந்தர் வேள்வியாக் கொண்டனர் காராளர் மண்டலமே. 24

காராளர் தமது மண்டலத்தில் கொவ்வைக்கனிபோற் சிவந்த அதரத்தையுடைய திருமகள் நாயகன் மாட்டுத் தோன்றிக் கலைகளை யுணர்ந்த முனிவர்கள் குலத்து உதித்த சிறப்பால் அப்பெரியோர் ஒழுக்கத்தை விடாதவராய்த் தம்மையன்றிப் பிறகுடிகளையும் உண்மையாகவே தாங்கி வருவர்; இவ்வாறு தாங்குதலை மனுக்குலத்துத் தோன்றிய தமக்கு வேள்வியாகக் கொள்வர்.

திருமால் குடியினரென்பதன் காரணம் கீழ்ப்போக்கில் காட்டுதும். வேள்வி அறக்கள வேள்வியும் மறக்கள வேள்வியும் பஞ்ச மகாயஞ்ஞமும் பிறவுமாம். அறத்தை யையப்படாமை அவாச் சிறிதுமின்மை உவர்ப்பில்லாத அறிவுடைமை மூடமறுத்தல் மிகவும் பழிமறுத்தல் அழிந்தோரை நிறுத்தல் அறத்தை விளக்கல் அறுசமயத்தவர்க்கன்பு யென்னுங் காட்சியோடு அவற்றைச் செய்வர். அறுசமயத்தவர்க்கு உண்டி நல்கலினும் அன்னாரை எதிர்கொளல் பணிதல் இருத்தல் கால்கழுவல் அருச்சித்தல் தூபங்கொடுத்தல் தீபங்காட்டல் உண்டியுதவல் புகழ்தல் புண்ணியமும் கொள்வர். (உச)

ஆணைவழி நிற்றல்.

பிழிபடும் பூங்குழன் மாதர் கடனறம் பேணுதல்போற்
பழிபடுந் தோற்றம் புகுதாது மூவரைப் பண்படுத்தி
யுழிபடு மாணை வழிநின்று வீழ்குடி யூன்றுதலவ்
வழிபடும் வண்ண முடனுயிர் காராளர் மண்டலமே. 25

மயிர்ச்சாந்து செறிந்த அழகிய கூந்தலையுடைய மாதர் கடமை தமது பர்த்தாக்கள் வழிநின்று மெய்யறம் செய்வதாதல் போல, ஆணைவழி நிற்றலால் குற்றம் சிறிதும் நிகழாதபடி முதன் மூன்று வருணத்தவரையும் திருத்தி வேத விதிப்படி யாணைவழியிலே நின்று, தாம் அவரால் விரும்பத்தக்க குடிகளாக நிலைபெற்று வருதலால் அவ்வாணைவழி நிற்றலில் பிற வருணத்தவராகிய உடலுக்குத் தமது கார்மண்டலத்து வசிக்கும் காராளர் உயிர்போன்றிருப்பர்.

வேளாண் மாந்தரியல்பு ஆணைவழி நிற்றல் அழிந்தோரை நிறுத்தல் கைக்கடனாற்றல் கசிவகத்துண்மை ஒக்கல்போற்றல் ஓவாமுயற்சி மன்னிறைதருதல் ஒற்றுமைகோடல் விருந்துபுறந்தருதல் என்னும் பத்தனுள் முதற்கண் நிற்பதன் மாண்புகூறி ஏனையவற்றையும் உடன்தழுவினார்.(உரு)

வினைவலரையும் ஆதுலரையுங் காத்தல்.

தருக்குங் குடைநிழற் றாரணி வேந்தரைத் தாங்குதல்போற்
பெருக்குந் தவநிலைத் தாரணை வேந்தரைப் பேணுதல்போ
லுருக்கும் வினையினர்க் கூரிரப் பாளர்க் குதவுவரான்
மருக்குங் குமப்புயத் தாடவர் காராளர் மண்டலமே. 26

மணம் பொருந்திய குங்குமக் குழம்பைப் பூசிய தோள்களையுடைய காராளர் தமது நாட்டின்கண் செல்வமிக்க வெண்குடை நீழலினமரும் அரசரைத் தாங்குவதுபோலவும் தவமிக்க யோகிகளைப் பேணுதல் போலவும் யாவரையும் மகிழ்விக்கும் பணிபுரிகின்ற அடியாராகிய வினைவல்லவர்களையும் ஊர்தோறும் இரந்துண்ணும் யாசகர்களையும் காப்பாற்றி வருவர்.

அந்தணரையும் அரசரையும் அன்போடும் அச்சத்தோடும் தழுவுதல் போல வினைவலமாந்தரையும் ஆதுலரையும் ஆதரித்து வருவார் என்றார். வேளாளர் செய்யும் தானம் மூவகைப்படும். அவற்றுள், அறத்தினீட்டி வரும்பொருள் புறத்துறைக்குற்ற மூன்று மறுத்தநற் றவர்க்குக் கொள்கெனப் பணிந்து குறையிரந் தவர்வயி னுள்ளமுவந்தீவ துத்தமதானம்; ஆதுல ரந்தக ருறுப்பறைக ளாதர் மாதர்க் கீவது மத்திம தானம்; ஆர்வம் புகழே யச்சங் கைம்மாறு காரணங் கண்ணேோட்டங் கடப்பா டென்றிவை யேழுங் கடைப்படுதான மென்ப. (உசு)

4. பூர்வ சரிதை.

தமிழரசர் மூவர்.

தழங்கு மருவித் தடஞ்சார ஞவலந் தாழ்பொழிற்கண்
முழங்குஞ் சிறப்பாற் குடமுனி தாழ்ந்த முதுகிரிக்கீழ்ப்
பழங்கண் டவிர்க்கும் நறுந்தமிழ் மண்டலம் பாற்படுத்து
வழங்கும் முடியணி மும்மன்னர் காராளர் மண்டலமே. 27

ஒலிக்கின்ற அருவிகளையுடைய பெரிய மலைச்சாரல் பொருந்திய நாவலந்தீவில் யாவரும் புகழும் சிறப்பினையுடைய அகத்தியர் அடக்கிய விந்த மலைக்குத் தெற்கே துன்பத்தைத் தவிர்க்கும் இனிய தமிழ் மண்டலத்தை வழிப்படுத்திய முடியுடை மூவேந்தர் விளங்குவது கார்நாடு.

தமிழகத்தின் எல்லையும் அதனைத் தொன்றுதொட்டுக் காத்துவந்த பேரரசர் இயல்பும் அவர் மண்டலம் வகுத்த மாண்புங் கூறப்பட்டன. இம்மன்னர் பரம்பரையை யறிந்தாலன்றி யவர் வழிவந்த வேளிர் வேளாள ருள்ளிட்டார் பூர்வோத்தர மறியப்படாதாகையாலும், அச் சேர சோழ பாண்டிய மன்னரையும் அந்தணரையும் முன்னிட்டு இம்மண்டலங்களை முறைப் படுத்தார் வேளிரும் வேளாளரும் ஆகையாலும், அருவாளரையும் புரோசரையும் ஆதரித்து நாடு திருத்துவித்தார் இவ்வேளாளரே யாதலானும், இவ்வேளாளருக்குத் தலைநின்ற மும்மன்னியல்பு முதற்கண் வைக்கப்பட்டது. (உஎ)

சரிதம்—பதினெண்குடி வேளிர்.

ஏயர் கடம்பர் நுளம்பர்வை தும்ப ரெழிற்றண்டகர்
சாதர் பெருங்காலர் பல்லவ ரண்டிரர் சார்குந்தளர்
தாயன யாதவ ரோசளர் கூடர் சழுக்கர்பலி
வாணரம் மோரியர் தொண்டையர் காராளர் மண்டலமே. 28

கார்நாட்டின்கண் முற்காலத்து விளக்கமுற்ற பதினெண்குடி வேளிராவர் ஹேஹயர் கடம்பர் நுளம்பர் வைதும்பர் தண்டகர் சாதவாகனர் காலசூரியர் பல்லவர் அண்டிரர் குந்தளர் யாதவர் ஓய்சளர் ராஷ்டிரகூடர் சழுக்கர் மாபலிவாணர் மோரியர் தொண்டையர் என்பர்.

பதினெண்குடியினராய்ப் பதினெண்கோடி வேளிரானவர் நாமங்கள் உரைக்கப்பட்டன. அம் மும்மன்னர்க்குந் துணையாயினர் இவரே. இவரைப் பதினெண்மண்டல வேளாளர் தலைவரென்றும் பதினெண்மொழிக்குத் தலைவரென்றும் உலகபாலரென்றும் கூறுப. இருக்குவேதத்துள் இராசன்னியர் எனப் புகழப்பெற்ற சிறந்த வைதிக பரம்பரையினர். வேதா

கமங்களின் வழியே செவ்விதின் ஒழுகிச் சீர்பெற வைதிகானுஷ்டானங் களைப் புரிந்தவர். இவர்வழி வந்தவரே வேளாளர் யாவரும். வேளாளர் பல தேசங்களினும் முற்காலத்துச் சிறந்து விளங்கினர். (அகம் 54, 60) (உ-ஜ)

தாங்கக் கருங்கடற் றூரணி மெய்க்கலை சார்பறநூ
லிரங்கற் கொடுவினை மாற்றுந் தழல்வினை யெம்மரபுங்
குரங்கற் குரைக்கும் புராணம் விபுதர் குலமகந்தை
மருங்கிற் றுவரா பதிவேளிர் காராளர் மண்டலமே. 29

பூலோகத்திற் சிறப்புற்ற துவாரபதியினின்றும் துவார சமுத்திரத்திற் றொல்காலத்தே விளக்கமுற்ற வேளிர்கள் கார்நாட்டினர். இவர் தேவ வமிசத்தினர். அனுமானை வாகனமாகக் கொண்ட திருமாலுக்குச் சிவபிரான் மகாபுராணங்களில் அலைகளையுடைய கரிய கடல்சூழ்ந்த பூமியில் இவர்கள் ஓதும் மெய்ந்நூல்களாகிய வேதாகமங்களையும், ஒழுகும் ஒழுக்கமாகிய தரும நூல்களையும், துன்பக் கலியினை ஒழிக்கும் யாகாதி கருமங்களையும், மற்றும் பிற சம்பிரதாயங்களையும் அருளிச்செய்தார்.

ஆசிரியர் நக்கினார்க்கினியர் எடுத்துக் கூறியவர் இவரே. நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழித்தோன்றித் துவாரகையினின்றும் அகத்திய முனிவரோடு கொண்காணம் துவார சமுத்திரம் முதலிய பிரதேசங்களில் வசித்துப் பெரும்புகழ் வாய்ந்த பெருக்காளர். இவர் வாழ்ச்சியுற்ற இடங்கள் யாவும் இன்றும் வேளூர் வேள்கிராமமெனப் பல பெயரால் பாரதவருஷ மெங்கும் விளங்குகின்றன. இவர் சிறந்த சுத்த க்ஷத்திரிய வமிசத்தினர்.

ஐம்பெருங்குலம்.

சனகியை வேட்டோன் வருமிர விக்குலஞ் சந்தனுவாந்
தனுமன் வருங்குலம் வான வரம்பன் றருக்குலமெய்த்
தூனைவிற் குருகுல மாதிய வைந்தாமித் தூயகங்கை
வனையுங் குலமத் துணையாகுங் காராளர் மண்டலமே. 30

சானகிரமண னாகிய இராமன் பிறந்த சூரிய குலம், விற்போரிற் சிறந்த சந்தனு குலம், இந்திர குலம், சத்தியந் தவறாத குரு குலம் முதலிய வைந் தாகும் கார்காத்த வேளாளரது பூர்வ மண்டலத்துப் பழங்குடிகட்கு.

மகாவமிசங்கள் ஐந்தாவன :—ஹரி வமிசம் இக்ஷ்வாகு வமிசம் குரு வமிசம் நாத வமிசம் உக்கிர வமிசம் என்பன. இவ் வமிசங்களினின்றே வயர் குடி குறுக்கையர்குடி முதலிய பல குலங்கள் தோன்றின. மஹாபாரதம் முதலிய இதிகாசங்களினும் விஷ்ணுபுராணம் முதலிய மஹாபுராணங் களினும் இவ் வமிசத்தவர் வரலாறும் இவ் வமிசத்தவர் காலக்கிரமத்தில்

விருஷலரான விவரமும் பரக்கக் காணலாம். இதனை மனுப்பிரசாபதியும் தமது தருமசாஸ்திரத்திற் சுருக்கிக் கூறுகின்றார். பெருங்கதை என்ற தமிழ் நூலுள்ளும் ஆங்காங்கு இவ்விவரங் கூறப்பட்டிருக்கிறது. (௩0)

இருகங்கர்.

உரைத்த மொழிதவ ருதுளத் தெண்ணி யுஞற்றவல்ல
தரைத்த வலிமானக் காராளர் கங்கர் சமயமதிற்
றுரைத்த விராத்தியர் மேற்சிலர் கீழ்ப்பாற் சுரோத்தியர்தாம்
வரைத்த வரியயர்ப் பற்றினர் காராளர் மண்டலமே. 31

சொன்ன சொல் தவறாது மனத்தில் எண்ணிச் செய்யவல்லவராய்ப் பூமியில் வன்மையும் பெருமையும் கொண்ட காராளர் கங்கை வமிசத்தவர். சமயாநுஷ்டானத்தில் மேல்நாட்டு மாந்தருட் சிலர் சமணப்பற்று உடையராதலின் விராத்திய ராவர். கீழ்நாட்டவரோ சுரோத்திய ராதலின் வைதிக சம்ஸ்காரங்களை விடாதொழுகி ஹரிஹராரிடத்து விசேஷித்த பத்தி செலுத்துவோராவர் கார்காத்த மண்டலத்தே.

இச் செய்யுள்முதல் ௩௮-வது செய்யுள்காறும் கூறிய விருத்தாந்தங்களை **அபிதான விளக்கம்-கங்கர்** என்ற தலைப்பிற் பார்க்க. சுரோத்தியர் வேதவழியே நிற்போர். விராத்தியர் வேத நெறி பிறழ்ந்தோர், பௌத்தர் சமண ராதியர். அநுலோமப் பெண்ணுக்கும் பிரதிலோம ஆணுக்கும் பிறந்த விராத்தியரை யிங்குக் கூறவில்லை. இக் கீழ்நின்ற விராத்தியரைக் கோளகர் கானீனர் குண்டகர் அந்தராளர்களோடு வைத்தெண்ணுவர் கச்சியப்ப முனிவர் (தணிகைப் புராணம் நகரம்-௧00). பிறப்பின் உயர்ந் தோர் நால்வரையும் சமயத் தேர்ச்சியின் மிக்க ஆதிசைவர் முதலியோரை யும் பற்றித் தணிகைப் புராணம் நகரம் ௧0௧-௧௧௩ வரை ஆராய்க. திருக் குறிப்புத் தொண்டர் புராணமும் நோக்குக. (௩௧)

கங்கைகுலம்.

நாற்கடற் றுத்திரி செங்கோல் புரிந்த நடுப்பரத
னாற்கடற் கண்ட துருவசு மன்ன னுவல்சனவிக்
கார்க்கடற் கண்ணே பிறந்தகங் காதத்தன் காங்கெயனை
மாற்கடற் கொள்ளச் சனித்தவர் காராளர் மண்டலமே. 32

நாற்புறமுங் கடல் சூழ்ந்த பூவுலகில் செங்கோல் செலுத்தி நடுவுநிலை தவறாதிருந்த பரதமகிபாலன் புகழ்மிகுந்த கங்கையென்னும் வெண் பாற்கடலிற் றோன்றிய கங்காதத்தனையும், வித்தியாசாகரனாகிய துருவசு மகாராஜன் அக் கங்கையினிடத் துதித்த காங்கேயனையும் மக்களாகக் கொள்ள, அவர்பால் வந்த சந்ததியார் கங்கைகுலஞ் செழிக்கவந்த காராளர் ஆயினர் தமது மண்டலத்திலே.

. சானவியெனக் கங்கைக்குப் பெயர்வந்த காரணம் இராமாயணத்துட் காண்க. (௩௨)

புலங்கொண்ட கன்னற் புயர்வெளி நாட்டுப் புரவலராம்
பொலங்கொண்ட யாதி மரபோர் சிமிலப் புரவலரா
மிலங்கொண்ட கங்க ரிருமர பாக விசைக்குமறை
வலங்கொண்ட நூன்மர பாய்ந்துகொள் காராளர் மண்டலமே. 33

ஞானத்தின் மிக்க இக்குவாகுவின் சந்ததியார் வெளிநாட்டுக் கங்க வரசர். சிறந்த யாதி வமிசத்தவர் மலைநாட்டுக் கங்க வரசர். மைதானத்தையும் பர்வததானத்தையும் இடமாகக்கொண்ட கங்கர் இரண்டு வமிசத்தவராய் விவாகாதி சம்பந்தங்களுக்கு உரிய ராயினர் என்று வேதம் கூறும். வன்மை பொருந்திய சாஸ்திரங்களின் ரீதியாகவே இவர் பூர்வோத்தாங்களைக் கார்நாட்டில் ஆராய்ந்து கொள்க.

கன்னற்புயன்-இக்ஷ்வாகு. வெளிநாட்டுக் கங்கர் சூரிய குலத்தினர். மலைநாட்டுக் கங்கர் சந்திர குலத்தினர். இவர்களுக்கும் ஏனைய மண்டலத்து முடிமன்னர்களுக்கும் விவாக சம்பந்தங்களுள வென்பதைச் சரித்திரம் வல்லார்பாற் கேட்டுணர்க. சமய வேறுபாடு கருதாது சாதியொற்றுமை கருதிக் கொள்ளுதலும் கொடுத்தலும் வேதவிதிப்படியே செய்துகொள்வர்.

அளமுற்ற வேகத்துப் பாகீ ரதிவீ ழவனிமுற்று
முளமுற்ற நாமத் துருத்திரை கேள்வ னுளங்கொளநன்
னளமுற்ற காங்கேய மூர்த்தக பால நராதிபனால்
வளமுற்ற சம்பூத மேற்றனர் காராளர் மண்டலமே. 34

பூரணப் பிரவாகத்தோடு பாகீரதி பூலோகத்திற்கு வந்த காலையில் யாவரும் தியானிக்கும் உருத்திரை நாயகனாகிய சிவபெருமான் உமாதேவியாரைச் சிந்தித்த மாத்திரையில் அப் பாகீரதியின்மாட்டு அவதரித்த காங்கேயமூர்த்தகபாலர் என்னும் பூபாலரால் சிறந்த சந்தியா ராயினர் தமது மண்டலத்தில் கார்காத்த வேளாளர்.

காங்கேயமூர்த்தகபாலர் சிவபெருமான் கருணைநோக்கத்தாற் கங்கையிடம் தோன்றினவர். இவர் முடியோடு பிறந்தும் இவர் முடியை விசுவகர்மா கொய்துவிட, முடியின்றி விளங்கினர். இவர் இந்திரகுமாரிபால் ௫௬ புதல்வர்களையும் குபேரபுத்திரிபால் ௫௨ புத்திரர்களையும் பெற்றார். இப்புதல்வர் களகூபரன் புதல்வியர் ௧௦௬ பேரை வேட்டு, பூபாலர் ௩௫, தனபாலர் ௩௫, கோபாலர் ௩௫, அகமூர்த்தி ௧, ஆக ௱௬ வேளாண் தலைவர்களை ஈன்றார். இவருள் அகமூர்த்தி வேற்றினத்தோடு கலந்துபோயினர். இவ்வேளாண்

தலைவர் சிவானுக்கிரகத்தாலும் தருமதேவதையின் கடாட்சத்தாலும் ஏர் குண்டை முதலிய எழ் கருவிகளைப் பெற்றும் அரசர்க்கு முடிசூட்டுதல் முதலிய சிறப்புப் பெற்றும் விளங்குபவர். (௩௪)

மலைநாட்டுக் கங்கவரசர்.

தனஞ்சயன் காந்தாரி பாற்றந்த மாலரிச் சந்திரன்வாய்த்
தனஞ்சய னும்பர தன்வர பாதேவி தானளித்தாள்
தனஞ்சய னுங்கங்கா தத்தனைக் கங்கைத் தராதிபனுந்
தனஞ்சய னின்னோன் றனஞ்சயர் காராளர் மண்டலமே. 35

தனஞ்சயன் தனது தருமபத்தினியாகிய காந்தாரி வயிற்றிற் பிறப்பித்த சிறந்த அரிச்சந்திரனது குமாரனாகிய பரதன் மாதேவியை மணஞ்செய்து கொண்டு பெற்ற கங்காதத்தன் கங்காப் பிரதேசமுற்றும் ஆட்சிபுரிந்தான். அக் கங்காத்தன் வமிசத்தவரே கார்மண்டலத்துக் காராளர்.

தேவி மாதேவி என்னும் சிறப்புப்பெயர்கள் இன்றும் வேளாண் மகளிர்க்குரியன, வேந்தர் வழியினராதலின். வேளாளர்க்குப் புத்திரர் என்று வடமொழி நூல்களிலும் பிள்ளையென்று தென்மொழி நூல்களிலும் பிரயோகம் உண்டு. புருஷன் தன் பெண்சாதியை யழைக்குங்கால் தேவி யென்றும், ஸ்திரீ தன் பர்த்தாவை விளிக்குங்கால் ஆரியபுத்திர என்றும் வழங்குவது இன்றும் காண்க. (௩௫)

கங்காதத் தன்சுதன் விண்டுதத் தன்னகிக் காப்பதனிற்
கங்காதத் தன்வெண் மறமலி மொய்பெறக் காசினியைக்
கங்காதத் தன்யுவ பூமன்சீ தத்தன் கலிங்கபுரங்
கங்காதத் தன்மானக் காத்தனன் காராளர் மண்டலமே. 36

கங்காதத்தனது புதல்வனாகிய விஷ்ணுகுப்தன் அகிக்ஷேத்திரத்திற் பீஷ்மனைப்போலும் கீர்த்தியோடு வீரமும் வெற்றியும் உடையவனாய்ப் பூமியை ஆளுகையில், அவ்விஷ்ணு குப்தனது முதற்குமாரனாகிய பகதத்தன் அப் பூமியைக் கங்கைக்கரையினின்றும் காத்துவந்தான். பகதத்தனுடைய தம்பி சீதத்தன் கங்காதத்தனைப்போலவே கார்மண்டலத்தையும் கலிங்கபுரத்தினின்றும் காத்துவந்தான்.

ஜ்யேஷ்ட கனிஷ்டக் கிரமத்தில் தங்கள் பூஸ்திதிகளைப் பிரித்தாளுவது இக்காலத்தும் உண்டு. ஸ்திரீகளுக்கும் சிற்சில குடும்பங்களிற் சொத்துச் சுவாதந்தரியம் உண்டு. ஸ்திரீவார்சுகளாகவும் பூரண சுதந்தரவாளிகளாகவும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைத் தாம் செய்துகொண்ட கன்னிகாதானம் பாணிக்கிரகணம் என்ற கிரமங்களுக்கேற்பப் பெற்று அநுபவிப்பர். (௩௬)

சந்திர னொப்பத் தெளிரொளி யாரந் தனமரபோ
ரிந்திர ராகச் சுபந்துப் பிரிய னியைந்தணிந்தான்
முந்திய கம்பன் பதுமநா பத்தவ முன்னவன்பால்
வந்தனன் மாதவன் பேரூரிற் காராளர் மண்டலமே. 37

சந்திரனைப்போலும் விளங்கும் ஆரத்தைத் தனது வமிசத்தவர் இந்திரர் ஆகப் பிரியபிந்து என்பான் இந்திரனுடைய ஐந்து சின்னங்களையும் பெற்று அணிந்துவந்தான். அவன் மகன் கம்பன். அவன் மகன் பதுமநாபன் பெற்ற பிள்ளையாகிய மாதவன் கார்காத்த மண்டலத்தில் பேரூரிற் பிரசித்தி பெற்று வந்தான்.

இவ்வழக்கம் பரம்பரையாகக் காராளச் சிறுவர்க்கு இன்றும் செய்யப்பட்டு வருகின்றது. (௩௭)

தாத கமலம் பலவா குசர்தாழ் ததிகனளி
யோது வனப்பாணிக் கந்த புரத்தவ னோரரியான்
ஏத மகற்றித் தழைவனந் தாபித் தினிதளித்தான்
மாதம்ப நம்பன் கயபதி காராளர் மண்டலமே. 38

தனது பாத கமலங்களைப் பல மன்னர் பணியும்படியான வலிமை வாய்ந்த ததிகன் தேன்வண்டுகள் ஒலிக்கும் அழகிய சோலைகள் செறிந்த ஸ்கந்தபுரத்தி லோர் சிங்கம்போலவே ஆண்டுவந்தான். அவனே அசைக்க முடியாத வன்மையோடு பகைவர்க்கு நம்பன் போன்ற கஜபதி. அவன் பகை கடிந்து கார்நாட்டில் பழைய தழைக்காட்டைப் புதுக்கித் தாபித்து இராச்சியபாரம் புரிந்தான்.

ஸ்காந்தபுரம் என்பது கந்தபுரம் எனவும் வழங்கும். தழைவனம் தழைக்காடு; தளவனபுரம். புன்னாட்டிற்கு (பும்ராஷ்டிரம்) வடபாலுள்ளது. இக்காலத்தும் இப்பட்டணத்து அறிகுறிகள் வியக்கத்தக்கனவாகக் காணப்படும். பூர்வாலயமும் தமிழ்ச் சாசனங்களும் இன்றும் உள. இச்சாசனங்களுள் ஒன்றால் சோழசரித்திரம் சில அறியப்படும். (௩௮)

வெளிநாட்டுக் கங்கவரசர்.

கோலா கலக்குரி சில்வாணி தோயுங் குவலயத்து
மாலாய தன்மைப் பூரியங் காத்து வயங்கினன்மா
ஞாலாக் குணார்நவன் மெய்யர் மயேந்திரம் நோற்றபினர்
வாலாய வாகமம் வாங்கினர் காராளர் மண்டலமே. 39

கோலாகல மன்னனும் கலைமகள் வாசஸ்தலமாகிய தன் நாட்டைத் திருமால்போல் போற்ற வல்லவனும் குற்றங் கடிந்தவனுமாகிய குணார்நவன் தன் பேரால் வழங்கும் நகரத்தைக் காத்து விளங்கினான். அவன் காலத்துச்

சைவமாதவர்கள் மயேந்திர மலையிற் சிவதவஞ் செய்து தூய்மையாகிய சைவாகமங்களைச் சிவபெருமானிடம் கேட்டு வாங்கிப் பரவுவித்தனர் கார்மண்டலத்திலே.

மயேந்திரமலை (காஞ்சி இருபத்தெண்டளி (௨௦, ௩௩) (18°58' N-84°24' E. 4923 Ft.) கஞ்சஞ் சில்லாவில் கடற்கரைக்குப் 16 மைல் தூரத்திலுள்ளது; கல்கத்தாவுக்குச் சுகாதாரஸ்தலம். மகேந்திரதநயர் என்னும் இரண்டு புண்ணிய நதிகளுக்கு உற்பத்திஸ்தானம்; இதன் சிகரத்து நான்கு சிவாலயங்களுள; இவை சிவபெருமான் ஆகமங்களை வெளியிட்டருளிய ஸ்தலங்கள். அநேகர் தமிழ்ச் சாசனங்களும் சமஸ்கிருத சாசனங்களும் சோழரது புலிப்பொறியோடு காணப்படுகின்றன. இராஜேந்திர சோழன் தன் மைத்துனன் விமலாதித்தனை (1015-22) வென்று நாட்டிய சயத்தம்பமும் இங்குளது. மாணிக்கவாசகர் குறித்த மயேந்திரமிது; பாரதத்தும் இராமாயணத்தும் கந்தபுராணத்துங் குறித்தவை வேறு. (௩௯)

கோகன்ன நாதன் குரைகழல் வாழ்த்திக் குறையில்தவம்
பாகன்ன செஞ்சொற் கிழத்திய ரோடும் பணிந்துசிவ
மாகன்ன ராகி மகிபுய மேந்தி வளர்கலிங்க
வாகன்ன சக்கர ராமிவர் காராளர் மண்டலமே. 40

கோகர்ண சுவாமியின் வீரக்கழல் ஒலிக்கும் பாதங்களை வணங்கிக் குறைவற்ற பெருந்தவத்தைச் சர்க்கரைப்பாகு போன்ற இனிய சொற்கள் பயிலும் பத்தினிமாரோடு துதித்துச் சைவ சீலர்களாகிப் பூமிபாரத்தைத் தோளின்மேல் வகித்துச் சிறந்த கலிங்கதேசத்துக் கீர்த்திபெற்ற சக்கர நெறியை ஸ்தாபித்துக் கார்மண்டலத்தையும் ஆண்டுவந்த அரசர்கள் இவரது குலத்தவர்.

கோகர்ணம் சிவக்ஷேத்திரங்களுட் சிறந்தது; புராணங்கண்ட ஸ்தலம்; பாடல்பெற்றது. இத்தலத்தும் ௩௯-ம்செய்யுளிற் கூறிய மயேந்திரகிரியிடத்தும் வெளியிட்டருளிய திவ்வியாகமங்களைப் போத்தரையர் காஞ்சிமண்டலத்துப் போற்றிவந்தனர். இவ்வரலாறு பல்லவப் போத்தரையர் சாசனங்களால் உறுதிசெய்யப்படும். (௪௦)

நீலப் புயல்தங்கை நீலிதன் பங்கன் நெடுந்துவச
மாலக் கரத்தேந்தி யங்கஞ் சிவசின்ன மாத்தரித்துப்
பாலத் திருக்கொண்டு பாரித் தவனி பரித்ததன்மேன்
மாலத் திருமலை நாட்டினர் காராளர் மண்டலமே. 41

நீலமேகம்போலும் நிறத்தையுடைய திருமாலின் தங்கையாகிய உமாதேவியை இடது பாகத்திலுடையோனது ரிஷபக்கொடியைத் தமது

மழுவேந்த கைகளில் ஏந்தித் தேகத்திற் சிவசின்னங்களைப் பொருந்தத் தரித்து இளம்பருவந் தொடங்கியே திருத்தொண்டு புரிந்துப் பூபாரத்தை நிர்வகித்து வந்தது மன்றிப் பெருமையுற்ற ஸ்ரீ சைலம் என்னும் திருமலையைப் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திக விசேஷ பூசைகளை நடத்தி வந்தனர் காராளர் தமது மண்டலத்திலிருந்தே.

திருச்சைலம் விசேஷித்த சிவஸ்தலம், சைவ மடங்களுள் ஒன்று. வீரசைவர் சுத்தசைவ ரனைவராலும் போற்றத் தக்கது; புராணங் கண்ட ஸ்தலம்; பாடல் பெற்றது. (சக)

ஏற்றான் மறைப்பரி யேற்றா னிடும்பலி யேற்றவன்பா
னீற்றான் மலியுட லாலைந் தெழுத்தி னிறைமனத்தாற்
சாற்றா னவிர்சிவ சாகரஞ் செய்து தகையடைந்தார்
மாற்றார் வரைந்த பெருமகர் காராளர் மண்டலமே. 42

பகைவர்களை வென்ற பெருங்குடியாளராகிய கார்காத்தார் தமது மண்டலத்தில், இடபவாகனத்தை யுடையவனும் வேதமாகிய குதிரையைச் செலுத்துவோனும் உத்தமிகள் இடும் பலிப்பிச்சையை யேற்றவனும் ஆகிய சிவபிரானது திருவெண்ணீற்றிற் பொலியும் தேகத்தையும் திருவைந் தெழுத்தால் நிறைந்த மனத்தையும் விளக்கித் திருவிழாச்சிறப்பு அமைந்த சிவசமுத்திரம் என்னும் சிவக்ஷேத்திரத்தை அமைத்து உத்தமப் பேற்றை யடைந்தனர்.

சிவசமுத்திரம்-சரித்திர சம்பந்தமான பெரிய நகரம், காவிரியின் அரங்கம் (12°16 N-77°13' E). இங்குக் காவிரியின் வீழ்ச்சியால் மின்சார சக்தி யுண்டாக்கப்படுகிறது. அநேக ஆலயங்க ளுள. சீரங்கபட்டணமும் சீரங்கமும் வேறு இரண்டு அரங்கங்கள். (சஉ)

சேரர் வளவர் செழியர் முறையினுந் தேர்ந்தமெனப்
பாரர் பரவப் பலமுறைத் தொன்மனுப் பாலிப்பராற்
றேரர் நலியத் திசைவிச யம்புரி சேந்தனடி
வாரர் மறையர் கமவழிக் காராளர் மண்டலமே. 43

பௌத்தர் குன்றும்படித் திக்குவிஜயஞ் செய்து சுப்பிரமணியக் கடவுளது பாதத்தின்கண் அன்புடையோராய் வேதாகம வழியின்கண் நிற்கும் கார்காத்தார் தமது கார்நாட்டில் சேரசோழ பாண்டியர் செங்கோல் முறையினும் தமது நெறி சிறந்ததென்று பூலோகத்தார் சிறப்பித்துக் கூறும்படி பழைய மனுவின் முறைகள் பலவற்றையும் ஆராய்ந்து அந்நெறியே அரசியல் புரிந்து வந்தனர்.

சேரவரசர் சிலருள் மருமக்கட்டாயமும் சோழபாண்டியருள் மக்கட்டாயமும் வழங்கி வர, இவருள் இருவகைத் தாயமும் வழங்குவ வாயின.

தோன்றல்தன் தோன்றல் துணைமுறை யாகத் தொடக்கறுப்பா
ஞன்ற திருமுடி யாட்சியை நல்கி யதிகனலஞ்
சான்ற சிவதரு மத்துறை சார்ந்து சதாசிவன்றுண்
மான்ற பயன்பெற்றுத் துய்ப்பவர் காராளர் மண்டலமே. 44

காராளர் தமது மண்டலத்தில் புத்திர பௌத்திர பிரபௌத்திர பரம்பரையாகவே உலகத்துக் கலித் துன்பத்தை நீக்குதற் பொருட்டுச் சிறந்த தமது திருமுடி யடைவைக் கொடுத்து, அதிகமான் வமிசத்தவர் போலவே சைவநலங் கனிந்த சிவதரும மார்க்கத்தைச் சார்ந்து, சதாசிவ மூர்த்தி பாதமாகிய பெரும்பயனைப் பெற்றுய்வார்.

புத்திரபௌத்திர பாரம்பரியமும் தௌகித்திர பாரம்பரியமும் உண்டு. இவை ஸ்மிருதிகளில் அங்கீகாரமானவை. (சச)

கங்கபாடி (கங்காவதி).

உயர்கங்க பாடியம் மும்முடிச் சோழ னுறுமண்டல
முயர்கங்க பாடி மகிழா சுரநா டொருமண்டல
முயர்கங்க பாடி கருமலைத் தேய மொளிவிசுவ
மயர்கங்க பாடி வகுத்தனர் காராளர் மண்டலமே. 45

உயர்வினையுடையதாய்க் கார்மண்டல மென்னும் பெயர் வாய்ந்த கங்க பாடி, மும்முடிச் சோழமண்டலமென்றும், மகிழாசுர மண்டலமென்றும் கருமலை நாடு என்றும் பெயர் பெறும். அம்மண்டலத்தைப் பூர்வகாலத்து விசுவகருமாவும் மயனும் கூடி நிர்மாணித்தனர்.

கங்கபாடிக்கு மகிடாசுர மண்டலம் கருநாடக தேசம் மும்முடிச் சோழ மண்டலம் கார்மண்டல மெனப் பல பெயர் அவ்வக்காலங்களிற் சரித்திர புராணேதிகாசங்களிற் கூறப்பட்டன. பாரதத்துள் அசுவமேத யாக சம்பந்தமாக நீலன் செய்த பராக்கிரமமும் பிறவும் நோக்கத் தக்கன. அகத்திய மகாமுனிவர் சைவ சமயத்தைப் பரவச் செய்த விருத்தாந்தமும் சிறப்புடையன. இவ்வித விருத்தாந்தங்களாற் பல பெயர் இந்நாட்டிற்கு வழங்குவ. (சரு)

சேலாட மைவிழி யன்பன் சலசத் திருப்பதத்தைப்
பாலாட லாற்றிய சீராச ராசனைப் பார்த்திவனு
நூலாட னல்லவர் கொண்ட வுரிமை நுனித்தறியார்
மாலாட லால்வென் றனனென்பர் காராளர் மண்டலமே. 46

சேலொத்து மைதீட்டிய விழியாள் நாயகனது தாமரைபோன்ற அழகிய பாதங்களில் புஞ்சகவ்வியங்களாலும் ஆட்டி மகிழ்கின்ற ஸ்ரீ ராஜராஜ

சோழதேவரைக் கலாவல்லவர்களாகிய கார்காத்தார் தமக்கு அரசராக ஏற்றுக்கொண்ட உரிமையை நுண்ணிதின் தேர்ந்தறியாதவர் யாவரும் பிரமிக்கத்தக்க தம் வீரப் பிரதாபத்தால் கார்மண்டலத்தை வென்றார் என்றுரைப்பர்.

சைவ மன்னவனுதலாம் பராக்கிரமசாலியாகிய ஸ்ரீ ராஜராஜ தேவரைக் காராளர் தமது மண்டலத்துக்குச் சமயஸ்தாபனு சாரியராக ஏற்படுத்திக்கொண்டார்கள் என்பது இதன் கருத்து. நிகரிலிசோழ மண்டலம் ராஜராஜ மண்டலங்கள் இம்மன்னர் பேரால் வழங்குவன. (சசு)

கங்கங்கொண் டானென்று கங்கைகொண் டானென்று காதலித்துப்
பங்கங்கொண் டாளான் பாதம் பணிந்த பதியண்ணலைத்
துங்கங்கொண் டாடப் புகல்வதெல் லாம்புகழ் சூதறியார்
வங்கங்கொண் டாளுங் கலிங்கத்துக் காராளர் மண்டலமே. 47

விருப்பத்தோடும் உமாதேவியின் பாகத்தைச் சேர்ந்த சிவபெருமானது பாதங்களை வணங்கிய பேரரசனைக் கங்கங்கொண்ட சோழனென்றும் கங்கைகொண்ட சோழனென்றும் உயர்ச்சியாக எடுத்துக் கூறுவதெல்லாம் உபசாரமே. வங்கதேசத்தை வென்று ஆளும் கலிங்க தேசாதிபர்களாகிய காராளர் மண்டலத்தை அவன் வென்றான் என்று கூறும் உளவு இன்னதென்று பிறர் அறியார்.

பௌத்த க்ஷமண மதப் பிரசாரங்களின் நின்று தம்மைக் காத்தருளக் கார்காத்தார் கங்கைகொண்ட சோழனைத் தமது மன்னராக்கிக் கொண்டனர். அதுமுதல் கங்கொண்ட சோழன் என அம்மன்னர்க்குப் பெயர் வழங்கிற்று. (சஎ)

கங்கம் புரப்பர் கலிங்கம் புரப்பர் கருவரைதோய்
கொங்கம் புரப்பர் குவளால வாசங் கொடியுயர்த்திப்
பங்கம் பதுமந் தழைக்கா டளிப்பர் பனைக்கைவிடை
வங்கம் புரப்பவர் சாத்தெறி காராளர் மண்டலமே. 48

பனைபோலுங் கையையுடைய யானையாகிய மலையையும் விடையையும் கொண்டு பூபாலனுஞ் செய்து கள்வர் சாத்துக்களை ஒழித்த கார்நாட்டவர் தமது மண்டலத்திலிருந்து கங்கம் கலிங்கம் கருவரை செறிந்த கொங்கம் இந்நாடுகளை யாண்டு குவளாலபுரத்தில் வசித்து வெற்றிக்கொடியை நாட்டிச் சேற்றிற் செந்தாமரை மலரும் தழைக்காட்டைக் காத்து வருவர்.

இந்நாடுகள் எங்கும் கார்காத்த வேளாளர் மிக்க சிறப்பொடு பழங்காலத்து வாழ்ந்தனர். தழைக்காடு, குவளாலபுரம் (Kolar) பழைய ராஜதானிகள். கள்வச்சாத்தை நீக்கிச் சாத்துவான்களாகப் பெரிய வர்த்தகஞ்

செய்து காரரளர் கடல் வழியினும் தரைவழியினும் பெரும் பொருளீட்டி வந்தனர். அத்திகோசத்தார் என்பார் யானையின்மேற் பண்டங்களையும் பொன்னையும் கொடுவந்து சிறப்புற்ற பெருங்குழுவினர். (சஅ)

5. சமயநெறி

வேத மனந்த முறையா கமத்து விரியனந்தம்
பேத முகத்தன வங்க முபாங்கம் பிரமமுத
லோது புராண மிதிகாசஞ் சூத்திர முள்ளவெலாம்
வாத மறக்கற்ற வாழ்க்கையர் காரரளர் மண்டலமே. 49

அநந்த சாகைகளையுடைய வேதங்களையும் பல தந்திரங்களோடு கூடிய ஆகமங்களையும் பலபேதப்பட்ட வேதாங்கங்களையும் வேதோபாங்கங்களையும் பிரமம் முதலிய புராணங்களையும் சூத்திரங்களையும் மற்றுமுள்ள தரும சாஸ்திரங்களையும் ஐயந் திரிபின்றிக் கற்று வல்லுநர் காராளர் தமது மண்டலத்தின்கண்.

இக்கலைகளைச் சரித்திராபர காலத்துத் தமிழ்நாட்டு மூவரசராட்சியினும், ஐதிக பரம்பரையினும், அசோகன் (250 கி. மு.) பாண்டியர், சோழர், சேரர், பல்லவர், ஆந்திரர் (220 கி. மு.-236 கி. பி.), சளுக்கர் (5-ம் நூற்), கடம்பர் (6-ம் நூற்), ராஷ்டிரகூடர் (8-ம் நூற்), மேற்சளுக்கர் (973-1189) பிற்சோழர், முகம்மதியர் (14-ம் நூற்), விஜயநகரத்தார் (1336-1565), பின்முகம்மதியர், மஹாராஷ்டிரர், ஔரங்கசீப்பு (1686), நிஜாம் (1724), ஹைதர், போர்த்துகேசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் காலத்திலும் ஓதி வருவாராயினர். வித்தை கஅ. தமிழ்நூல் பல இவ் ரோதுங் கலைகள் (சிவஞான பாஷியம் க.க.) (சகூ)

கனிபடு மாற்றக் கலைக்கெண் ணெழுத்திரு கண்ணெனமெய்ப்
பனிபடு வாயினர் பண்டுரைத் தாரப் பதமுணர்ந்து
புனித வெழுத்துப் பொறியுளங் கூற்றுப் புலன்றழுவி
வினைபொற் கழலார் விளங்குவர் காராளர் மண்டலமே. 50

சத்தியவாசகர்களாகிய பெரியோர்கள், எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று பூர்வத்தே கூறினார்கள். அவ்வாசகத்தின் உண்மையைக் கருதிக் காராளர் தமது நாட்டில் சுத்தமாகிய எழுத்தாதி இலக்கணங்களையும் பிரத்தியட்சம் அநுமானம் ஆகமம் உபமானம் முதலிய பிரமாணங்களையும் கற்றுப் பிறரை வென்று வீரக்கழல் தரித்தவராயே விளங்குவர்.

இலக்கண நூல்களுள்ளும் அளவை நூல்களுள்ளும் விவரம் அறிக. இவ்வாறு வித்தையிற் சிறந்து விளங்கிய இக்காராளர் மரபினர் பாண்டி நாட்டிற் றழைத்தோங்கிய பகுதி பாண்டிநாட்டில் மதுரையம்பதிக்குக் கிழக்கே கார்வளங்கொள் மண்டல மென்றும் மழைக்குப் பிணைகொடுத்த மங்கல நாடென்றும் வழங்குகின்றது. (ருo)

சேட்டிளங் கன்றன்ன காலையி னேநிக் திருவுறழ்வார்
மோட்டிள வெம்முலைப் போகம் புணர்ந்து முழுப்பொருளைக்
காட்டழ னின்று கணித்துப் புணர்ந்து கடுந்துறவால்
வாட்டியவ் வீட்டகம் வாழ்பவர் காராளர் மண்டலமே. 51

மிக்க இளங்காளைப் பருவத்தே கற்றற்குரிய நூல்களைக் கற்றுச் செல்வத்தை யடைவார். பின்னர் தமது இல்லறம் நடத்தற்கு விவாகஞ் செய்து கொண்டு அதனைச் செவ்விதின் நடத்திப், பிறகு வானப்பிரஸ்தர்கள் ஆகிக் கடுந் தவஞ் செய்து முழுமுதற் பொருளைக் கூடித், தூய துற வொழுக்கத்தராய் உடலை வருத்திப் பரம வீட்டைக் காராளர் தமது மண்டலத்திலே சேர்வர்.

பிரமசரியம் முதலிய ஆச்சிரம வொழுங்கையும் சைவாச்சிரமத்தின் கிரமத்தையும் முறையே தரும சாஸ்திரங்களிலும் சைவாகம பத்ததிகளிலுங் கண்டு கொள்க. வைராக்கியம் ஞானங் காரணமாக எவர்க்கும் துறவும் ஞானமும் உளவாயினும் இவர்க்கு உயர்குடிப் பிறப்பானும் அவையுள வென்பது கூறப்பட்டது. வருணத்திற்குரிய நிலைகளுட் பிரமசரியத்தைக் காஞ்சிப் புராணம் ஒழுக்கப் படலத்து உ-கச-லும், கிருகஸ்தாச்சிரமத்தை கரு-ருக-லும், வானப்பிரஸ்த நிலையை ருஉ-ருஅ-லும், துறவு நிலையை ருகூ-கூஅ-லும் சைவர்க்கேற்ற வண்ணஞ் சிவஞான சுவாமிகள் கூறியுள்ளார். (ருக)

கண்ணுங் கருத்தும் பிரமத்தி னூற்றிடக் காமர்மறை
யெண்ணுறற் கேற்ற விழைநூல் தரித்து மிருக்குரைக்குந்
தண்ணுறு சாமச் சடங்கு புரிந்துஞ் சதுர்மறையின்
வண்ணுற்ற மானவக் கோத்திரர் காராளர் மண்டலமே. 52

கார்காத்த வேளாளர் தமது மண்டலத்திலே பிரமப் பொருளைக் கண்ணுங் கருத்துமாக நோக்குதற்கும் சிறந்த வேதங்களை ஆராய்தற்கும் வேதவிதிப்படி உபநயனஞ் செய்துகொண்டு, வேதங்களிற் கூறிய சகல மந்திரங்களோடுங் கூடிய சடங்குகளைச் செய்து, நான்கு வேதங்களிலும் மதிக்கப்பெற்ற மானவ கோத்திரத்தாராக விளங்குவர்.

சாதகருமம் முதலிய சம்ஸ்காரங்கள் கூறப்பட்டன. சைவ பத்ததிகளிலும் சூத்திரங்களிலும் திருவானைக்காப் புராணத்தினுங் காண்க.

நறைத்துள வம்புனை நாரணன் சீரடி நாட்டமுற்றூர்
மறத்திரந் தீரச்சங் காழி புயத்து வயங்கவைத்தும்
வெறிக்கடி மாமுதல் தொண்டர் சிவதீக்கை மேன்மையுற்றும்
மறைத்தனி நாயக ராயினர் காராளர் மண்டலமே. 53

கருநாட்டில் வசிக்கும் காராளருட் சிலர் மணம் பொருந்திய துளசி மாலையை யணிந்த நாராயண மூர்த்தியின் திருப்பாத பத்தியுடையராய்ப் பாவச்செயல்களை ஒழிக்கும் சங்குசக்கா லாஞ்சனத்தைத் தமது புஜத்தில் தரித்துக்கொள்வர். சிலர் மணம் பொருந்திய கொன்றைமாலையைத் தரித்த சிவபெருமானுக்குத் தொண்டர்களாய்ச் சிவதீட்சை பெற்றுவாழ்வர். இங்ஙனம் காராளர் அனைவரும் வேத வழக்கொடு பொருந்தியவராக இருப்பர்.

சிவஞானபாடியத்துச் சிவதீக்கையென்ற வரிசையினும், வைணவநூல்களுட் பஞ்சசம்ஸ்காரம் என்ற தலைப்பினுங் கண்டுகொள்க. (ருரு)

ஒன்றென வோங்கு மருப்புடை யும்ப லுயர்பரமன்
குன்றிடைத் தோன்றும் விமலை வரநதி கோக்குமரர்
துன்று துயிலமர்ந் தோன்பொறி யாரணன் றூமொழியாள்
மன்றற் சதமகன் வானவர் காராளர் மண்டலமே. 54

காராளர் தமது மண்டலத்து வணங்குங் கடவுளர் ஒற்றைக் கொம்பையுடைய விநாயகர், உயர்ந்த சிவபெருமான், திருப்பருப்பதத்து விளங்கும் உமாதேவி, கங்கை, முருகர், பைரவர், வீரபத்திரர், ஐயனார், மன்மதன் திருப்பாற்கடலின் அறிதுயிலமரும் திருமால், இலக்குமி, பிரமதேவர், கலைமகள், இந்திரன் முதலியோர் என்ப.

இக்கடவுளரே இவர் வணங்கும் கடவுளர். இவர் மண்டலத்துச் சிறப்ப வழிபடுவது விநாயகமூர்த்தமே. (ருச)

ஆறந்த மூலனறைந்த வருந்தந் திரமறிவார்
நூறந்த நுண்பொருள் யாவும் நுனித்து நுவன்றறிவார்
காறந்த நற்பயன் மூர்த்தி தலந்தீர்த்தங் கண்டுறைவார்
மாறந்த மாயை கடிந்திடக் காராளர் மண்டலமே. 55

கார்காத்தார் தமது மண்டலத்தில் மயக்கத்தைத் தரும் மாயையையொழித்தற் பொருட்டுத் திருமூலதேவர் அருளியபடி உண்மைமுடிபுக

ளாகிய வேதாந்த சித்தாந்த மாதிய ஆறந்தங்களையும் உணர்த்தும் ஆகமங்களையும் தந்திரங்களையும் கற்பார்; சமஸ்த கலைகளின் சாராம்சமாகிய வேதாந்த சூத்திரம் முதலிய நுட்ப நூல்களை விவேகித்துணர்வார்; தாங்கள் பெற்ற சரீரத்தின் பேற்றை யடையக் கருதி மூர்த்தி தலம் தீர்த்தங் கண்டு உறைந்து ஆடிப் புண்ணியப் பலனை யெய்துவர்.

ஆறந்தங்களாவன - வேதாந்தம் சித்தாந்தம் நாதாந்தம் கலாந்தம் யோகாந்தம் போதாந்தம் என்பன. இவற்றின் விரிவு திருமூலர் திருமந்திரத்துக் கூறப்பட்டது. மூர்த்திசாந்நித்தியம் ஸ்தலபுனிதம் தீர்த்த மாதுரியம் இவற்று அன்புடையராதலின் இன்னோர் சந்தானபரம்பரையாகத் தேசாடனஞ் செய்து வருவர். (௫௫)

சரியை நிலைப்பவர் சாலோக மெய்துவர் சாமிபதங்
கிரியை நிலைப்பவர் சாமீப மெய்துவர் கீற்றுநுதற்
குரியை நிலைப்பவர் சாரூப மெய்துவ ரோர்நிலயம்
வரியை நிலைப்பவர் சாயுச்சர் காராளர் மண்டலமே. 56

மண்டல மாந்தராகிய கார்காத்தார் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களினின்றும் சாலோக சாமீப சாரூப சாயுச்சியம் என்னும் நான்கு வகைச் சிவப்பேற்றையும் அடைகுவர்.

சிவஞானசித்தியாருட் சரியை யாதியவற்றின் விவரங் காண்க:—(சிவஞா—எட்டாஞ் சூத்திரம்). (௫௬)

அந்தணர் கோட்டத்து மாழிப் படையோ னமரகத்தும்
வெந்தணன் மேனி விமல னிடத்தும் விமலமுற
முந்துமுப் பூசை முறையா நடத்து முழுப்புகழார்
மந்தணங் கூற வருமோயிக் காராளர் மண்டலமே. 57

காரைக்கட்டு வேளாளர் தமது மண்டலத்தில் பிராமணர் வாசஸ்தலங்களிலும் சக்கரதரனாகிய திருமால் கோயில்களிலும் வெவ்விய தீவண்ணராகிய சிவபெருமான் திருவாலயங்களிலும் பரிசுத்தராய் முற்பட்ட பூசனைகளை முக்காலங்களிலும் நடப்பிக்கும் சிறந்த கீர்த்தியை யுடையவர். அப்பெரியாரது அந்தரங்க பத்தியை எடுத்துக்கூறுதல் எவரால் இயலும்?

பிரமாலயம் விஷ்ணுவாலயம் சிவாலயங்களில் நித்திய நைமித்திக விசேட பூசைகளைச் செய்வித்துவரும் இயல்பு கூறப்பட்டது. இங்ஙனம் பரார்த்த பூசை செய்விப்பதனோடு ஆன்மார்த்த பூசையும் அவர் செய்து வருதற்கு விதி:—(காஞ்சிப். pp. 44, 45). (௫௭)

சத்திரஞ் சாலை தடாகந் திருமடஞ் சார்தளி நூல்
வத்திரம் வாகன மில்லஞ் சதுர்வேதி மங்கலம்பொய்க்
குத்திர நீக்குங் கடிகை குடிகை குலம்பலவால்
வத்திர துண்டன் வழங்குமக் காராளர் மண்டலமே. 58

விநாயக மூர்த்தியைச் சதாகாலமும் குலதெய்வமாக வைத்து வழிபடும் காராளர் தமது மண்டலத்து அமைத்த சத்திரம் அறச்சாலை தடாகம் திருமடம் ஆலயம் வஸ்திராபரணம் வாகனம் வீடு சதுர்வேதிமங்கலம் பொய்யும் வஞ்சனையும் கடியும் வித்தியாலயம் ஆச்சிரமம் பன்னசாலை பலவாகும்.

அறச்சாலை பலவும் இவர்களது ஆக்கப்பாட்டான் அமைந்தன வென்றார். கடிகை-கல்லூரி. குடிகை-குச்சரக்குடிகை, காளி முதலிய தெய்வங்கட்கு விளைந்த நாணல்களால் அழகுபெறச் செய்யும் கோயில்; நாடகசாலைகளின் பக்கத்தும் முன்னும் இத்தகைய குச்சரக்குடிகை அமைக்கப்படும். சதுர்வேதி மங்கலம்—பதாகை சேரி என்பன போன்ற பல சிற்றூர்களையும் நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்கள் வசிக்கும் பல அக்கிரகாரங்களையும் உள்ளடக்கிய, சுமார் 10 மைல் விஸ்தீரணமுள்ள நாட்டுப் பகுதி.

தில்லைப் பதியிற் றிருவரங் கேசத்துத் திண்கடம்பா
மெல்லைப் பதியி லெழிற்காஞ்சி மண்டலத் தேழ்பதியில்
வல்லைப் பதியிற் கடிகம் பலதளி மாணவைத்தார்
மல்லைப் பதிவாண ரஞ்சகர் காராளர் மண்டலமே. 59

திருக்கடன்மல்லை என்னும் திவ்விய தேசத்து அரசாண்ட வாணகோவரையருக்குப் பிரியராகிய காராளர் தமது கருநாடக தேசத்தி லிருந்தே திருத்தில்லை, திருவரங்கம், கடம்பாரணியமாகிய மதுரை, தொண்டை நாட்டிற் காஞ்சி முதலிய சப்த ஸ்தானங்கள், வல்லம் என்ற இந்நகரங்களில் பல கல்லூரிகளையும் கோயில்களையும் சிறக்க அமைத்தனர்.

இப்பதிகளில் ஆலயங்களும் அவற்றை யடுத்து உயர்தரக் கல்லூரிகளும் தாபித்தனர். அக் கல்லூரிகளில் கருவிநூல் சமயநூல் கிரமமாகத் தக்க ஆசிரியர்கள் போதித்து வரவும் மாணவர் தேகபோஷணையோடு கேட்கவும் வேண்டிய நிபந்தங்கள் வைத்தனர். (ருக)

6. மொழியும் நூலும்.

மேலையூர் வெள்ளைக் குளஞ்சிருங் கேரி விழுத்தவத்து
வேலையூர் வேளூர் பருப்பதம் நந்தி விமலகிரி
பாலையூர் மாடம் பலவகுத் தார்தம பண்டைமொழி
மாலை யூராவகை காத்தனர் காராளர் மண்டலமே. 60

மண்டல மாக்களாகிய கார்காத்தார் மேலையூர் வெள்ளைக்குளம் சிருங்கேரி வேலூர் வேளூர் திருச்சைலம் நந்திமலை விமலகிரி பாலையூர் இவற்றுள் பல திருமடங்களை நிர்மாணித்துத் தமது பழந்தமிழ் சிதையாவண்ணம் காத்துவந்தனர்.

இவ்வூர்களிற் சமய பரிபாலனத்தின் பொருட்டும் சாஸ்திர பரிபாலனத்தின் பொருட்டும் சாதுக்களைக் காத்தற் பொருட்டும் பல மடங்களும் பல்கலைச் சங்கங்களும் நானு பாஷாபிவிருத்திக் கேற்ற பல சாதனங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆழ்வாராசாரியர் சைவநாயன்மார் பிரதிஷ்டைகளும் இன்னோரற் பல ஸ்தலங்களிற் செய்யப்பட்டுள்ளன. (சுo)

ஒண்டிறற் சூலப் படையோ னுயர்மொழி யொன்றதுவே
குன்றிரண் டாகிக் குவலயம் பத்தெட்டுக் கோளுடைத்தாய்
நின்றவப் பஞ்சம் நிலைப்ப வுதயம் நிலைத்திரட்சி
மன்றவிம் மூவூழி நின்றது காராளர் மண்டலமே. 61

ஒள்ளிய வலிய சூலப்படையோன் அருளிய ஒரு மொழியானது கைலையின்கண் ஆரியம் திராவிடம் என இரண்டாகிப் பதினெட்டுப் பிராகிருத பாஷைகளாகி அவப்பஞ்சங்கள் பலவாகி நிலைபெற, உதயம் நிலை திரட்சி என்னும் பாஷையின் மூன்றூழிக் காலத்தும் விளங்குவது கார்மண்டலம்.

சங்கம் பலகணம் பற்பல சற்சபை தாம்பலவாஞ்
சங்கம் பலமொழி சார்ந்தன வெல்லாந் தகுதியவாஞ்
சங்கந் திரமிடங் கன்னட மாந்திரந் தண்கலிங்கஞ்
சங்கந் திரயஞ் சமைத்தனர் காராளர் மண்டலமே. 62

மொழி வளர்ச்சிக்குக் காரணமாகிய சங்கங்கள் பல; அவற்றுட் கணங்கள் பல; அக்கணங்களுட் சபைகள் பல; இவ்வாறு பல மொழிகளிலும் பல சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. கார்மண்டலத்தே திரமிடம் ஆந்திரம் கன்னடம் கலிங்கமாகிய நான்கு பாஷைகளுக்கும் சங்கங்கள் ஏற்பட்டு, அவை முச்சங்கங்களாக வகுக்கப்பட்டன. (சுஉ)

நூல்தொகுத் தாரெவர் நுண்மா ணுழைபுல நூலவையம்
பால்தொகுத் தாரெவர் பன்மாடக் கூடற் பழம்பதிக்க
ணேல்தொகுத் தாரெவர் முத்தமிழ்ப் பாண ரிசைவகுப்ப
மால்தொகுத் தார்முத் தரையவர் காராளர் மண்டலமே. 63

காராளர் மண்டலத்துச் சிறந்த முத்தரைய ரென்னும் பேரினத்தைச் சேர்ந்தவர்களே, தமிழ்நூற் பலவற்றையும் கருவிநூல் சமயநூல்களையும் மதுரையம்பதிக்கண் இயற்றமிழ் நூல்களையும், மூன்று தமிழை யுணர்ந்த

பார்ணர் தமது பெருமையைப் பாண்பாட்டுக்களிற் சிறப்பித்துக் கூறிவரு மாறு தொகுத்தும் வகுத்தும் விரித்தும் வந்தனர்.

முத்தரையர்-மும்மண்டலங்களுக்கும் உரிய வேளாளர்; காராளருள் ஒரு பகுதியினர்; சேர சோழ பாண்டிய நாடுகளுக்கு உரிமைபூண்டு அவ் வம்மண்டலங்களின் பேரால் வழங்கப்பெருமற் பொதுவில் முத்தரையர் என வழங்கப் பெற்றனர். இவருள் அநேகர் அன்னதாதாக்களாகவும் குறு நில மன்னராகவும் புலவர்களைப் புரப்போராகவும் விளங்கினர். (சூ௩)

இருக்காதி வேதந் தொகுத்துத் தமிழி னியற்றியருள்
பெருக்காள ரப்பர் குருகூர்த் தனயர் பெருங்கருணை
யெருக்காதி சூடுங் கிரிசன் நெடுமா லிறைவரென
மருக்காள மூதிய மேலவர் காராளர் மண்டலமே. 64

இருக்காதிய நான்மறைப் பொருளையும் தமிழ்வேதமாக அருளிய பெருக்காளர் குடியினராகிய அப்பமூர்த்தியும், திருக்குருகூரிற் றிருவவ தரித்த காராளர் குடியினராகிய நம்மாழ்வாரும் முறையே சிவபெருமான் திருமால் என்னுமவரைப் பரம்பொருளாகக் கூறி வெற்றி யுற்றவர், இவ் விருவரும் கார்மண்டலத்து வேளாளர் பரம்பரையினரே.

இப்பெரியா ரிருவரும் வேளாளத் திருமேனியர். இவர்களது பிரபா வம் முறையே திருத்தொண்டர் புராணத்தினும் குருபரம்பரையினும் ஓதப்படும். இன்னூர் திருவாய்மலர்ந்தருளிய சூக்திகள் வேதத்தைப் போலவே அந்தணர் முதலிய யாவரானும் போற்றப்பட்டு வருவன. (சூச)

தலைச்சங் கணிந்த தடக்கைப் பெரும்புயல் தண்டமிழ்சூர்த்
தொலைச்சிக் குடுமிப் படைகொள் பரமன் சுருதிமறை
மிலைச்சிப் புகழ்பெற்ற நாத முனிநம்பி வேந்திருவர்
மலைச்சிக்க பூபதி வாழ்க்கையர் காராளர் மண்டலமே. 65

மேன்மை வாய்ந்த சங்கத்தைத் தனது பெருங்கரத்திற் றரித்த கார் மேகவண்ணனது திவ்விய பிரபந்தங்களையும், அசுரர்களைக் களைந்து சூலப் படை கொண்ட சிவபெருமானது தேவாரத் திருமுறைகளையும் வெளிப் படுத்தருளிய வீரநாராயணபுரத்து நாதமுனிவரும் திருநாரையூர் நம்பி யாண்டார் நம்பியும் ஆகிய இருவரும் கார்மண்டல வேளாளராய்த் திரு முதுகுன்றத்து இருந்த சிக்க பூபதியால் போற்றப்பட்டு வந்தவர்.

திராவிட வேதவியாசர்களாகத் திருநாரையூரினும் திருவீரநாராயண புரத்தினும் முறையே திருவவதரித்த நம்பியாண்டாரையும் நாதமுனிகளை யும் விருத்தாசலத்துச் சிக்கபூபதி யென்னுங் கார்காத்த வேளாளர் ஆத ரித்து வந்தமை யீண்டுக் கூறப்பட்டது. (சூரு)

7. வள்ளல்களும் புலவரும்.

இருங்கோ வதியன் பெருநள்ளி நன்னன்வே ளெவ்விமுதல்
வருங்கோ வளக்கும் பரிசிற் றுறைமுற்ற வாழ்ந்தவர்தாம்
பெருங்கோ வளவர் தமைமானப் பாடு பெரிதயின்றோர்
மருங்கோ தளுக்க லொருவிய காராளர் மண்டலமே. 66

இருங்கோ அதியன் பெருநள்ளி நன்னன் வேளெவ்வி இன்னோர் விண்ணுலகம் எட்டிய பெரும்புகழோடு பரிசிற்றுறை முற்றிய வள்ளல்களாய்ப் பேரரசராகிய சோழர்களைப் போலும் பெரும்பொருள் உடையவர்களாய்த் தமது பக்கற் சார்ந்தார்க்கும் எளிமை முதலியவற்றால் உண்டாகும் அச்சத்தை நீக்கினவராய்க் கார்மண்டலத்து விளங்கிய காராள வேளிராவார்.

இதுமுதல் கக செய்யுள் ஒருதொடர். இத்தொடரிற் கூறிய இருங்கோ அதியன் பெருநள்ளி நன்னன் எவ்வி அன்னி கங்கன் இளங்கோசர் குன்றத்துப்பூதரன் கூடலூர்கிழார் பெருங்குன்றூர்கிழார் ஆலியார் அரிசில்கிழார் கருவூர்க்கதப்பிள்ளை உம்பலார்உமட்டூரர் எருமையூரர் பொதும்பிலார்நியமத்தார் காட்டூரர் நல்லாவூரர் மாற்றூரர் மருங்கூரார் செயல்கள் அபிதானவிளக்கத்து அன்னார் பேர்வரியிற் காண்க.

தலைகுளிக் கும்வாகை வேய்ந்த தராதிபர் சாருவரோ
வலைகுளிக் குந்துறை யாடுந் தவவேந்த ராளுவரோ
நலகுளிக் குங்கற் புடையமெய்ந் நாரியர் நண்ணுவரோ
மலைகுளிக் கும்புய லன்னிசேர் காராளர் மண்டலமே. 67

கார்மண்டலத்து வேளாகியவனும் மலையைக் கவிக்கும் மேகத்தையொத்தவனுமாகிய அன்னியின் பெரும்புகழைச் சிறப்ப வாகை மாலையணிந்த அரசராயினும், சமுத்திரதீரங்களிற் சென்று படியும் தவத்தையுடைய முனிவோராயினும், நன்மையைத் தருங் கற்புடைய சத்தியவதிகளாயினும் பெறுவார்களோ? (கூஎ)

மாண்டா னலன்கங்கன் மாசாத்தான் பாதம் வயங்கினனாற்
பூண்டாங்கு மொய்ம்பன் பெரும்பூ ணெலுநன் புறவகலு
ளாண்டா னலங்கற் பழையன் படுகள மாண்டிறப்ப
மாண்டான் றுறக்கம் புகுந்தனன் காராளர் மண்டலமே. 68

கார்மண்டலத்துக் கங்கன் கழுமலப் போரில் இறவாமல் ஐயனார் திருவடியிற் றவஞ் செய்துகொண் டிருக்கின்றான். சர்வாபரண பூஷிதனாகிய

பெரும்பூட் சென்னியின் புறமதிலிடத்துக் காவல் புரிந்து வந்த குவளை மாலைதரித்த பழையன் கழுமலப் போரில் மாய்ந்து சுவர்க்கம் புகுந்து வீரா பிஷேகம் பெற்று வதிகின்றான்.

கழுமலப் போர் பெரும்பூட் சென்னி காலத்து இரண்டும், கோச்செங் கண்ணர் காலத்து ஒன்றும் நடந்தன. கரிகாற் பெருவளத்தான் காலத்து நடந்த வெண்ணிப்பறந்தலைப் போரும் கழுமலத்திற்குக் கீழ்பாலுள்ள வெண்ணியிலே நடந்தது. ஆதித்தன் அரசூர்ப் போரும் கழுமலத்திற்கு 3-மைல் வடக்கில் நடந்தது. (சுஅ)

துண்டப் பிறையணிந் தாலமர் காமாரி சொல்லவல்ல
கண்டப் பெருங்கீர்த்திக் காராளர் தம்மிற் கடுந்திறலா
ரெண்டிக் கவையத் திளங்கோச ராகி யிசையணிந்தார்
மண்டப் புகலாரு மாராயர் காராளர் மண்டலமே. 69

நிறைந்த புகழ்மிக்க மாராயரும் காராளரும் ஆகிய மண்டலமாந்தரே இளம்பிறையைச் சூடி விஷபானஞ் செய்த சிவபிரானைத் துதிக்கவல்ல மிக்க கீர்த்தியையுடைய கார்காத்த வேளாளருள் வீரராகி எட்டுத் திக்கி கினும் நியாயமன்றங்களில் இளங்கோசராகி யிசையோடு விளங்கினர். (சுகூ)

சீற்றந் தெரிந்து செருச்சூ ரொழித்த சிகித்துவச
னேற்றங் கமரும் பரங்குன்ற வாழ்க்கை யினத்தவர்க்குப்
போற்றுங் கருணைத் தயாபரன் குன்றத்துப் பூதரனை
மாற்றும் புகழாள ருண்டோவிக் காராளர் மண்டலமே. 70

சூரபன்மனுடைய கோபத்தை யறிந்து போரில் அவனை வென்ற கோழிக்கொடியோனது சிறப்பு மிக்க திருப்பரங்குன்றத்தில் தமது இனத் தவர் வசித்து வருமாறு பேரருள் செய்த தயாபரனாகிய கார்மண்டலத்துக் குன்றத்தூர்ப் பூதரனை மேற்கொள்ளும் கீர்த்திமான்கள் இந்நிலவுலகத்தி லுளரோ? (எ0)

முல்லை மணக்குங் குறிஞ்சி மணக்கு முனையுநெய்தற்
றொல்லை மணக்குந் துறைதா மணக்குஞ் சுருதிசொலு
மெல்லை மணக்கு மியற்றமிழ் வாய்மை யெலாமணக்கு
மல்லை யரும்பதி கூடலூர் காராளர் மண்டலமே. 71

முல்லை குறிஞ்சி நெய்தல் என்னும் திணைகளின் துறைகளிலும் வேதத் துறைகளிலும் இயற்றமிழ்ப் பாக்கள் பாடவல்ல கூடலூர்கிழார் பெரும்பதி காராளர் மண்டலத்தே யுளது.

மருதத்தே வசிக்கும் மாட்சிமையுள்ள பெரும்புலவர் ஏனைத் திணைகளின் இயற்கைத் தோற்றத்தையும் நலத்தையும் உள்ளவாறு கண்டு உவப்புறும் பேராற்றல் உடையராயினர் என்பதை எடுத்துரைத்தார். (எக)

ஆலியார் நாடு மரிசிற் பெருங்கிழா ராய்ந்ததனிச்
சூலியார் நாடும் பெருங்குன்றூர் நாடுந் துகளறுத்த
பாலியார் நாடென்ப வாதொண்டைப் பல்லவன் பாலித்ததால்
வாலியார் பாதாம் புயம்பணி காராளர் மண்டலமே. 72

ஆதொண்டைப் பல்லவன் என்னும் கங்கபல்லவ வேந்தன் அரசாண்டு வந்ததால் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய சிவபெருமானது பாத தாமரைகளை வணங்குதற் குரிய கார்மண்டலமானது ஆலியார் நாடும், அரிசிற்கிழார் நாடும், பெருங்குன்றூர் நாடும், அவற்றோடு பாலியார் நாடும் தன்னுள் அடக்கியது.

ஆதொண்டைப் பல்லவர் கங்கபல்லவ வரசர்; கார்நாட்டையும் தொண்டைநாட்டையும் சோழநாட்டின் வடபகுதியையும் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பாலிநாடு என்னும் பேரால் ஆண்டு வந்தவர். ஆனதுபற்றி ஆலியார்நாடாகிய சோழநாடும் அரிசில்கிழார் நாடாகிய கார்நாடும் ஆதொண்டைப் பல்லவன் ஆண்ட காலத்தில் கார்மண்டலமாகிய பாலியார்நாடாயிற்று என்றார். ஆலியாரும் அரிசில்கிழாரும் கார்காத்த வேளாளர். சூலியார்-சிவபெருமான். (எஉ)

கருவூர்க் கதப்பிள்ளை கந்தப்பன் பிள்ளை கருதலர்க்குச்
செருவூர்க் கிழார்பிள்ளை தீமை யெழாப்பிள்ளை சேரலர்தம்
முருவூர்க் கொருபிள்ளை யோர்சொல் புவியே மூவக்குமெனின்
மருவூர்த் தெரிந்துரைப் பாரெவர் காராளர் மண்டலமே. 73

காராளர்மண்டலத்துப் பழங் குடியாகிய கருவூர்க்கதப்பிள்ளை சாத்தனென்பான் கந்தப்பன் மகன், பகைவர்க்கு வைரிபோன்றவன், சற்குணன், தாம் வசிக்கும் அழகிய நகரமாகிய சேரலர் ஊருக்குப் புகழில் ஒருவனே யாகிய பிள்ளை. அவன் பாடிய ஓர் பாவே யேழுலகமும் மதிக்கும் என்றால் அவன் பெருமை யளந்துரைப்பார் யார்?

சேரலர் ஊர் - கருவூர். (எங)

உம்பல் பெருங்கா டுமெட்டூர் சிறுகா டுயரொருமை
யும்பல் பொதும்பில் நியமமக் காட்டூ ருவளகத்துத்
தும்பல் சிராப்பள்ளி நல்லாவூர் மாற்றூர் தொகுமருங்கூர்
வம்பல் கவிஞர் வழங்கிடங் காராளர் மண்டலமே. 74

உம்பற்பெருங்காடு உமட்டூர்ச் சிறுகாடு எருமையூர் மேலாகிய பொதும் பில்நியமம் காட்டூர் அந்தப்புரவாச யோக்கியமான உயிர்ப்பினையுடைய சிராப்பள்ளி நல்லாவூர் மாற்றூர் மருங்கூர் என்பன சிறந்த கவிவாணர்கள் கார்மண்டலத்து வதிந்த பெரும்பதிகளாம். (எச)

விட்டிலங் கும்பொழிற் கற்பக நாட்டு விபுதர்கிழா
ளிட்டிடை நூற்கிழாள் சேக்கிழாள் பாற்கட லீன்றகிழாள்
அட்டிலங் கும்புரம் வெல்கிழா ளின்சீ ரவனிபெற்றாள்
மட்டிலங் குங்கிழாள் நல்வெள்ளி காராளர் மண்டலமே. 75

நவரத்தினமும் ஒளிவிட்டு விளங்கும் கற்பகச் சோலையை யுடைய நாட்டுத் தேவர்கள் தலைவியாகிய இந்திராணி, சிற்றிடையையுடைய பனுவன் மடந்தையாகிய சரசுவதி, இடபவாகனத்தையுடைய உமாதேவி, திருப் பாற்கடலிற் றோன்றிய இலக்குமி தேவி, திரிபுரத்தை வென்ற துர்க்காதேவி இவர்கள் பெரும்புகழை யெல்லாம் ஒருங்கு பெற்றுப் புகழ்மாலையோடு விளங்கிய வேளாளர் பெண்மணி நல்வெள்ளிவீதியார் என்பவள் கார் மண்டலத்தவள்.

வெள்ளிவீதியார் அபிதானவிளக்கம் பார்க்க. (எரு)

மாவீர நாரா யணப்பெரு மன்னன்பொன் மன்றழகு
மாவீர மாச்செயப் பொன்னும் வழங்கி மலிதடநீர்
மாவீர நாரா யணப்பெயர் மன்ன வகுத்தனன்மல்
மாவீர னத்தி பொறித்தான்கல் காராளர் மண்டலமே. 76

கீர்த்திமானாகிய வீரநாராயணச் சோழன் சிதம்பரத்தில் அம்பலத்தைப் பொன் வேய்தற் பொருட்டாக வேண்டிய பொன்னையுந் தேடி யளித்து, பேரேரி யொன்றை அவன் பெயரால் அமைத்து, இவ்விவரங் கண்டு சிலா சாசனம் பொறித்தான் கார்மண்டலத்து வேளாளனாகிய அத்தி யென்பவன்.

வீரன் அத்தி என்னும் காராளச் சேனாபதி வீரநாராயணச் சோழன் பேரால் காட்டுமன்னார்குடிக்கு அருகில் பெரிய ஏரி யொன்றை யாக்கி, அச்சோழன் சிதம்பரத்துச் சபையைப் பொன் வேய்தற்கு வேண்டிய பொன்னைத் தேடி அளித்து அச்சோழன் பேராற் கல்வேட்டுக்களையும் பொறிப்பித்தான். (எசு)

8. மடநல்லார் மாட்சி.

வாழ்க்கைத் துணைநல மெய்யற மாதி வகுப்பனபல்
வாழ்க்கைத் துணைநலஞ் சொல்லற நாலெட்டின் மாண்பினநல்
வாழ்க்கைத் துணைநலம் புத்திரப் பேற்றின் வயங்குவவில்
வாழ்க்கைத் துணைநல மோங்குவை காராளர் மண்டலமே. 77

கார்மண்டலத்து வேள்மாள்கள் இல்லறத்தைச் செவ்வென நடத்தற்கேற்ற திறமும் இல்லாண்மைக்குரிய ௩௨ அறங்களையும் செய்தற்கேற்ற வன்மையும் புத்திரப்பேற்றிற்குரிய சதுரப்பாடும் உரியவர். இவைகளே உத்தம ஸ்திரீக்கு அமைய வேண்டிய மாட்சிகளாம்.

ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு முதலிய ௩௨ அறம். இவ்வறச் செயல்களைச் செய்தற் கேற்ற வாழ்க்கைத்துணைநலம் புதல்வர்ப்பேறு அமைந்தார் காராளமாதர் என மடநல்லார் மாட்சி கூறத் தொடங்கினர். கலியாணபுரத்துக்கு வடபாலும் தென்பாலும் வசித்த வேள்மாள்களுக்குத் தனயை தங்கை தாரம் தாய் என்னும் நால்வகை நிலைகளினும் உரிமையும் ஒழுக்கமும் சிறிது வேறுபாடாகக் காணப்பட்டமையின், அப்புரத்து அவையக்கோசர் (Jurists) முன்னிலையில் மிதாக்ஷரர் முதலியோர் இச்சீமாட்டிகளின் கடமை சுதந்தரங்களைப் பற்றித் தரும நூல்களுக்குப் பல வியாக்கியானங்கள் செய்துளர். இவற்றின்படியே இவர்களது உரிமை முதலியனவற்றை யாராய்ந் துணர்க. (எஎ)

களிற்றுக் கரமெனக் கார்சொரி யுந்தடக் காசினியிற்
குளித்தன்பு கூடல் சீரிதென் றேகவி கூறுமுறை
வெளிற்றன வாக விரும்புறுந் தார விழுநெறிக்கட்
களித்தகங் காட்டுவள் காரிகை காராளர் மண்டலமே. 78

கார்நாட்டில் அழகிற் சிறந்த வேளாளப் பெண்கள், யானையின் துதிக்கைபோலக் கார்மேகங்கள் நீர் சொரியும் பூமியில் தலைவன் தலைவிகள் ஒத்த அன்பினராய்க் காந்தருவமணஞ் செய்துகொள்வர் என்று கவிசிரேஷ்டர்கள் கூறும் மொழி வெற்றுரையாக, இளம்பருவத்தே தாரங்களாக தமக்குரியவர்களுக் கென்றே வளர்க்கப்பெற்று விவாகஞ் செய்துகொண்டு அன்பின் நெறியிலே இல்லற நெறியை நடத்தி வருவர்.

ஐந்து செய்யுளாற் கார்காத்த வேளாண்மாதர் இயல்பு கூறத்தொடங்கி, எஎ-வது செய்யுளில் இல்லற தருமங் கூறினர். இங்குத் தார லக்ஷணம் கூறு

வார். அஷ்டவித மணங்களாலும் வரித்தற்குரிய நாயகிகள் ஐந்து வகைப் படுவர். அவர் பத்தினி பாரியை தாரம் பிரஜாவதி ஜாயை யென்பார். த்ாரம் எனினும் பிதிர்கிருதை யெனினும் ஒக்கும். தந்தையாற் கொடுக்கப் பட்டவள் பத்தினி. நாயகனுல் தந்தை அநுமதிப்படி வரிக்கப்பட்டவள் பாரியை. வரனது தந்தையால் வளர்த்துத் தன் மகனுக்குக் கொடுக்கப் பட்டவள் தாரம். வரனுற் சுயம்வரிக்கப் பட்டவள் பிரஜாவதி. தானே சுயம் வரிப்பவள் ஜாயை. தந்தையின் ஸ்தானத்தில் அவன் கோத்திரத்தான் ஒருவனுயினும் வதூவின் மாமனுயினும் வளர்த்துக் கொடுக்கவும் படலாம். கார்காத்த வேளாளருள் தாரமுறையே அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சிறுபெண்ணுக இருக்கும்போதே தாய் மாமன் அப்பெண்ணைத் தன் கோத்திரத்தானுக்குக் கொடுக்க விளக்கீட்டுச் சடங்கால் எடுத்து வளர்த்துக் குழைச்சுமணி யணிவித்துப் பிறகு விவாகஞ்செய்து கொடுப்பன். இந்நெறியால் அப்பெண் தன் பர்த்தாவின் குடும்பத்திற்கு ஏற்ற நேர்மையிற் பழகி வளர்ந்து இல்லற தருமத்தையும் குடும்ப நிர்வாகத்தையும் தக்கவாறு நடத்தச் சக்தியுள்ளவ ளாகின்றுள். இஃது உசிதமுறையாகவே காணப்படுகின்றது. இன்றுங் காரைக்கட்டாருள் இவ்வழக்கங் காணலாகும். (எஅ)

கூந்தலம் பெண்பிடி சேர்நடை மாதர் குத்திவயிற்
காந்தழல் வேலிற் கடைந்த விழியினர் கங்குலடு
மேந்தவிர் பூங்குழல் சாயற் பெருமை யிசைப்பதெவன்
மாந்தளிர் மேனி மயிலினர் காராளர் மண்டலமே. 79

கார்மண்டலத்து வேள்மாள்கள் சாமுத்திரிகாலட்சணத்தை எடுத்துக் கூறுவது எவ்வாறு? நடையிற் பெண் யானையை ஒத்தவர்; உலகில் மிகுந்த அக்கினிமயமாகிய வேல் போலுங் கண்ணினை யுடையவர்? இருளையும் வென்று பூக்கள் செறிந்த கூந்தலை புடையவர்; மாந்தளிர் நிறத்து மேனியின் பெருமை மயிலன்னவர்; சாயலிற் பேரழகு பொருந்தியவர்.

மகளிரது இயற்கையழகும் நலமுங் கூறியவாறு. இனிச் செயற்கை நலங்கள் உணவின்வகை பூணின்வகை அப்பூணில் அமைக்கும் இரத்தின வகை உலோகவகை ஆடைவகை பூச்சுவகை சூட்டுவகை இயல்வகை இசைவகை நாடகவகை இல்லணிவகை முதலிய அநுபோகவகைகளை அமைக்கும் ஆற்றலான் உணரப்படும். பூஞ்சோலைகளை யாக்கவும் பூக் கொய்து தொடுத்தணியவும் காய்கனி கிழங்குவகைகளை யாக்குவிக்கவும் திருத்துவிக்கவும் ஏற்ற அறிவினையுடையராவர். பொழிலாட்டுப் புனலாட்டினும் வல்லுநராவர். (எகூ)

பேதைப் பருவம் பிறைதொழல் வேண்டலர் பெட்புறுமால்
காதற் சிறுவனைக் கைதொழல் வேண்டலர் கார்ச்சுகங்கோன்
மீதுற் றெறியலர் நாளெண் ணுதலிலர் வீச்சகுனம்
வாதுற் றறியலர் தாரத்தர் காராளர் மண்டலமே. 80

கார்மண்டலத்துச் சிறுமகளிர் பேதைப் பருவத்தில் பிறைதொழல் வேண்டிலர்; விரும்பத்தக்க திருமால் புதல்வனாகிய மன்மதனைக் கை தொழ வேண்டிலர்; அழகிய கிளியோட்டுதலைச் செய்யலர்; கோடிட்டு நாள் வரைகிலர்; புள்நிமித்தம் கேட்டறியலர். தார வொழுக்கத்தின்படி மணஞ் செய்துகொள்ளும் முறைமையினை உடையராதலால் தமக்கேற்ற கணவரைத் தருதல்வேண்டியும், பிரிவின்மையாற் கூடுதல்வேண்டியும் இவ்வொழுக்கநெறி வேண்டற் பாலரல்லர்.

அறுவகை இருதுக்களுக்கும் பொழுதுகளுக்கும் ஏற்ப ஆடை யுண்டி நடை பாவனை யமைந்தவராக, மங்கலச் சொற்களால் இன்னுரை கூறி அஷ்டமங்கலமும் தமது இல்லத்தின் அமைக்கப் பெரிய வலிமைகொண்டவராய் இனிய முகமலர்ச்சியோடு சோடசோபசாரங்களையும் செய்ய வலியராய் இன்பத்துறைகளை ஏற்ப அறிந்தோராய்ச் சப்தமாதர்களையும் பஞ்சகன்னிகைகளையும் இறைவனையும் துதிக்கத்தக்காராய் என்றும் தமது பர்த்தாவோடு கூடிவாழுஞ் சிறப்புடையர் என்க. தாரவொழுக்கத்தர்-தாரத்தர். (அ௦)

சிற்றிற் சமைப்பர் தடங்கா விரிநீர்த் திளைத்துநலப்
பற்றுற்று வண்டலம் பாவை பயில்வர் பணமணியின்
விற்றுற்ற நித்திலக் கோவை தொடுப்பர் நிலாமுற்றத்து
மற்றுற்ற வோரை யிசைப்பவர் காராளர் மண்டலமே. 81

கார்காத்த மண்டலத்துத் தமது நிலாமுற்றத்தின்கண் ஓரை என்னும் மகளிர் விளையாட்டைச் செய்யும் சிறுபெண்கள் சிறுவீடு கட்டிப் பெரிய காவிரிநதியில் எம்பாவாய் மூழ்கிப் பிரியத்தோடு வண்டலம்பாவை யயர்ந்து நாகரத்தினங்களின் இடையே ஒளிபொருந்திய முத்துக்களையும் கோத்துப் பொழுதுபோக்குவர்.

எண்ணல் எழுதல் இலைகிள்ளல் பூத்தொடுத்தல் யாழ்வாசித்தல் என்னுங் கைத்தொழிலினும், பீதம் கலவை வட்டிகை புலி யென்னும் சாந்துவகை கூட்டுதலினும், இலவம்பஞ்சு செம்பஞ்சி வெண்பஞ்சி மயிர் அன்னத்தூவி யென்னும் பஞ்சசயனம் அமைத்தலினும், இல்லாண்மைக் குரிய வன்மைகோடலினும் வல்லுநராகப் பயிலும் சிறுமகளிர் தரும நூலுள் மாதர்க்குக் கூறிய தருமம் தயாவிருத்திகளைக் கற்றுக் கேட்டுணர்ந்து பூஜோபகரணங்களை யமைக்கவும், தோத்திரங்களைக் கீதாங்க

முறையின் ஓதவும் கூடியவராய், நற்குணங்களாற் சிறந்து தத்தம் பருவங் களுக் கேற்ற தகுதி யுடையவராய்ப், பாவ புண்ணியந் தெரிந்தவராய்ப், பதுமினிகளாய், இரு பொருளினும் மிக்குப் பதினாறுபேறும் பெற்று வாழுமாறு சிறுவீடு கட்டி இவ்வாறு பொழுதுபோக்குவர். (அக)

---

9. வேளாளர் சாமானிய தருமம்.

தித்திக்குஞ் செந்தேன் பிலிற்றுங் குசேசயஞ் செங்குவளை
யெத்திக்கு நாறும் மருதத் தியலூ ரெழின்மயனூற்
பத்திக்கு மாடம் வளவிய மாளிகைப் பார்த்திவர்பால்
வத்திக்கும் வண்ணம் வதிபவர் காராளர் மண்டலமே. 82

காராளர் மண்டலத்தில் வேளாளர் இனிய செவ்விய தேன்சொரியும் தாமரை செங்குவளை எங்கும் பரிமணம் வீசும் மருதநிலத்தில் அழகிய மயனூர் செய்த சிற்பநூல் விதிப்படியே மாடங்களோடு கூடிய மாளிகைகளை வேந்தர் வசிக்கும் இடங்களுக்குப் பக்கத்தில் சுபகரம் விருத்தியாகும் வண்ணம் அமைத்துச் சுப முகூர்த்தத்திற் குடிபுகுந்து தானதருமங்கள் செய்து புத்திர மித்திர களத்திர பந்து ஜனங்களோடு வாழ்ந்து ஆதித்தியம் புரிந்து வருவர்.

அஉ-அஅ செய்யுள்கள் பொதுவாக வேளாளர் யாவர்க்கும் உரிய தன்மை கூறுவன. உரைப்பாயிரத்துட் காண்க. நான்கு நிலங்களினுஞ் சிறந்த மருதநிலத்துள்ள ஊர்களில் இவர்களுக்குத் திருமாளிகைகள் அமைக்கப்பெறும்; சிற்ப சாஸ்திர விதிப்படியே அவ் வளவுகள் அமைவன; கஜலக்ஷ்மி விலாசம் பொருந்தியவை. சிற்ப ரத்நாகரம் முதலிய நூல்களுள் இவ்விவரங் காண்க. ஆரியம் திராவிடம் வேசரம் என்பன சிற்ப வித்தைகள். இவற்றுட் பேதங்கள் பல விரிந்த நூலுட் காண்க. (அஉ)

ஞானக் கலையுணர் நான்மறை யந்தணர் நன்கியற்றும்
நானச் சடங்கு முரையா கமத்தி னவில்சடங்கு
மோனக் குரியபல் சூத்திரஞ் சொல்லு முறைச்சடங்கு
மானக் குலத்தார்க் குரியன காராளர் மண்டலமே. 83

கார்மண்டலத்து வேளாளர் என்னும் பெருங்குலத்தவர்க்கு, ஞான வித்தையை யுணர்தற்குக் காரணமாகிய நான்கு வேதங்களையும் அருத்த ஞானத்தோடு ஓதியுணர்ந்த பிராமணர்கள் செய்துவரும் உத்தம வைதிகச் சடங்குகளும், வேதபாஷியமாகிய திவ்வியாகமங்களிற் கூறிய சமயச்சடங்

குகளும், தமது வருணாசிரமங்கட்கு ஏற்ப விரதானுஷ்டானங்களை விளக்கும் கற்பசூத்திரங்களிற் கண்ட கிராஹ்ய சிரௌதச் சடங்குகளும் உரியன.

உரைப்பாயிரத்தை நோக்குக. சாதிச்சடங்குகளுக்குக் கிராஹ்ய சூத்திரங்களும் சிரௌத சூத்திரங்களும், சமயச் சடங்குகளுக்குச் சைவ வைணவ சுமார்த்த மாத்துவ பத்ததிகளும் அவரவர் நிலைக்கேற்ப அமைந்துள்ளன. ஆச்சிரம நிலையனைத்தும் தருமசாஸ்திர விதிப்படி இன்னோர்க்கமைந்தன. பிராமணாசாரணையையும் வைதிககர்மங்களையும் விட்டோமென்று சொல்லுவோரும் அந்தரங்கத்தில் இவ்வாசார முள்ளவர்களாகவே காணப் படுகின்றனர். (அரு)

திரைசெய் யமுதன்ன மாற்றமுந் தூய்மை செறியுளமும்
விரைசெய் பொறையுஞ் செயலுங் கொடையும் விருந்தோம்பலுந்
தரைசெய் தகுதியும் வாய்மையுந் தானமுந் தகைநலமும்
வரைசெய் புகழும் வளர்ப்பவர் காராளர் மண்டலமே. 84

கார்நாட்டு வேளாண் மாந்தர் திருப்பாற்கடலிற்றோன்றிய தேவாமுதம் போலும் சொற்களையும் பரிசுத்தம் வாய்ந்த மனப்பான்மையையும் கீர்த்தி விளங்கும் பொறுமையையும் நற்செயல்களையும் தருமங்களையும் விருந்தோம்பலையும் பூமிதிருத்திப் பெரும்போகம்விளைத்து ஏனைய மாந்தர்களைத் தாங்கும் ஆற்றலையும் சத்தியத்தையும் தானங்களையும் மனிதர்க்கின்றியமையாத சால்பு, தகுதி, நலம், யாவரும் மதித்தற்குரிய கீர்த்தி யாதியவற்றையும் வளர்ப்பர்.

கார்காத்தார் நற்குண நற்செயல்கள் கூறியவாறு. சாத்திரங்களின் தாற்பரியம் சம்பிரதாயத்தை யொட்டியே கொள்ளுதல் வேண்டுதலின் இவரது வழக்கங்கள் பற்றியே உண்மைநூல்களின் கருத்தையும் வேளாளரது பூர்வாசாரங்களையும் கண்டுகொள்ளல் வேண்டும். அவ்வாறன்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து நமது அறிவு சென்ற அளவிலே ஒருவித முடிவுக்குவந்து சமய வரம்பையும் சாதி வரம்பையும் அழித்தலாகாது; கட்டளை கோடித் திரியிற் கருதிய இட்டிகையுங் கோடும் அன்றோ? (அச)

கங்கைப் பெரும்புன லாடலுங் காவிரிக் கார்க்கலுடந்
துங்கச் சலிலந் துளைதலும் தூய்மைச் சுகம்பெறற்குத்
துங்கைக் கமலந் திளைத்தலும் பூசா துரந்தரரா
மங்கைப் பதியவர் மாண்பாகுங் காராளர் மண்டலமே. 85

கார்நாட்டில் திருமகள் பொலிவுறும் பெரும்பதிகளில் வாழும் பூஜா துரந்தரராகிய வேளாளரது மாண்பு கங்காஸ்நானஞ் செய்தலும் காவிரிநீர் மூழ்குதலும் துங்கபத்திரையில் ஸ்நானஞ்செய்தலும் பிறவுமாம்.

காராளர் இன்றும் இப்புண்ணிய நதிகளில் நியமத்தோடும் ஸ்நானஞ் செய்துவருகின்றனர். சோழதேசத்தவர் காவிரியிலும் நடுநாட்டவர் மணிமுத்தா நதியிலும் ஐப்பசி மாதத்தும் இதர புண்ணிய தினங்களிலும் ஆடுகின்றனர். ஒரேதினத்தில் மணிமுத்தாற்றின் ஒன்பது துறைகளிலும் புத்திர மித்திர களத்திராதியருடன் மூழ்குதல் வேண்டுமென்னும் கடப்பாடுடையவர். (அரு)

துப்பெதிர்ந் தாரைத் துரந்தவர் சேய்மையிற் றாயநட்புத்
துப்பெதிர்ந் தாரைப் புரப்பவ ராதலிற் றாயபிற
துப்பெதிர் மண்டலங் காப்பான் மறத்துத் துரிசறுப்பான்
துப்பெதிர்ந் தாடற் றுறையினர் காராளர் மண்டலமே. 86

கருநாடகதேசத்து வேளாளர் பகையோடெதிர்த்தவரை யடக்கலும், தூரத்தும் நட்புடையராயினோர்க்குத் துணைபுரிதலும், தேசபரிபாலனத்திற் செய்யுங்கடன் ஆதலால், தூய்மையும் பொலிவும் ஆர்ந்த பிறமண்டலங்களைக் காத்தற்பொருட்டும் மறநிலை யறம் பொருள் இன்பம் வீடு காரணமாதற் பொருட்டும் வலிமையோடு இச்செயல்களைப் புரிந்து வருவர்.

சிஷ்டபரிபாலனம் துஷ்டநிக்கிரகம் புரிதல் நான்மரபாயிற்று-வேள் புலவரசர் வைதிகம் சைவம் வைணவம் இவற்றை நிலைநாட்டக் குறும்பர் புரோசர் அருவாளரைத் தேர்ச்சிக்குள்ளாக்கி வேளிராகச்சிறந்து, சகரன் முதலெழுவரையும் அந்திமான்முதல் எழுவரையும் பாரிமுதல் எழுவரையும்போற் கொடைமடத்தின் விளங்கி, படை குடி கூழ் அமைச்சு நட்பு அரணங்கள்வகுக்க வல்லுநராகி, வேல் வாள் வில் தேர் பரி களிறு இவ்வாறு தானைக்குந் தலைமைபெற்று, ஓதல் பொருதல் புரத்தல் ஈதல் வேட்டல் படைபயிறல்களில் சிறந்தமை காண்க. (அசு)

அறம்பொரு ளின்பத் தடைதரும் வீட்டிற் கவனிமுற்றும்
புறம்பொரு ளாகப் புகழுந் திருவும் புணர்வதற்கு
நிறம்பொரு செங்கழு நீர்மாலை வேய்ந்து நிருபதுங்க
மறம்பொரு மாட்சி வயங்குவர் காராளர் மண்டலமே. 87

கார்நாட்டு வேளாளர் அறம் பொருள் இன்பந் துய்த்து அவற்றின் வாயிலாக வீட்டைப்பெறுதற்குப் பூலோகமெங்கும் புறப்பொருள் காரணமாகப் புகழுஞ் செல்வமும் உண்டாதற்கு நல்ல நிறந்தங்கிய செங்கழுநீர் மாலையை யணிந்து அரசருள் சிங்கம்போன்றவராய் மறத்துறை முற்றிய மாட்சிமை யுடையவராவர்.

அறநிலை யறமு மறநிலை யறமு - மறநிலைப்பொருளு மறநிலைப்பொருளு- மறநிலையின்பமு மறநிலையின்பமு - மறுவகைப் படுவ தரசியலென்ப.

வருணக் காப்பிற் பிறழா நெறிநிலை - பெறுதற் குரித்தாய்ப் பேணும் பெற்றி யறநிலை யறம். ஆனிரை மீட்டலு மரும்பகை தெறுதலு-மானமில் செஞ்சோற் றுதவியிலோரை - யீனஞ்செய்தலு மறநிலை யறம். நெறிவழி நின்று நெறியா லுழந்து பெறுபொருள் அறநிலைப்பொருள். அமருழந்து கொண்டவு மருந்திறை கொண்டவுந் தவறுசெய் தீமையோர் தண்டப் பொருளுங் கவர்சூதில் வென்றவு மறநிலைப்பொருள். ஒத்தகுலமு மொத்த வொழுக்கமும் மொத்த குணமு மொத்த வாயுளு மத்தகவுடைய தறநிலை யின்பம். எறு தழுவ லிலக்க மெய்தல் கூறுபொருள் கொடுத்தல் வலிதிற் கோடல் மாறுடை நிலையின் மறநிலையின்பம். (அஎ)

ஓதற்குக் காவற் குயரும் பொருளுக் குறுதுணைக்குத்
தூதிற்குத் துன்பந் துடைத்தற்கு மாதர்தந் துப்புறற்கு
காதற்குச் செப்பணி நண்ணற்கு நாற்றிசை நாடுவரான்
மாதற்க வாணர் மகிபாலர் காராளர் மண்டலமே. 88

காராளர் தமது மண்டலத்தில் சிறந்த தர்க்க முதலிய கலைகளிற் றேர்ந்து மகிதலம் புரந்து நியாய பரிபாலனஞ் செய்யவல்ல வேளாளர் ஓதற்பிரிவு பொருட்பிரிவு துணைவயிற்பிரிவு தூதிற்பிரிவு பகைதணித்தற் பிரிவு பரத்தையிற்பிரிவு இவற்றோடு சற்குருதரிசனஞ் செய்தற்பொருட்டு மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கும் பிரிவுகளிற் பிரிதல் செய்வர்.

இப்பிரிவுகளின் நோக்கத்தைத் தொல்காப்பிய வுரைகளுட் காண லாகும். (அஅ)

10. கார்காத்த வேளாள்ர் விசேஷலக்ஷணம்.

சிதாரி சேர்விழிச் செல்வி கனகந் திவள்வல்லியாம்
பிதிரொளி மாதேவி முன்னர்ப் பணிந்த பிரான்பதியுங்
குதலைக் குறுந்தொடி வாழாகன் சேடக் குளிர்சிலம்பும்
மதகரி வாணர் வணங்குவர் காராளர் மண்டலமே. 89

காராள மண்டலத்துக் கார்காத்த வேளாளர் கஜபதிகளானமையாற் செவ்வரி படர்ந்த கண்களையுடைய ஸ்ரீராமன் பௌத்திரியாகிய கனகவல்லி மாதேவி முன்னர்ப் பூசித்துவந்த சம்பத்குமாரன் எழுந்தருளிய திருநாரா யணபுரத்தையும், ஸ்ரீ பிராட்டி வாசஞ் செய்யும் திருமறு மார்பனாகிய ஸ்ரீநிவாசன் நின்ற திருக்கோலமாய் வீற்றிருந்தருளும் திருவேங்கடத்தை யும் வணங்குவர்.

அகூ முதல் கூரூ காறும் கூறுவன கார்காத்த வேளாளரது பழக்க வழக்கங்களும் பண்டைய அறவொழுக்கங்களும்; இவற்றை யுடையவரையே உண்மையான கார்காத்தாரென்று உணரல் வேண்டும். தொண்டை மண்டலத்தார் சோழமண்டலத்தார் சேரமண்டலத்தார் கொங்குமண்டலத்தார் முதலிய பிறமண்டல வேளாளரினின்றும் பிரித்துக் கார்மண்டலத்தாரை அறிதற்கு இவையே தக்க சான்றுவன. கனகவல்லியார் பூசித்ததும் வைரமுடி வைபவமும் அவற்றிற்கும் காராளர்க்குமுள்ள பொருத்தமும் மேலைக்கோட்டைப் புராணத்தானும் இவர்கள் அனுஷ்டானத்தானுங் கருதி யுணர்க. (அகூ)

கதம்படு வேகப் புனற்பொன்னி யாறுங் கனகமுத்தம்
நிதம்படு மாறுமவ் வச்சிர மாமுடி நீடளிப்பப்
பதம்பணி வேளிர் குலத்தவ ராடுவர் பண்பினகம்
மதம்படு மான்மதஞ் சேர்பொழிற் காராளர் மண்டலமே. 90

அரச யானைகளது மதச்சேற்றோடு மான்மதச்சேறும் கலந்த சோலைகளை யுடைய காராளர் மண்டலத்துக் கார்காத்த வேளாளர் மிக்க வேகத்தோடு பிரவகித்துவரும் காவிரியாற்றினும், பொன்னும் முத்தும் நித்தமும் இரு கரைகளிலும் சேர்க்கும் மணிமுத்தாற்றிலும், அவை வச்சிரமுடியை முற்காலத்து வழங்கினவாகையால் ஆடுவர். இவர் இறைவனது ஸ்ரீபாத சேவை செய்துவரும் வேளிர் குலத்தினராவர்.

திருப்பாற்கடலினின்றும் பெரிய திருவடி கொண்டுவந்த வைரமுடியின் சிரோவஜ்ஜிரம் மணிமுத்தாற்றில் விழுந்து பிறகு காராளரொருவரதனை யெடுத்துச் செல்வக்குமாரனுக்குத் திருநாராயணபுரத்திற் சேர்த்ததனிமித்தம் காராளர் யாவர்க்கும் எம்பெருமானாற் கொடுக்கப்பட்ட வரத்தின்படி இவ்வாற்றின் நீராடி இம்மை மறுமை வீட்டின்பங்களைத் தினைக்கின்றனர். இஃது புராணவரலாறும் பாரம்பரியமும் ஆம். (கூ0)

தழங்குபே ரோதைப் பெரும்புன லீன்ற தடங்குலச்சேய்
முழங்குறு சங்கம் முதற்படை யைந்தும் முழுமணியின்
வழங்கிய வெண்கரி நாமம் நவிற்றிப்பின் மாண்பணியும்
மழுங்கிய நீகம் புரந்தவர் காராளர் மண்டலமே. 91

தளைபட்ட மேகங்களைக் காத்த வேளாளரது மண்டலத்தில் ஒலிக்கின்ற மிக்க சப்தத்தையுடைய பெருநீர் மடந்தையாகிய கங்காதேவியார் பெற்ற சிறப்புவாய்ந்த குலத்துச் சிறுமகார் ஒலிக்கின்ற சங்கு முதலிய பஞ்சாயுதங்களையும் முழு ரத்தினத்தாற் செய்து ஐராவதத்தின் நாமங் கூறிப் பின் சிறப்பு அணிவர்.

விஷ்ணுவின் பஞ்சாயுதங்களையும் ஐராவதகணேசர் பேரால் சிறுவர்க்கு அணிவது காராளர் வழக்கம். கூஎ—வது செய்யுளிற்கண்ட சம்பவத்தைக் குறித்து ஐதிகமாக இச்சிறுவர்க்கு அணிவிக்கின்றனர். இஃது ஐதிஹ்யம். இந்திரன் மதுரையின் மேலேவிய மேகங்களைப் பாண்டியன் சிறை செய்ய, அவற்றைப் பிணைநின்று காராளனொருவன் விடுவித்தானென்பது புராணவரலாறு. இது போன்ற கார்காத்தார்க் குரிய சிறப்பிலக்கணங்களே யிந்நூலுட் கூறப்பட்டனவாயினும் வேளாளர்க்குப் பொதுவாக உரிய நாயன்மார்களது வைபவமும் ஆழ்வாராசாரியர் மான்மியமும் திருவாலங்காட்டுச் சிறுத்தொண்டர் வரலாறுஞ் சேர்த்து உணர்தல் வேண்டும். (கூக)

தூக்கிய பிச்சக் குடைநிழன் மாவூர்ந்து தூயமணி
வாக்கிய சோதியி னுகந் துலங்க வரிசைகொடு
நோக்கிய காருடை யாதியொன் பானும் நுவல்கலிங்க
மாக்கதிர் துன்னத் தரிப்பவர் காராளர் மண்டலமே. 92

கார்மண்டலத்து வேளாண் சிறுமக்கள் பிச்சத்தால் அலங்கரிக்கப் பட்ட பீலிக்குடை நிழலில் குதிரைமேல் ஏறிக்கொண்டு சுத்தமான நவரத்தினங்களின் பிரகாசம் மார்பின் விளங்கச் சகல விருதுகளோடும் யாவரும் நோக்கத்தக்க வண்ணம் காருடை முதலிய முற்பிதாக்களின் ஒன்பது கோத்திரத்தையும் காண்பிக்க அவ்வவ் விரத்தினம் பூண்பார் அவ்வவ் விரத்தினத்தின் நிறம் வாய்ந்த பட்டாடைகள் இடையில் மின்னத் தரித்து உலாப்போவர்.

இதுவும் கூஎ வது செய்யுள் விருத்தாந்தப்படி ஐதிஹ்யமாவது. காருடையார் குளத்துடையார் மாயலுடையார் வங்காரமுடையார் தென்னயமுடையார் தென்னவராயமுடையார் சாத்துக்குடையார் கூடலுடையார் ஆதிக்கமுடையார் என்னும் நவகோத்திரத்தாரும் முறையே நீலம் கோமேதகம் பவளம் புட்பராகம் மரகதம் மாணிக்கம் முத்து வைடூரியம் வைரம் என்னும் நவமணிமாலையையும் அம் மணிநிறங் கொண்ட ஆடையையும் அணிந்து இளம்பிராயத்து உலாப்போதுவர். (கூஉ)

மயிலன்ன சாயற் குயிலன்ன மாற்றம் மறுவில்குலத்
தயிலன்ன மன்னூர் விளக்கீடு காணத் தாணிமங்கை
புயலன்ன மாமன் புனையுங் குழைச்சிற் பொலிவர்கண்டீர்
மயிலன்ன வூர்தியர் வாழ்த்திடக் காராளர் மண்டலமே. 93

கார்மண்டலத்து வேளாண் சிறுமியர் மயில்போலும் சாயலும் குயில் போலும் இன்சொல்லும் குற்றமற்ற நற்குலத்திற் பிறந்த அன்னம் போலும்

நடையும் உடையராய்த் தமது கிருகத்திற் செய்யும் விளக்கீடு என்னும் திருமங்கலச் சடங்கைப் புரிந்து பூமிதேவியின் நாயகரும் மேகம்போலுங் கொடையினரும் ஆகிய தமது தாய்மாமன் புனைகின்ற குதைமணி என்னும் குழைச்சில் விளங்குவர்.

பேதைப் பருவத்துப் பெண்கள் விளக்கீடு என்னும் சுப சடங்கை இவ்வாறு செய்து பின்னர்ச் சாயைகளாக விளங்குவர். இச்சடங்கு மற்றை வேளாளப்பெண்கள் செய்வதில்லை. குழைச்சு, குதைமணி ஒரு பொருட்கிளவி. இதனை விளக்கீட்டினும் விவாக காலத்தினும் அணியும் முறையைக் கண்கூடாகக் கண்டறிக. (௯௩)

11. கலை, வித்தை, அரசு.

நிறைபொழித் தாதா வகுத்த மயனூல் நெறிவழிசால்
திறையமை மாடந் தடாகங் கருங்கற் றளிசுடுமண்
பிறைமுடி யார்க்கிட மோவியம் பாவை பிறங்குகலை
மறைமுதல் வித்தை வகைபல காராளர் மண்டலமே. 94

கார்மண்டலத்து விவேகிகள் வேதமுதல்வனாகிய இறைவன் வகுத்த சிற்ப நூற்படியே பூமியில் அமைக்கத்தக்க மாடம் தடாகம் கருங்கற்களாலுஞ் செங்கற்களாலும் ஆக்கப்பட்ட சிவாலயம் சித்திரம் பிரதிமை முதலிய நிர்மாணிக்கும் கலைகளிலும் வேதம் முதலிய அஷ்டாதச வித்தைகளிலும் வல்லுநராக இருப்பர்.

௯௪ - ௯௫ செய்யுள்களில் கலை வித்தைகளுட் சிறந்த நாகரிகமும் நகரமாந்தர் தாம் ஆதலின் அந் நகரவாழ்விற் கேற்பக்கலைத்தொழில்களையும், சிற்பத்தொழில்களையும், பஞ்சலோக வேலைகளையும், மரவேலைகளையும், சரிகை வேலைகளையும், பிறவற்றையும் விருத்திசெய்விக்கும் திறமையுங் கூறப்பட்டது. (௯௪)

பெருவிலை யாரம் பெருமுத் திழைத்த பெருங்கலம்வில்
லுருகெழு பஞ்சினும் பட்டினு மான்ற வுயர்கலைவான்
தருகெழு மண்டபஞ் சித்திர மானச் சமைப்பித்தனர்
மருகெழு தார்மிலை வள்ளியர் காராளர் மண்டலமே. 95

மணம் பொருந்திய மாலையை யணிந்த கார்மண்டலத்தார் பெருங்கொடைமடத்தால் விலையுயர்ந்த பொன்னாரம், முத்தாபரணம், காந்திமிக்க பஞ்சாலும் பட்டாலும் செய்த உயர்ந்த ஆடை, சோலைகளோடு சூழ்ந்த மண்டபம் சித்திரம் இவற்றைப் பெருமிதமாகச் செய்விப்பர்.

ஆடை ஆபரணாதிகளின் விசேட முறைத்தவாறு. அத்தொழிலை விருத்தி செய்விப்பர் இன்னாரென விளக்கினார். பணிகொள்வா ரிலரேற் பணிசெய்வாரு மிலராவர். இவர் விருத்திசெய்வித்த தொழில்கள் :— Cotton and silk fabrics, carpets (woollen), metal work, ivory and hornware, lacquer ware, pithwork, pottery, mat-making, lapidary work, wood carving, &c. (கரு)

கடுத்ததும் புங்கண்டன் காகுத்த னாதிக் கடவுளர்தம்
மடுத்ததும் பும்மலர் வாழ்த்தும் பனுவலை வாய்வழுத்தித்
தொடுத்தணி வீணையின் யாழின் வகுத்துத் துதிப்பலான்
மடுத்தறி யார்பிற வாச்சியங் காராளர் மண்டலமே. 96

காராளர் தமது மண்டலத்தில் விஷம் தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமான் திருமால் முதலியோரது பாத தாமரைகளை வாழ்த்தும் தோத்திரப்பாக்களை வாயாற் பாடி, மாலை தொடுத்து அணியப்பெற்ற வீணைகளிலும் யாழ்களிலும் அப்பண்களை வகுத்துத் துதிப்பாரே யன்றிப் பிறிதொரு வாத்தியங்களைப் பழகுதல் இலர்.

இசையாதிகளிற் காலம்போக்குமாறு கூறப்பட்டது. இன்னிசை வீணையையும் யாழையுங் கூறினாரேயன்றி யிதர குயிலுவத் தொழில்களைக் கூறினாரலர், குயிலுவத்தொழில் வேளாளர்க் கிலதாதலின். (கசு)

பொச்சங் கடிந்து புகழ்வார் தமகை புரிவினையை
நிச்சங் கனிந்து நிலைப்பரி சீந்து நிலைப்படுத்தி
யெச்சம் வழிவழி செய்யப் பலவா றியற்றுவிப்பர்
வச்சந் திருமகள் வாழ்மார்பர் காராளர் மண்டலமே. 97

தமது மண்டலத்து விளங்குங் கார்காத்த பூபாலர், திருமறுவும் திருமகளும் வாழும் மார்பினையுடைய திருமால் போல்பவராகலின், வஞ்சனையின்றித் தமது கையால் பல தொழில்களைச் செய்பவாது வேலைத்திறமையை நித்தியம் விரும்பி நிலைப்பரிசு அளித்து அத்தொழிலினரை ஸ்திரப்படுத்தி அவ்வத் தொழிலினர் பரம்பரையில் அவ்வத் தொழிலைச் செய்து வரத்தக்க பல ஏற்பாடுகளைச் செய்துவருவர்.

கைத்தொழிலை விருத்திசெய்யும் வண்ணம் கூறியபடி. (கஎ)

பற்றுந் திருவுஞ் செழிப்பவிஞ் ஞாலம் பலபடித்தாப்
பெற்றஞ் செழிப்ப வணிகஞ் செழிப்பப் பிறங்களவை
முற்றுஞ் செழிப்பப்பொாற் காணமுப் பஃக முழுவிலைப்பொான்
மற்றுஞ் செழிப்பக் கணிப்பவர் காராளர் மண்டலமே. 98

காராளர் தமது மண்டலத்துச் செல்வமும் பூவளமும் பசுவும் வாணிகமும் அளவுநிறைகளும் பொற்காசுகளும் உப்பும் அஃகமும் முழுவிலைப் பொன்னும் யாவும் செழிப்பக் கணித்து வருவர்.

வைசியப்பிராய ரானமையால் வர்த்தகத்தும் வாணிபத்தும் தலைநின்றார். வியாபாரத்துறைக் கேற்ற தொழிற்கொள்ளுதலும் கூலி கொடுத்தலும் விலையேற்படுத்தலும் பண்டம்பரிமாறுதலும் நாணகம் உண்டாக்கலும் நோட்டக்காரராதலும் வேளாளரைப் பொறுத்தன. நால்வகை யளவுகருவிகளும் நாட்டகத்து நிர்ணயிப்பா ரிவரே. காலகணிதமும் இவரைப் பொறுத்தனவே. உப்பு என்றமையால் ஆளுஞ் சரக்கு அறுபத்து நான்கையும், அஃகம் என்றமையால் தானியவகை கூலவகை யனைத்தையுங் கொள்க. (கூஅ)

தாழ்குழன் மாதர் தழைத்தபல் லாயந் தராதிபர்க்கு
வீழ்குடி நற்குடி வேளாண் விராவி விரும்பவையங்
காழ்மணி வாருண மன்றந் துவாதசக் காணிமுறை
வாழ்குந ராக வயந்தருங் காராளர் மண்டலமே. 99

காராளர் மண்டலத்துப் பெருங்குடி பெண்மக்களது ஆயமும், வீழ்குடியும் நற்குடியும் கூடிய அவையமும், ஊர் மன்றமும், துவாதச காணி முறையும் ஆகத் திருவுற்றுத் திகழும்.

அரசியற்றுறை யங்கங்க ளொவ்வொன்றினும் இவர் பட்டமும் அதிகாரமும் பெற்று அரச சின்னம் தாங்கி நீதி நியாயபரிபாலனம் புரிந்துவந்தனர்.

---

12. வாழ்த்து.

இருமுது மக்கள் குரவோ ரிளையோ ரினத்தவரைத்
தருவுறழ் வண்கிளை செல்வந் தலவளந் தாரணிபாற்
பருவா னீக்கும் பெருமித மூக்கப் பயன்பெறுவர்
மருமலர்க் கங்கை குலம்வாழி காராளர் மண்டலமே. 100

தாய் தந்தை குருமார் இளைஞர் இனத்தவர் கிளைஞர் இன்னாது செல்வம் நிலவளம் அவ்வளத்தாற் கலியை மாற்றும் பெருமிதம் ஊக்கம் பயன் இவற்றைப் பெற்றுக் காராளர் மண்டலத்தின்கண் மணம் பொருந்திய மலர் மாலையை அணிந்த கங்கை குலம் வாழ்க.

கங்கைகுலத்துக் கார்காத்த வேளாளர் பந்து மித்திர குடும்ப சமேதராய்ச் சகல சம்பத்தும் பெற்றுப் பெருவாழ்வு பெறுவரென வாழ்த்துக்கூறுகின்றார். சுபம். (ள)

கார்மண்டல சதகம் முற்றும்.

III

1. கார்மண்டலச் சிறப்பு.

மண்டலச்சீர்.

கொங்கு மணக்கு மோர்பக்கல் குருக்கார் மணக்கு மோர்பக்கல்
தெங்கு மணக்கு மோர்பக்கல் திகழுந் தொண்டை யோர்பக்கல்
நுங்கு மணக்கு மோர்பக்கல் நுவலுங் கடம்பா மோர்பக்கல்
கங்கர் மணக்குந் தழைவனத்துக் கார்மண் டலச்சீ ரீதாமே. 1

கார்மண்டலத்தின் ஓர் பக்கம் பூந்தாது மரங்களும் ஓர் பக்கம் இளைய ஆத்திமரமும் ஓர்பக்கம் தென்னைமரமும் ஓர் பக்கம் விளங்கும் தொண்டைச்செடியும் ஓர் பக்கம் நுங்கு தரும் பனைமரமும் ஓர் பக்கம் யாவரும் கூறும் கடம்பும் மணம் தருவன. தனது பக்கத்தில் வாசனை வீசும் தழைகள் செறிந்த வனத்தை யுடைய கார்மண்டலத்தின் சிறப்பு இஃதாம்.

கங்கை வமிசத்தவர் சிறந்து விளங்குந் தழைவனம் என்னும் திருநகரத்தையுடைய கார்நாட்டின் பக்கங்களில் கொங்கு சோழம் கேரளம் தொண்டை சேரம் கடம்பம் என்னும் நாடுகள் சூழ்ந்திருப்பன என்பது மற்றோர் பொருள். இந்நாடுகளுக்கு நடுநாயகமாவது கார்மண்டலம். (க)

தாது பொருளா மோர்நாடு தனக்குத் தானே நிகராகும்
ஓது மூலப் பொருளாலே யுயரு நாடு மொன்றுளது
சாது சீவப் பொருளாலே சதுரங் கொள்ளு மோர்நாடு
சேது வனைய மூன்றுலுந் திகழுங் கார்னா டீதாமே. 2

ஓர் தேசமானது தாதுப்பொருள் ஒன்றனையே உடையதாகித் தனக்குத்தானே யொப்பாகும். யாவரும் எடுத்துக்கூறும் மூலப்பொருளால் மற்றோர் தேசமானது ஓங்கும். மேன்மை வாய்ந்த சீவப்பொருளால் வேறோர் தேசமானது நாகரீகத்திற் சிறக்கும். கார்நாடானது புண்ணிய தீர்த்தத்தையும் திருவிராமேச்சுரத்தையும் போலப் புனிதத்தைத் தருவனவாயும், நீரைப் புறத்தே புகவிடாது காக்குஞ் செய்கரையைப் போல பிரசைகளைப் புறத்தே செலவிடாது காக்கும் திறத்தனவாயுமுள்ள இந்த மூன்று பொருள்களையும் உடைமையால் விளக்கமுறுவதாகும். அந்நாட்டின் வளம் இன்னபடியாம்.

கார்மண்டலத்துத் தாது மூலம் ஜீவன் என்னும் முப்பொருள்களும் அம்மண்டலத்தின் மூன்று பகுதியவாகிய நாடுகளில் விஸ்தாரமாகக்

கிடைப்பன. குவளாலபுரத்துப் பக்கலிற் பொன்னுதியேழும், காவிரி ஹேமாவதி முதலிய நதிதீரங்களில் மூலப்பொருள்களும், மலைநாட்டுப் பிரதேசத்தில் ஜீவப்பொருளும் கிடைப்பன. (உ)

ஆற்று நீரா லாம்நாட்டி லிடையும் போக மொன்றேபா
மூற்று நீரா லாம்நாட்டி லுதவும் வளமு மொன்றேயாம்
வேற்று நீரா லாம்நாட்டில் விளையும் பலனு மொன்றேயாங்
காற்று முந்நீர் வளம்பெருகுங் கார்நா டதன்சீ ரீதாமே. 3

ஆற்றுநீரால் வளம்பெருகும் நாட்டில் அந்நீரால் ஆகும் பயன் ஒன்றேயாகும். ஊற்றுநீரால் ஆகும் நாட்டில் உண்டாகும் பயன் ஒன்றேயாகும். வேற்று நீராற் செழிக்கும் நாட்டில் விளையும் பயன் ஒன்றேயாகும். வளத்தைப் பொழிவிக்கின்ற இந்த மூன்று நீர்வளமும் கார்நாட்டிற் பெருகும்; அந்நாட்டின் வளம் இன்னபடியாம்.

காராளர் ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர்களாற் பூவளத்தை மிகுவிப்பவராதலின் ஒவ்வோர் நீர்வளஞ் செறிந்த பிறமண்டலங்களிற் புகுந்து அம் மண்டலங்களை இம்மூன்று நீராலும் வளம்பெருகுவிக்க ஏற்ற சாதனங்களைச் செய்து வருகின்றனர் என்பதாம். இவ்வாறு பிறமண்டலங்களுட் புக்குச் சாதனங்களை யமைத்துச் சிறப்பித்துக் கார்காத்த வேளாளர் சிறந்தமையை நூலுட் காண்க.

ஊற்றுநீர்—Spring-heads talpargis, Series of reservoirs-kere, kola, kunte etc. (௩)

செங்கோ லேந்து மோர்கரமே சிறுகோ லேந்து மோர்கரமே
அங்கோ லஞ்சே ராகரமே யணைவார்க் கென்று மாகரமே
சங்கோ லிடுவ தோர்கரமே சாமம் பயில்வ தோர்கரமே
கங்கோ லஞ்செய் காராளர் கார்மண் டலச்சீ ரீதாமே. 4

காராளர் ஓர்வகையின் வைதிக சம்ஸ்காரங்களைப் பெற்று மன்னர்களாய்ச் செங்கோ லேந்துவர்; மற்றோர் முறையில் உழுதுண்ணும் வேளாளராய்ச் சிறுகோல் ஏந்துவர்; உழுவித்துண்பாரும் உழுதுண்பார்பாற் படுவர். அவர் இருப்பிடமாகிய இல்லங்கள் அழகிய செய்தொழி லமைந்தன; அவை அவர்களைச் சார்வார்களுக்கு உறைவிடமாக வுள. அவர்கள் திருமாலின் வழித்தோன்றல்களாதலின் ஓர் கையில் பாஞ்சசன்னியம் விளங்கப் பெறுவர்; மற்றும் வைதிகச் சடங்கு புரியுங்கால் வேதமந்திரங்களை ஓதுவாராதலின் ஆதித்த கிரணம் விளங்கப் பெறுவர். விண்ணுலகையும் விளக்கஞ் செய்யும் கார்காத்த வேளாளரது கார்மண்டலத்துப் பெருமை இஃதாம். (௪)

திருவந் துவக்குந் தேர்நிலயஞ் செந்நூற் கிழத்தி சேர்நிலயந்
தருவந் தளிர்க்கு மாராமந் தடஞ்சார் மதிலு மாராம
முருவந் திகழுங் காராள ருவக்கு மடவார் காராளர்
மருவந் துலவு மண்டலமும் முடிச்சோ ழன்றன் மண்டலமே. 5

திருமகள் என்றும் வந்து களிப்பதும் இந்திரவிழாச் செய்யுங்காலையின் தேவர்களது விமானங்கள் வந்து தங்குவதுமாகிய மருதநிலமானது சரசுவதி வீற்றிருக்கும் நிலையிடமாகும். புண்ணிய விருட்சங்கள் தளிர்க்கின்ற சோலைகள் விசாலம் பொருந்திய மதிலைச்சேர்ந்த பூஞ்சோலைகளாகும். உருவில் மன்மதனையும் முருகனையும் ஒத்த காராளர் விரும்பும் தரும பத்தினிகள் மேகம்போலும் கொடையை யுடையராவர். தென்றல் காற்றுச் சந்தன மணத்தைக் கொண்டுவந்து வீசுங் கார்மண்டலமானது மும்முடிச் சோழ மண்டல மெனப்படும்.

மும்முடிச் சோழ மண்டல மானதை நூலுட் காண்க. (ரு)

பூவிரி பொழிலுடைப் புனித வாவியும்
பூவிரி சேலினம் புரளு மேரியுங்
காவிரி கன்னலங் காட்டிற் கால்களுங்
காவிரி நாட்டிடைக் காண லாகுமே. 6

பலநிற மலர்கள் செறிந்த பொழில்களையுடைய புனித தீர்த்தங்களும், அழகிய சேல் மச்சங்கள் புரளுகின்ற ஏரிகளும், சோலைகளாகப் பரந்த கரும்பின் காட்டில் ஓடுகின்ற கால்வாய்களும் காவிரிநாட்டிற் காணலாகும்.

காவிரி நதியின் இருகரையுஞ் செறிந்த நாடு கார்நாடானதாற் காவிரி நாடு என்ப. (சு)

2. குருபரன் வாழ்த்து.

பூரண னாரண புரத்து மேவுறும்
நாரணன் மலர்ப்பதம் நவிற்று நாவினு
னேரணக் கலையுரை யியற்று மாதவன்
காரணக் கழல்களென் கருத்தின் வாழியே. 7

பரிபூரணரும் திருநாராயணபுரத்து எழுந்தருளி யிருப்பவருமாகிய செல்வப்பிள்ளையின் தாமரை மலர்போன்ற திருப்பதங்களை யனவரதந் துதிக்கும் நாவினரும் அளவை நூலுக்குச் சிறந்த வுரையாசிரியருமாகிய

மாதவன் என்னும் நாமத்தையுடைய எனது குருபாரது என் துன்பங்களை நீக்குதற்குக் காரணமாகிய பாதங்கள் என் மனத்தின்கண் என்றும் நிலை பெற்று வாழ்வனவாக.

நூலாசிரியர் தமது குருவாகிய திருநாராயணபுரத்து மாதவ யோகிகளைத் துதித்தவாறு. (எ)

---

3. நூலாசிரியர் வாழ்த்து.

அடியுக்தர் இயற்றியது.

கார்காத்த வேளாளர் கார்மண் டலசதகம்
பேர்காத்த வாறைகிழான் பேசினு—னேர்காத்த
மாதவன் மாதவன் மாண்கழல் வாழ்த்திய
வாதவன் வாழ்க வவன். 8

ஸ்ரீ லக்ஷ்மிகாந்தனது செவ்விய பதமலர்களை வாழ்த்திய சூரியன் போன்றவனும், தன் சிறப்பொழுக்கத்தைக் காத்த மாதவயோகியினது சிறந்த பாதங்களைச் சூடி விளங்கும் பரிதி போன்றவனும், கீர்த்தி மிக்கவனுமாகிய ஆறைகிழான் என்னும் பெரும் புலவன் கார்காத்த வேளாளரது கருதற்கரிய கருணையொழுக்கங்களைக் கவின்பெறக் காட்டும் கார்மண்டல சதகம் என்னும் இந்நூலை இயற்றினன். அக்கிழான் என்றும் வாழ்க.

கூடலூர்கிழார் அரிசிற்கிழார் சேக்கிழார் என்பனபோல ஆறைகிழார் என்னப்பட்ட திவர் நாமம், ஆறை யென்பது ஒருரும் நாடும் ஆகும். ஆறைநாடு கொங்குமண்டலத்து இருபத்துநான்கு நாடுகளுள் ஒன்று. இந்நாட்டுச் சேவூர் பேரூர் அவிநாசி திருமுருகன்பூண்டி கூடலூர் முதலிய நகரங்கள் சரித்திரசம்பந்தமாக விளங்கும் புண்ணிய ஸ்தலங்கள். இவற்றுள் இந்நூலாசிரியர் அவிநாசியிற் பிறந்தவர், கொங்குமண்டல வேளாளர். தமது ஆசிரியர் கார்மண்டல வேளாளராதலின், அவர் மரபினரின் மாட்சியை இந்நூலுட் கூறி வாழ்ந்தனர். (அ)

காவிரிப்பாவை வாழ்க.

அபிதான விளக்கம்.

அதியன் (கார் - 66) இவன் அதியமா னெடுமானஞ்சி, நெடுமிடல், அதிகன், எழினி, அஞ்சி யெனப்படுவன்; இவன தியற்பெயர் நெடுமிடலாதல், அஞ்சியாதல் வேண்டும்; இவன் ஊர் (கார்மண்டலத்திற்) சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தகடூர்; மலை குதிரைமலை; இவன் காரகத்தில் வசித்த மழவர்களுக்குத் தலைவன்; பேர்பெற்ற வீரன்; கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் முன்னோர் அதிகர்எழினியோர். இவர் சோழவேளிராயினும் சேரவேளிரோடு நெடுங்காலம் உறவுகொண்டவர்; சைவப் பற்றுடையவர்; தேவருலகினின்றும் கரும்பைக் கொண்டுவந்தவர்; தேவர்கள் இவர் நாட்டிலுள்ள ஓர் சோலையில் வந்து இவர்க்கு வரந் தருவர். இவ்வதியன் ஒருகால் எழரசர்களை எதிர்த்து வெற்றி பெற்றவன்; இவன் தனக்குரிய பனைமாலையுடன் வெட்சியும், வேங்கையும், எழிலாஞ் சனையும் வெற்றியின் காரணமாக அணிந்தான்; இவன் தான் அரிதிற் பெற்ற கருநெல்லிக் கனியை ஒளவையாருக் கீந்து அவளை நெடுநாள் சீவித்திருக்கச் செய்தான்; இவன் திருக்கோவலூரை ஜயித்தபின், அதன் தலை வணங்கிய திருமுடிக்காரி பெருஞ்சேர விரும்பொறையை அடுத்து, அவன் கருத்தின்படிக் கொல்லிமலையை வல்வில்லோரி வசமிருந்து ஜயித்துக் கொடுத்துப், பின் அச்சேரனுதவியால் இவனை யெதிர்க்க, அப்போரில் இவன் சோழபாண்டியர்கள் உதவிபெற்றிருந்தும் யானை யெறிந்த வேல் பட்டிறந்தான்; சிலர் வளவன் ஏவிய ஓர் மறவனாற் பல் பிடுங்கப்பட்டுப், பாழிக்கண்ணே மிஞிலியால் கொல்லப்பட்டானென்று கூறுவர்; இவனைப் பாடியவர் ஒளவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார், நாகையார் எனப் பலர்; ஒளவையார் இவனுக்காகத் தொண்டைமானிடம் தூதும் சென்றிருக்கின்றார்; இவன் வழிவந்த புலவர் அதியன், விண்ணத்தனார்; நல்லெழினி முதலியோர்; இவன் மகன் பொகுட்டெழினி; இவன் பின்னோர் அதிகர் என்ற பெயருடன் பதின்மூன்றும் நூற்றாண்டின் பின்னரும் சிற்றரசராக இருந்து வந்தனர். (புறம்-87-104, 122, 158, 206, 208, 230-232, 235, 310, 315, 390, 392; அகம்-105,115, 142, 162, 181, 208, 209, 211, 325, 352, 372; நற்-381; தொல் - பொரு - 62, உரை; பதிற்-8-ம்பதிகம்; நெடுஞ்சடையன் பட்டயம்; புகழ்ச்சோழ நாயனார் புராணம்; கொங்குமண்டல சதகம்-42, 80; விடுகாதழகிய பெருமான் சாசனம்.)

அரிசில் கிழார் (கார் - 72):—இவர் கார்காத்த வேளாளர். இவரூர் கார்மண்டலத்து மேற்பால் மைசூர் ஸமஸ்தானத்துள்ளது. அம்மண்டலத்துக் கீழ்பால் உய்யக்கொண்டான் வளநாட்டு அரியிலிலும் இவர்க்குக் கிழமை யிருந்தது. கண்ணகியைப் பேகனோடு சேர்த்தல்வேண்டி இவர் அவனைப் பாடியுள்ளார். அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியின் பிரிவாற்றாது வருந்தினர். தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையிடம் பெரும்பொருள் பரிசில் பெற்றதுமன்றி அவனது மந்திரியு மானவர்; திருவள்ளுவ மாலையில் ஒரு வெண்பாவையும், தகடூர் யாத்திரையிலும், பதிற்றுப்பத்திலும், புறநானூற்றிலும் சில பாடல்களையும் பாடினர். இவருடனிருந்த புலவர் கபிலர், பரணர், பெருங்குன்றூர் கிழார், பொன்முடியார் முதலியோர். கடைச்சங்கப்புலவருள் இவர் ஒருவராதல் வேண்டும். (புறம்-146, 230, 281, 285, 300, 342 ; தொல். மரபு. 74 ; புறத்திணையியல் 8, 12, நச் ; பதிற்-பத்து 8.)

அன்னி (கார் - 67):—இவன் அன்னிகுடியில் வசித்த உதாரமும் வீரமும் பொருந்திய வேள் ; எவ்வி யென்பா னடக்கவு மடங்காமல் குறுக்கையிலிருந்த புன்னைமரத்தை வெட்டி வீழ்த்தியபோது அதற்குரிய அழுந்தூர்த் திதியனால் குறுக்கைப் பறந்தலையிற் கொல்லப்பட்டான். இவன் மகள் மிஞிலி தன் தந்தையின் கண்ணைப் பறித்த ஊர்முதுகோசரைக் கொல்லுவிக்கக் கருதிக், கலத்து உண்ணாமலும், வெள்ளிய வஸ்திர முடாமலும், தான் கொண்ட சினக்கோலத்தை மாற்றாமலு மிருந்து, குறும்பியன், திதியன் இவர்களைக்கொண்டு கோசரைக் கொல்லுவித்துத் தன் விரதத்தை முடித்தாள். இவ்விருத்தாந்தங் கூறுவோர் வெள்ளிவீதியார், நக்கீரர், கயமனார், பரணர் முதலியோர். (அகம்-45, 126, 145, 186, 262 ; நற்-180.)

ஆலியார் (கார் - 72):—இவர் திருவாலியிற் பிறந்தவர்; சிறந்த வீரர், பெரும்புலவர். (புறம்-298.)

இருங்கோவேண்மான் (கார் - 66):—இவன் யதுவின் மரபைச் சேர்ந்து, முனிவர் யாக குண்டத்திற் றோன்றித், துவராபதியினின்றும் துவாரசமுத்திரத்துக்கு வந்து, அரசுபுரிந்தவன் ; முனிவர் ஒருவரைக் கொல்லவந்த புலியைக் கொன்று புலிகடிமால்க ளென்றும், ஹொய்சள வேளாளரென்றும் கூறப்படும் சிறந்த வமிசத்துளொருவன். கபிலர் வேண்டவும் வேள் பாரியின் பெண்களை மணக்க மறுத்தான்; சிறந்த போர் வீரனாயினும் தலையாலங்கானத்துப் போரில் நெடுஞ்செழியனாற் கொல்லப் பட்டான். இவனைப் பாடியவர் நக்கீரர். (புறம்-201.)

இளங்கோசர் (கார் - 69):—இவர் தமிழை ஆதரித்தவர் ; நல்ல மனமுடையவர்; அவையமுல்லையர்; நியாயமன்றத் தலைவர்; அரசர்க் குற்றுழித்

தூதுபோவோர் ; பெரும்போர்த் துறைநிற்போர் ; விழுப் புண்ணணிந் தவர்; இவருள் ஒரு குழுவினர் மிக்க வீரராய் நாலூர்க்கோசரென்று பெயர் பெறுவர் ; மற்றொரு குழுவினர் கொங்குநாட்டினை ஆண்டிருக் கின்றனர் ; பத்தினித் தெய்வத்தையும் முறைப்படி வணங்கியிருக்கின் றனர். இவர்களிற் சிலர் அன்னியின் கண்களைக் களைந்ததனால் பின் அவன் மகள் மிஞிலியின் முயற்சியால் திதியனாலும், குறும்பியனாலும் கொல் லப்பட்டனர். பொலம்பூட் சென்னியோடு பொருத கோசரும் இவரும் ஓர் இனத்தவர். (அகம்-15, 90, 113, 196, 205, 216, 251, 262.)

உமட்டூர் கிழார் (கார் - 74):—இவர் வேளாண்மரபைச் சேர்ந்த பெரும்புலவர்; இவர் மகனார் பரங்கொன்றனார். மோரியரையும், ஆய் என் னும் வள்ளலையும் பாடியுள்ளார். (அகம்-69.)

உம்பற் காட்டிளங் கண்ணனார் (கார் - 74):—சேரநாடடு உம்பற் காட்டி லிருந்தவர். பெரும் புலவர். (அகம்-264.)

எருமையூரன் (கார் - 74):—இவன் குடநாட்டு எருமையூரையும், வடுகநாட்டையும் ஆண்ட வரசன் ; ஐம்பெரு வேளிரு ளொருவன் ; இவன் நிரைகவருஞ் சிறப்புப் புலவரால் பாராட்டப்பட்டது. தலையாலங்கானத் துப் போரில் நெடுஞ்செழியனால் கொல்லப்பட்டான் ; இவனைப் பாடியவர் நக்கீரர், மாமூலர். (அகம் 36,115,253.)

எவ்வி (கார் - 66):—இவன் நீடூர் கிழவனெனவும் படுவன் ; உழுவித் துண்ணும் வேளாளன் ; மிழலைக் கூற்றத்துக் காவிரி நாட்டையும், முத்தூ ரையும், நீழல் என்னும் நெய்தல் நாட்டையும் ஆண்டவன் ; மிகுந்த கொடையாளி ; திதியனது காவன் மரத்தைக் கடிதல் வேண்டாமென்று அன்னிக்குப் புத்தி புகட்டினவன் ; தலையானங்கானப் போரில் நெடுஞ் செழியனால் கொல்லப்பட்டான். இவனைப் பாடியவர் மாங்குடிகிழார், கபிலர், வெள்ளெருக்கிலையார். (குறுந்.19 ; அகம்-115, 126, 266, 366.)

கங்கர் (கார் - 31):—இவ்வரசர் 11-வது நூற்றாண்டின் தொடக் கத்தில் சோழவரசர் ஆட்சிக் குள்ளானபிறகு பற்பல சிற்றரசர்க ளாகப் பற்பல இடங்களில் அரசுபுரிந்து வந்தனர். அவருள் ஒரு கிளைஞர் குவளாலபுரத்தில் அரசுபுரிந்து வந்தனர். அன்னாருள் சீய கங்கனும் ஒருவன் ; இவன் குவளாலபுர பரமேசுவரன், நந்திகிரி நாதன், அமராபரணன், சீயகங்கன், திருவேகம்பன், என வழங்கப்படுவன். இவன் மனைவி அமராபரண சீயகங்கனம்பிராட்டியான அரியபிள்ளை. இவன் குவளாலபுரத்தில் மூன்றாங் குலோத்துங்கனுக்குக்கீழ் (கி. பி. 1178-1216) அரசாண்டான். இவன் இராஜ்யம் கார்மண்டலமும், கொங்கு மண்டலமும், தொண்டைமண்டலமுமாம். இவன் காஞ்சிபுரத்திலும் இவன் மனைவி திருவல்லத்திலும் நந்தாவிளக்கு வைத்தனர் (கி.பி.

1205-1212 சாசனம்). இவன் முடிகொண்ட சோழமண்டலத்துக் கங்கை கொண்ட சோழவளநாட்டுக் கங்கபாடியான தென்கரையிடைநாட்டுப் பெரியநாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்துச் சன்மதி முனிவரது புத்திரரும் ஞானபுத்திரருமான பவணந்தியைக் கொண்டு நன்னூல் செய்வித்தனன். இவன் முன்னோர் ஆதன் அவநீதன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்; மணிமேகலை, ஐங்குறுநூறு, கலிங்கத்துப் பரணி முதலிய நூல்களுள் குறிக்கப்பட்ட கங்கராவர். பல்லவர் காஞ்சிபுரத்திலிருந்து 9-10-வது நூற்றாண்டில் கார்மண்டலத்தின் இப்பகுதியைக் கைப்பற்றி யாண்டனர்; ஆதலின் ஜனநாதபுரத்தைத் தொண்டைமண்டல சதகத்துஞ் சேர்க்கப்பட்டது. (அன்றியும் தொண்டைநாட்டில் அப்பெயரோடு ஒரூரும் நிர்மாணிக்கப்பட்டது. இச்சனநாதபுரம் கொங்குமண்டலம் பிரிக்கப்பட்டபோது அம்மண்டலத்துக் குறும்புநாட்டிற் சேர்க்கப்பட்டது). நன்னூலாசிரியராகிய பவணந்தி முனிவர் வேறு, வள்ளிமலைக் குகைச் சாசனத்திற் குறித்துள்ள பாணராயர் குருகளப்ப பவணந்தி பட்டாரகர் வேறு. முன்னவர் காராளராகிய ஜைனர், பின்னவர் மகாபலிபாணராகிய ஜைனர். பாணாதி ராஜர்கள் இப்பிரதேசத்தில் பல பகுதிகளில் 4-ம் நூற்றாண்டு தொடங்கிப் 10-ம் நூற்றாண்டுவரை ஆண்டு வந்தனர்.

கங்கன் (கார்-68):—இவன் சேரனது படைத்தலைவன்; கழுமலத்தில் பெரும்பூட் சென்னியால் வெல்லப்பட்டான். (அகம். 44, 45, 54-56)

கருவூர்க் கதப்பிள்ளை (கார்- 73):—இவருடைய ஊர் கருவூர்; பாண்டியனுடைய வீரர் ; நாஞ்சில் வள்ளுவனென்பானைப் பாடியுள்ளார். (இவர் மகனார் கருவூர்க்கதப்பிள்ளை சாத்தனார். (புறம்-168, 380; அகம் 309.)

காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் (கார் - 74):—இவர் வேளாளர் ; சீயாழி தாலுக்காவிலுள்ள காட்டூரில் வசித்தவர்; தொண்டைமானிளந்திரையனையும் அவனது வேங்கட மலையையும் பாடியுள்ளார். (அகம்-85.)

குன்றம்பூதனார் (கார் - 70)—இவர் பெரும் புலவர் ; பரங்குன்றத்து முருகக் கடவுள்மேல் அன்போடு பல பாடல்கள் செய்திருக்கின்றார். (பரிபாடல்-xiv.)

கூடலூர்கிழார் (கார் -71):—இவர் மலைநாட்டுக் கூடலூரில் இருந்தவர் ; பெரும்புலவர் ; தம்மைக் காக்கும் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இன்னநாளில் இறந்து படுவானென ஓர் விண்மீன் வீட்சிகொண்டுணர்ந்தன ராகலின் இவர் கணிதத்திலும் வல்லுநராதல்வேண்டும் ; ஐங்குறுநூறு தொகுத்தவர் ; இவர்காலத்துப் புலவர்

குறுங்கோழியூர்கிழார், பொருந்திலிளங்கீரனர். மதுரைக் கூடலூர் கிழாரென்பவர் இவரின் வேறு. (புறம்-229; குறுந்-166, 167, 214.)

நல்லாவூர்கிழார் (கார் -74):—இவர் வேளாளர்; முற்காலத்து வது வைச்சடங்கை நன்குபாடியுள்ளார்; பெரும் புலவர். (அகம்-86, நற்-154.)

நன்னன்வேண்மான் (கார் -66):—இவன் நன்னன் உதியன் என் றுங் கூறப்படுவான்; இவன் (தேவாரம்பெற்ற விச்சிமலையின் தலைவனாகிய) விச்சிக்கோவின் முன்னோன்; இவன் மலை எழிற்குன்றம், பாழிச்சிலம்பு, புறம்புமலை; ஊர் வியலூர், பாழிநகர், பாரம்; இவன் பெரும்பூட்சென்னி யையும், பிண்டனையும், ஆய் எயினனையும், பாழியாங்கண் மிஞிலி அதிக னென்பவனையும் கொன்று சீர்த்திபடைத்தவன்; பெருங் கொடையாளி; இவன் முடிவில் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் அரசனால் பெருந்துறைச் செருவில் கொல்லப்பட்டான். இவனைப் பாடியவர் பெருந்தலைச் சாத்தனர்; இவன் மகன் நன்னன் இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனரால் மலைபடுகடாத்துட் பாடப்பட் டவன்; இவன் நாடு தொண்டைநாட்டுப் பல்குன்றக் கோட்டம்; நகர் செங்கண்மா; மலை நவிரமலை; ஆறு சேயாறு; இவன் பத்தினி மகா உத்தமி; கொண்கானத்து நன்னன் தேவர் பொருட்டாகவும், முனிவர் பொருட் டாகவும் வைத்த சோலையின் கனியை ஓர் சிறுபெண் கவர்ந்துகொண்டா ளாக அவள் பெற்றோர் பெரும்பொருள் கொடுப்பதாகக் கூறியும் மறுத்துத் தண்டித்துப் பெரும்புகழ் பெற்றவன். (அகம்-15, 44, 97, 142, 152, 173, 199, 208, 258, 262, 349, 356, 392, 396, புறம்-151; குறுந்-292; மலைபடுகடாம்.)

பெருங்குன்றூர்கிழார் (கார் -66):—இவர் வேளாளர்; பெரும்புல வர்; இவர் சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் புகழ்ந் தும் இவன் தமயன் குடக்கோச்சேரலிரும்பொறையை இகழ்ந்தும் பாடிய தோடு, பேகனையும், சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியை யும், பாடியுள்ளார். இவர் காலத்திருந்த புலவர் சிறுமேதாவியார், சேந் தம்பூதனர், அறிவுடையானர், இளந்திருமாறனர், மதுரையாசிரியர் நல் லந்துவனர், மருதனிளநாகனர், கணக்காயனர் மகனர் நக்கீரனர், பரணர் முதலியோர். (புறம்-210, 211, 147, 266, நற்-5, 119, 347, 112, குறுந்; பதிற்றுப் பத்து).

பெருநள்ளி (கார் -66):—இவன் கண்டீரக்கோப்பெருநள்ளி, கண் டிற்கோப் பெருநள்ளியெனவும் கூறப்படுவன்; இவன் நாடு மலைநாடும் காட்டுநாடும்; மலை தோட்டிமலை; கடை யெழுவள்ளல்களில் ஒருவன். இவ னைப் பாடியவர் வன்பரணர், பெருந்தலைச் சாத்தனர், நத்தத்தனர் முதலி யோர். (அகம். 152, 238; புறம்-148, 149, 150; சிறுபாணாற்-103-7.)

போதும்பில் கிழான் வெண்கண்ணனார் (*கார் -74*):—*இவர் ஊர் பாண்டிநாட்டுப் பொதும்பு; வேளாண் மரபினர், பெரும் புலவர்.* (*அகம்*-130, 192.)

போதும்பிற் புல்லாளங் கண்ணியார் :—*இவர் பெண்பாலார், பெரும்புலவர், ஊர் வெண்கண்ணனார் ஊராகிய பொதும்பு.* (*அகம்* 154.)

நொச்சிநியமங்கிழார் :—*இவர் நொச்சி நீயங்கிழாரெனவுங் கூறப் படுவர்; இவர் ஊர் நொச்சிநியமம்; வேளாண் மரபினர், பெரும்புலவர், இக் காலத்து மறைந்தொழிந்த பூக்கோட் காஞ்சி யியற்றியவர்.* (*அகம்*-92, *புறம்* 293, *நற்*-17, 208, 209.)

மருங்கூரர் (*கார்*-74):—*இவர் காரகத்து மருங்கூரில் வசித்த ஓர் புலவர்; இம்மருங்கூர் சோழநாட்டின்கண்ணுள்ளதும் பாண்டிநாட்டின் கண்ணுள்ளதுமான மருங்கூருக்கு வேறு.* (*அகம்*- 80)

மாற்றூர்கிழார் மகனார் கோற்றங் கோற்றனார் (*கார்* -74):— *இவர் வேளாளர்; பெரும்புலவர்.* (*அகம்* 54.)

வெள்ளி வீதியார் (*கார்* -75):—*இவர் நல்லிசைப் புலமை மெல்லி யாருட் சிறந்தவர்; ஔவையாரால் பாராட்டப் பெற்றவர்; தம் கணவன் பாற் பற்றுடையவர்; ஆதிமந்தியாரது கற்புடைமையைச் சிறப்பித் துள்ளார் திதியனையும் வானவரம்பனையும் வெற்றிகொண்ட அன்னியையும், திருவள் ளுவரையும் புகழ்ந்து பாடியவர்.* (*அகம்*-45, 147, 362. *வள்-மா.* 23.)

அநுபந்தம்.

கார்காத்தார் கோத்திரங்கள்.

(சூசனத்துள் விவரம் காண்க.)

உடை.

(உடையார்-Lords)

1. அங்கத்துடை
2. அங்கருடை
3. அரங்குடை
4. அரியலுடை
5. அன்னபுடை
6. ஆணங்குடை
7. ஆதிக்கமுடை
8. ஆனைக்குடை
9. இட்டவுடை
10. இலைறயருடை
11. உலகுடை
12. எருக்குடை
13. எருமலுடை
14. கடம்புடை
15. கருப்புக்குடை
16. கருவாருடை
17. களத்துடை
18. காமனுடை
19. காருடை
20. குணமங்கலுடை
21. குமாரக்குடை
22. குவாவுடை
23. குழிமடையுடை
24. குளத்துடை
25. குறைமுடை
26. கூடலுடை
27. கூனுடை
28. கொத்தனுடை
29. கொழுமுடை
30. சணமுடை
31. சாத்தனுடை
32. சாத்தாருடை
33. சாத்துக்குடை
34. சேவுடை
35. சோமலுடை
36. ததீயனுடை
37. தனவாருடை
38. திட்டத்துடை
39. திரஞ்சேருடை
40. திரமுடை
41. துலானுடை
42. தொருக்குவாருடை
43. தொழுவுடை
44. நாரணக்குடை
45. நாலத்துக்குடை
46. நிம்மலுடை
47. நெடுவாருடை
48. நெருப்புக்குடை
49. பரியுடை
50. பனையுடை
51. பாக்குமுடை
52. பாலுடை
53. பூதாமுடை
54. பூவனுடை
55. பெண்ணுமுடை
56. மஞ்சளுடை
57. மணக்குடை
58. மணலுடை
59. மருங்குடை
60. மாயனுடை
61. மாருடை
62. மானக்குடை

63. ராயலுடை
64. வங்காருடை
65. வயலாருடை
66. வழுதாவுடை
67. விச்சுடை
68. வியன்குடை
69. விரானக்குடை
70. வெஞ்சருடை
71. வேளாருடை

திரை.

(திரையர், தரையர்-Earls)

72. இட்டதிரை
73. இல்லத்திரை
74. சீனித்திரை
75. செம்புதிரை
76. சேவுதிரை
77. சேளுதிரை
78. தீவித்திரை
79. தெள்ளவளத்திரை
80. பாவைதிரை
81. மழுவதிரை
82. மூளையதிரை
83. விரலித்திரை
84. விழுப்பத்திரை

ராயர்.

(Dukes)

85. அச்சுதராயன்
86. கலியுகராயன்
87. காளிங்கராயன்
88. குருவிராயன்
89. கொங்கராயன்
90. கோமலிங்கராயன்
91. சேராயன்
92. திளத்தராயன்
93. தெள்ளவராயன்
94. பல்லவராயன்
95. மீனவராயன்
96. வழுதிராயன்
97. விரையராயன்
98. வில்வராயன்

பிறர்

(Viceroyalty, militia)

99. களப்பாளன்
100. தெள்ளப்பிரியன்

முதலியவை.